2904

T.N.L.A. Debates

Official Report

Vol XVII    No 3

29th January 1986


211, 31 N86
N86.17.3
136448

953/86

Issued: 21-8-1986

வெளியீடு: 21-8-1986

2901

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜனவரி 29, 1986 - தொகுதி XVII எண். 3

**Wednesday the January 29, 1986,—Volume XVII No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

**Legislative Assembly, Secretariat, Fort St. George,**

**Madras-600 009**

[விலை ரூ 3.00 காசுகள்]

[Price Rs. 3.00 Paise

V2|| , 31 || 2
N86 . 17 . 3
ஆவணக்காப்பக ... சென்னை-600 008
136448

## உள்ளடக்கம்

**29–1–1986**


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | கவன ஈர்ப்புகள் — | |
| (அ) | மட்டாம் பகுதியில் குடிநீர் குழாய்கள் புதுப்பிக்கப் பெறவேண்டிய நிலை குறித்து. | 357–358 |
| (ஆ) | சென்னை குடிநீரில் அசுத்தநீர் கலந்ததால் பலர் நோய்வாய்ப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து. | 359–362 |
| (இ) | இராணிப்பேட்டை தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் பாலாற்றில் விடப்பெறுவது குறித்து. | 362–365 |
| (ஈ) | போடிநாயக்கனூர் அரசினர் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல ஆவணங்கள் எரிந்து போனது குறித்து. | 365–368 |
| (உ) | பாலக்கோடு அரசு மருத்துவமனையைச் செப்பனிடவேண்டிய அவசியம் குறித்து. | 368–370 |
| (ஊ) | திருச்சி மாவட்டம் மருங்காபுரி தொகுதியில் மூளைக் காய்ச்சல், வாந்தி போன்ற நோயினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து. | 370–371 |
| (எ) | திருவொற்றியூர்–பொன்னேரி பஞ்செட்டி நெடுஞ்சாலையில் கொசஸ்தலையார் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணி குறித்து. | 371–372 |
| (ஏ) | நிலுவையிலுள்ள முன்னறிவிப்புகளை குறித்தும் மற்றவை குறித்தும். | 475–477 |
| 2. | அறிக்கைகள் அளித்தல் — | |
| (அ) | பொது நிறுவனங்கள் குழு. | 372–373 |
| (ஆ) | பொதுக் கணக்குக் குழு | 373 |
| (இ) | சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 373 |
| (ஈ) | செய்தித் தாள்களில் '...தவான் போனவர்கள்' என்ற தலைப்பில் வந்துள்ள செய்தியில் தம் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு திரு . இராமசாமி அவர்களின் விளக்க அறிக்கை. | 438–429 |

பக்கங்கள்.

(உ) உள்ளாட்சித் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை. — 429

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு 1986. — 374–375

(ஆ) நில அளவை எல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1986. — 375

(இ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1986. — 375

(ஈ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு 1986. — 375–412

(உ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1986. — 412

(ஊ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1986. — 413–427

(எ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986. — 429–438

(ஏ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986. — 438–458

(ஐ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு 1986. — 458

(ஒ) கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1986. — 459–460

(ஓ) மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருள்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன்வடிவு 1985. — 461–471

4. அரசினர் தீர்மானங்கள் —

(அ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம். — 413

(ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல். — 478

2901 பக்கங்கள்.

5. அறிவிப்புகள்—

(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.) — 413

(ஆ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே.செ.). — 474–475

(இ) கவன ஈர்ப்புகளுக்கான அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறுதல். — 475

6. பேரவை முன் வைக்கப்பெற்ற சில ஏடுகளுக்கான திருத்தங்கள். — 471–474

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். — 478 481

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## 1986, ஜனவரி 29, புதன்கிழமை.

## தை 16, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்."

நல்ல அறிஞரின் அவையில் நல்ல பொருளை, கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்ல முடியாதவர், பல நூல்களைக் கற்றாலும் பயன் இல்லாதவரே.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

### I. கவன ஈர்ப்புகள்.

### (அ) முட்டம் பகுதியில் குடிநீர்க் குழாய்கள் புதுப்பிக்கப் பெற வேண்டிய நிலை குறித்து.

திரு. எஸ். எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முட்டம் பகுதியில் குடிநீர் குழாய்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காக மிகவும் அல்லலுறும் நிலைமையை நீக்குவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, குருத்தன் கோடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முட்டம் கிராமத்திற்கு 6,000 லிட்டர் கொள்ளளவுள்ள கீழ்நிலை நீர் தேக்கத்திலிருந்து 10 பொதுக்குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்

பட்டு செயலில் இருந்து வருகிறது. இக்கிராமம் கடலோரத்தில் உள்ளதால் குழாய்கள் அமைத்தும் குறுகிய காலத்திலேயே நீர்க் கசிவுகள் ஏற்படுகின்றன. இவ்வாறு ஏற்படும் நீர்க் கசிவுகளை அவ்வப்போது சரி செய்து தண்ணீர் விநியோகம் தடைபடாமல் செய்யப்பட்டு வருகிறது. ரூ. 9.14 லட்சம் செலவில் முட்டம் கிராமத்தில் கூடுதலாக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் புதிய குழாய்கள் பதித்து, கூடுதலாக ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்டவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டமிடப்பட்டு தொடர்ந்து பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படும்போது முட்டம் கிராமத்தில் நிரந்தரமாக குடிநீர் தட்டுப்பாடின்றி கிடைக்கும். மேலும் குடிநீர் பணிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு நடப்பு ஆண்டிற்கு ரூ. 179.30 லட்சம் கூடுதலாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து பழுதடைந்துள்ள எல்லா குடிநீர் பணிகளும் விரைவில் சரி செய்யப்பட்டுவிடும்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டு செயலில் இருந்து வரும் முட்டம் பகுதியில் உள்ள குழாய்கள் அனைத்தும் இப்பொழுது பழுதடைந்துள்ளன. நீர்க் கசிவைத் தடுப்பதற்காக ஒரு பக்கத்தில் குழாய்களைப் பழுது பார்த்தால் மறுபக்கத்தில் உடைப்பு ஏற்படுகிறது. முட்டம் பகுதியில் தற்போதுள்ள நிலைமைகளைப் பொறுத்தவரையில் போடப்பட்டுள்ள குழாய்களில் தண்ணீரே வருவதில்லை. உடைப்புகளைச் சரி செய்யாத காரணத்தினால் குழாயிலிருந்து நீர் ஊற்றாகத் தண்ணீர் வீணாகப் பாய்ந்து பூமிக்கு அடியில் கொண்டிருக்கிறது. ஆகவே, தற்போதுள்ள குழாய்களை அப்புறப்படுத்திவிட்டு, புதிய குழாய்களையாவது இணைக்க வேண்டும் என்ற அப்பகுதி மக்களின் நீண்ட நெடுநாளைய கோரிக்கையை மனதிற்கொண்டு, அப்பகுதி மக்களின் நலன் கருதி, போர்க்கால அடிப்படையில், உடனடியாகச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இவைகளையெல்லாம் முறைப்படி ஆய்ந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டம் கிராமத்திற்கு என்று ரூ. 9.14 இலட்சம் செலவில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்ட திட்டமிடப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். இத்திட்டத்திற்கான செலவான



ரூ. 9.14 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா? சென்ற ஆண்டே நிறைவேற்றப்பட வேண்டிய இத்திட்டம் மிகக் காலந் தாழ்ந்திருக்கிறது. எனவே, அப்பகுதி மக்களின் நலன் கருதி எப்பொழுது இந்தப் பணி தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, விரைவில் தொடங்கும்.

(ஆ) சென்னை குடிநீரில் அசுத்த நீர் கலந்ததால் பலர் நோய்வாய்ப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, ப. சோமசுந்தரம், பரிதி இளம்வழுதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் சமீபத்தில் குடிநீரில் அசுத்த நீர் கலந்ததால் ஏற்பட்ட நோயினால் ஒரு சிலர் மரணமடைந்ததும், பல பேருடைய உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் பின்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

சென்னை மாநகரில் குடிநீரில் அசுத்த நீர் கலந்ததால் ஏற்பட்ட நோயினால் சிலர் மரணமடைந்தனர் என்ற புகாரினையொட்டி மாநகராட்சி ஆணையர், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மற்றும் நிர்வாக இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் ஆகியோர் தொடர்பு கொள்ளப்பட்டனர். சென்னை நகரின் குடிநீரில் அசுத்த நீர் கலந்ததற்கு உரிய மருத்துவ ஆய்வுச்சான்று இல்லை. சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீர், குடிநீர் வாரியத்தால் கவனத்துடன் பராமரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. பொது சுகாதாரத்துறையைச் சார்ந்த கிண்டியிலுள்ள [illegible] நீர் [illegible] பரிசோதிக்கப்படுகிறது. கடந்த நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினையொட்டி வழங்கப்படும் குடிநீரின் சிறப்பு மாதிரிகள் எடுக்கப்பட்டு

சோதிக்கப்பட்டன. சோதனை அறிக்கையிலிருந்து வழங்கப்படும் குடிநீரின் தன்மை பொதுவாக திருப்திகரமாக உள்ளது என அறிய வருகிறது. சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கடந்த வெள்ளத்தின் காரணமாக அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய திங்களில் சென்னை மாநகரில் வாந்திபேதி, மற்றும் குடல் அழற்சி நோயினால் (Acute gastro-Enteritis) பாதிக்கப்பட்டோர், இறந்தோர் பற்றி அளிக்கப்பட்ட விவரங்கள் கீழ்வருமாறு :—

| மாதம். | | வாந்தி பேதி. | | குடல் அழற்சி நோய். | |
|---|---|---|---|---|---|
| | | பாதிப்பு. | இறப்பு. | பாதிப்பு. | இறப்பு. |
| அக்டோபர், | 1985 | 150 | 1 | 181 | 1 |
| நவம்பர், | 1985 | 206 | 1 | 343 | 4 |
| டிசம்பர், | 1985 | 71 | 1 | 253 | 4 |

மேற்சொன்ன விவரங்களின்படி, மூன்று மாத காலத்தில், வாந்தி பேதி நோயினால் மூன்று நபர்களும், குடல் அழற்சி நோயினால் ஒன்பது நபர்களும் மரணமடைந்திருந்தாலும் சென்னை நகரைப் போன்ற பெரிய மாநகரத்தில், இந்நோய்களினால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கையானது இயல்பு மீறியது என எண்ணி விடக்கூடாது. சாதாரணமாக ஒவ்வொரு வருடமும் பருவ மழையின் காரணமாக அக்டோபர் மாதத் துவக்கத்திலிருந்து வாந்தி பேதிக்கு காரணமாக இருக்கும் வளைவுக் கிருமிகள் (Vibrio cholera) மிக செயலாக்கத்துடன் காணப்படுவதால், இந் நாட்களில் கொள்ளை நோய் ரீதியாக பார்க்கையில், இந்நோய் களினால் எற்படும் விளைவுகள் அதிகமாக இருக்கும். இவ் விளைவுகள் குடிநீரின் கலப்படத் தன்மையால் ஏற்படுவதில்லை. அவ்வாறின்றி, குடிநீரில் அசுத்தநீர் கலப்படம் இருந்திருப்பின், சென்னை நகரம் போன்ற பெரிய மாநகரத்தில் ஆயிரக்கணக் கானோர் உயிர் இழக்க நேர்ந்திருக்கும் என்றும், மேலும் இந் நிலைமை கட்டுக்கடங்காமல் போயிருக்கக்கூடும் என்ற கருத்தினை பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் தெரிவித்திருக்கிறார். சமீபத்தில் காலரா தடுப்பு ஊசி சென்னையில் 1,72,000 நபர்களுக்கு போடப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக சென்னை நகரில் லெப்ரோஸ் பிரோசிஸ் (Leprospirosis) என்ற நோயின் விளைவாக 20 நபர்கள் மரணமடைந்தனர் என்று 24-12-1985-ம் தேதிய 'இந்து' நாளிதழில் வெளியாகிய செய்தி தவறானது. இந்நோயின் காரணமாக மரணமடைந்ததாக மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் பதிவாக்கப்படவில்லை.



சென்னை நகரில் வழங்கப்படும் குடிநீர், பொது சுகாதாரத் துறை, சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்களால் கண்ணும் கருத்துமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. சென்னை நகரமெங்கும் வழங்கப்படும் குடிநீரின் சுகாதாரத் தன்மையை காக்கும் பொருட்டு வேண்டிய குளோரின் வாயுவினை தேவைக் கேற்ப கலந்து பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே சென்னை நகர மக்களுக்கு நன்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரினையே மிகவும் கவனத்துடன் வழங்கப்பட்டு வருகிறது என்றும் குடி நீரின் சுகாதாரத்தன்மை எவ்விதத்திலும் கெடாமல் இருக்க அரசு எல்லாவித நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதுகுறித்து யாரும் பீதியோ பயமோ அடையவேண்டியதில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீர் வடிகால் வாரியம் மாநகராட்சியிடம் உள்ளது கழிவு நீர் அகற்று வாரியம் தனியாக உள்ளது. இந்த இரண்டையும் ஒன்றாக்கி விட்டால்தான் சுகாதாரத்தையும் பாதுகாக்கமுடியும், குடிநீரும் அசுத்தம் அடையாமல் பாதுகாக்க முடியும். இதனை ஒரே துறையிடம் ஒப்படைக்க, மாண்புமிகு தமிழக முதல்வரிடம் ஆலோசனை செய்து, மாண்புமிகு அமைச்சர் ஒரே துறையாக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மானியக் கோரிக்கையில் எழுப்ப வேண்டிய கொள்கைப் பிரச்சனையை ஒரு கவன ஈர்ப்பில் கேள்வியின் மூலமாக எழுப்பு கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியம் பொறுத்தவரையிலே, தனியாகத்தான் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், சென்னை யிலே, பெருநகரக் குடிநீர் வாரியம் என்று, 'மெட்ரோ வாட்டர்' என்று தனியாக இயங்கி வருகிறது. அது மிகச் சிறப்பான வகையிலே, நல்ல வகையிலே இயங்கி வருகிறது. நம்முடைய நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் பிரச்சனைகள் ஏதாவது வந்தால், உடனடியாக, கவனிப்பதற்குப் போதுமான ஸ்டாப்கள் இருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது இந்த வாரியங்களை இணைத்து, ஒரே அதிகாரியின்கீழ் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லையென்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் கழிவுநீர் கூட, குழாய் நீரில் கலக்கிறது. நானே பார்த்திருக்கிறேன். அது மட்டுமல்ல, என் தொகுதியில் கூட, குழாய் நீரில் கெரோசின் எண்ணெய் கலக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, மெட்ரோ வாட்டர் துறைக்கு முறையான தகவல் தந்து, சரியான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக, இதுபோன்ற பிரச்னைகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே மிகத் தெளிவாக ஒரு கருத்து கூறப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் இங்கே சொல்கின்ற அளவுக்கு நிலைமைகள் இருந்திருக்குமானால், இந்த அளவோடு கட்டுப்படுத்தியிருக்க முடியாது. அது பெரிய அளவுக்கு வெடித்திருக்கும் என்று டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் சொல்லியிருக்கக்கூடிய கருத்து கூட விவர அறிக்கையில் இருக்கிறது. ஆகவே, பாதிப்பு எவ்வளவு என்று பார்க்கிற நேரத்திலே, கடந்த அக்டோபர் மாதத்திலே ஒன்றும், நவம்பர் மாதத்திலே ஒன்றும், டிசம்பர் மாதத்திலே ஒன்றும், ஆக மொத்தம் 3 பேர்கள் வாந்திபேதி —— காலரா —— காரணமாக இறந்திருக்கிறார்கள். குடல் அழற்சி —— Gastro enteritis —— காரணமாக 9 பேர்கள், இந்த 3 மாதங்களிலே இறந்திருக்கிறார்கள். இயற்கையாக, ஆண்டுதோறும் இந்த 3 மாதங்களில் வரக்கூடிய இறப்புப் புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சரிசமமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் காரணங்களைக் காட்டி, இப்படி இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. அதே நேரத்திலே, இரண்டும் கலக்கிறது என்று சொன்னார்கள். ஒரு யோசனையை, இந்த நேரத்திலே சொல்வதற்கு விரும்புகிறேன். தண்ணீர் நமக்கு, ஷார்ட் கட் மெத்தட்—ஆக வரவேண்டுமென்பதற்காக, சிலர் ஆழமாகத் தோண்டி, குழாயை இறக்கி வைக்கிறார்கள். அது சரியான நிலைமையை உண்டாக்காது. நான் கூட பூங்கா நகர் தொகுதியிலே பல இடங்களிலே பார்த்திருக்கிறேன். இப்பொழுது கூட சென்னையிலே பல பேர்கள், கொசப்பேட்டை போன்ற பகுதிகளிலே செய்கிறார்கள். அப்படிச் செய்வது தவறு. அது ஒரு நல்ல நிலைமை அல்ல. அதைக் கொஞ்சம் தவிர்க்கவேண்டுமென்று மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

**(இ) இராணிப்பேட்டை தோல் தொழிற்சாலைகளின் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் பாலாற்றில் விடப்பெறுவது குறித்து.**

**திரு. என். சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராணிப்பேட்டையிலுள்ள தோல் தொழிற்சாலைகளின் கழிவு நீர் பாலாற்றில் விடப்படுவதால், காவேரிப்பாக்கம் ஏரியிலிருந்து பாசனம் பெறும் நிலம் மற்றும் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:



**அறிக்கை.**

இராணிப்பேட்டையில் ஏறக்குறைய இருபது தோல் பதனிடும் தொழிற்சாலைகள், "சிப்காட் மற்றும் சிட்கோ" தொழில் வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. மற்றவை பழைய திருத்தணிச்சாலை, பிஞ்சிச்சாலை மற்றும் சென்னை–பெங்களூர் சாலையில் அமைந்துள்ளன.

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டப் பிரிவுகள் 25 மற்றும் 26-ன் படி புதிய மற்றும் ஏற்கனவே செயலிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவுநீரை நீரோடைகள், கிணறு, வடிகால் மற்றும் நிலத்தில் வெளியேற்ற வாரியத்தின் அனுமதி பெறவேண்டும்.

இராணிப்பேட்டைப் பகுதியிலிருந்து 97 தோல் பதனிடும் தொழிற்சாலைகள், 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டப் பிரிவு 25 மற்றும் 26-ன் கீழ் அன்றாடக் கழிவு நீரை/தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுவதற்காக வாரியத்தின் அனுமதி வேண்டி விண்ணப்பித்திருக்கின்றன. வாரியம் நிர்ணயித்துள்ள தரத்திற்குட்பட்டுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு செய்ய கால வரையறை நிர்ணயித்து 78 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. சுத்திகரிப்பு நிலையங்கள், அமைந்து கழிவுநீரை வாரியம் நிர்ணயித்துள்ள தரத்திற்கேற்ப சுத்திகரிக்க வேண்டும். இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட பின்னரே கழிவுநீரை நிலத்திலோ, வடிகாலிலோ, நீர்நிலைகளிலோ அல்லது பாசனத்திற்காக நிலத்திலோ வெளியேற்ற வேண்டும்.

தோல் பதனிடும் தொழிற்சாலையொன்று முழு அளவிலான சுத்திகரிப்பு நிலையமொன்றை நிறுவியுள்ளது. இச்சுத்திகரிப்பு நிலையமானது அதே வளாகத்திலிருக்கும் மற்ற இரு தொழிற்சாலைகளின் கழிவு நீரையும் சுத்திகரிக்கின்றது. "சிட்கோ மற்றும் சிப்காட்" வளாகங்களிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் சில ஓரளவு சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவியுள்ளது.

தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை 31-7-1985-க்கு முன்னர் நிறுவிட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளது. தோல் பதனிடும் குழுவின் பரிந்துரைகளின்படி இராணிப்பேட்டையிலுள்ள 73 தோல் பதனிடும் தொழிற்சாலைகள், பொதுவான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்துவதற்கு "இராணிப்பேட்டை தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு பணி கூட்டுறவுச் சங்கம்" என்னும் ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளனர். இந்திய அரசின் நிறுவனமான சென்னை-1-ல் உள்ள திருவாளர்கள் ரிச்சர்ட்சன் & க்ரூட்டாஸ் (1972) லிமிடெட் நிறுவனத்தாரால் ஒருங்கிணைந்த கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கு கருத்துரு ஒன்றை

இச்சங்கம் பெற்றிருக்கிறது. முறையே ரூ. 2.25 கோடியிலும் ரூ. 2.27 கோடியிலுமான இரு மாற்றுக் கருத்துருக்களும் இச்சங்கத்தின் பரிசீலனையில் உள்ளன. தொழிற்சாலைகளின் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு அமைப்பின் முன்னேற்றத்தினை வாரியம் கண்காணித்து வருகின்றது. கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவாத தொழிற்சாலைகளின் மீது வழக்குத் தொடுக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினை அரசு பணித்துள்ளது.

திரு. என். சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை தோல் தொழிற்சாலை ஒன்றில் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது என்றும், அது இரண்டு தோல் தொழிற்சாலைகளின் நீரை சுத்திகரிப்பதாகவும் சொன்னது. முழு சுத்திகரிப்பு வசதி உள்ள இடத்தில்கூட, அரசு அலுவலர்கள் வருகின்ற நேரத்தில் மட்டும்தான் சுத்திகரிப்பு நடைபெறுகின்றது. விவசாயிகளின் நலன் கருதியும், விளை நிலங்களின் நிலை கருதியும் இப்பணியைக் கண்காணித்து காவேரிப்பாக்கப் பகுதி விவசாயிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தான் அரசாங்கம் கருதுகிறது. ஆனால், இதில் தாட்சண்யம் இல்லாமல் நாம் ஒரு காலக்கெடு கொடுத்து இருக்கிறோம். 31-7-1985க்குள்ளே அவர்கள் அந்த எஃப்ளூயன்ட் ட்ரீட்மென்ட் பிளான்ட் ஏற்படுத்த வேண்டுமென்று நாம் ஒரு நிபந்தனை கொடுத்திருக்கிறோம். அந்த நிபந்தனையின் அடிப்படையில்தான் 73 இடங்களுக்கு நாம் இங்கே அனுமதி கொடுத்திருக்கிறோம். அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்கள் செயல்படவில்லையென்றால் தாட்சண்யம் இல்லாமல் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. என். சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை 31-7-1985க்கு முன்னர் நிறுவிவிட வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் அரசின் ஆணையை தோல் தொழிற்சாலை அதிபர்கள் ஏற்றதாகத் தெரியவில்லை. அதனால் எத்தனை தோல் தொழிற்சாலைகளின் உரிமங்கள் ரத்துசெய்யப்பட்டுள்ளன என்று அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், பல நேரங்களில் தொழிலாளர்கள் பாதிக்கப் படுவார்கள் என கூறி நடவடிக்கை தாமதப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த நிலை வித்தியாசமானது எனக் கருதி உடனடியாக உரிமங்களை ரத்து செய்ய அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இராணிப்பேட்டையில் இருக்கிற இந்த 'டானரி' சொசைட்டி சுத்திகரிப்பு நிலையம் நிறுவுவதற்காக 2.5 கோடி ரூபாயில் ஒரு பிரப்போசலும், 2.27 கோடி ரூபாயில் ஒரு பிரப்போசலும் ஆக ஆல்டர்னேட்டிவாக இரண்டு பிரப்போசல்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரப்போசல் அடிப்படையில் 'கம்பைண்ட் எஃப்ளூயன்ட் பிளான்ட்' ஒன்று ரிச்சர்ட்ஸ்சன் குருதாஸ் என்ற கம்பெனி பணியைச் செய்துகொண்டிருக்கிறது. சுத்திகரிப்பு நிலையம் இல்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வின் அடிப்படையில் தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும். The process of taking action has begun என்ற முறையிலே அதை நாம் ஆரம்பித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) போடிநாயக்கனூர் அரசினர் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல ஆவணங்கள் எரிந்து போனது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என்.எஸ்.வி. சித்தன், கே. எஸ். எம். இராமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், போடிநாயக்கனூர் அரசினர் மருத்துவமனையிலுள்ள ஆவணங்கள் அறை தீப்பற்றி எரிந்ததன் காரணமாக பல முக்கிய ஆவணங்கள் தீக்கிரையானதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

போடிநாயக்கனூர் அரசினர் மருத்துவமனை, மருத்துவ அலுவலர், மதுரை மாவட்ட மருத்துவ அலுவலர்களுக்குத் தனது அறிக்கையின் மேற்படி மருத்துவமனையில் பணியாற்றும் திரு. பி. சுருளி, தலைமை மருந்தாளுநர் மருந்து மற்றும் தளவாட சாமான்கள், இருப்புப் புத்தகங்களைச் சரிவரக் கணக்கு வைத்துப் பராமரிப்புச் செய்வதில்லை என்றும், அநேக கம்பெனி பில்களின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மேற்படி மருத்துவமனையின் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்யுமாறும் கேட்டிருந்தார்.

2. மேற்படி மருத்துவ அலுவலரின் வேண்டுதலின்படி
மாவட்ட மருத்தவ அலுவலர், தமது அலுவலகத்தைச் சார்ந்த
நிர்வாகச் செயலாளர் மற்றும் பொருளாளர் மற்றும் அலுவலகக்
கணக்காணிப்பாளர், இரு உதவியாளர்கள் கொண்டச் சிறப்புத்
தணிக்கைக் குழுவை போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையின்
கணக்குகளை 26-12-85 முதல் 28-12-85 வரை தணிக்கை
செய்வதற்காக விசேடமாக அனுப்பியிருந்தார்.

3. மேற்படி தணிக்கைக்குழு தனது தணிக்கையை மேற்
கொண்டிருந்தபோது, தலைமை மருந்தாளுநர், திரு சுருளி,
மேற்படி தணிக்கைக்குழு கேட்டிருந்த ஆவணங்களைத்தராமலும்
தணிக்கைக்குழுவிற்குத் தன் ஒத்துழைப்பைநல்காமலும் இருந்தார்.
இருப்பினும் உரிய ஆவணங்களையும் இருப்புப் புத்தகங்களையும்
எடுத்துத் தணிக்கைக்குழு தணிக்கை செய்து கொண்டிருந்தது.
இந்த நிலையில் கடந்த 28-12-85 அன்று காலை இரவுப் பணி
செய்யும் துப்புரவாளர் கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள்
வைத்திருக்கும் அறையிலிருந்து புகை வருவது கண்டு மருத்துவ
அலுவலருக்குத் தெரிவித்தார். மருத்துவ அலுவலர் உடனடி
யாகக் காவல் துறையினருக்கு தெரிவித்து காவல் துறையினர்
புலனாய்வு செய்ய நடவடிக்கை மேற்கொண்டனர். அந்த
அறையில் இருந்த இருப்புப் புத்தகங்கள், சில்லறைப் பட்டியல்கள்,
தேவைப் பட்டியல்கள், மருத்துவமனை அலுவலர்களின் பணிப்
பதிவேடுகள், ஸ்தல தீர்வுக்காக கொண்டு செல்லப்பட்ட உள்
தணிக்கைக் குழுவின் அறிக்கைகள் மற்றும் சில ஆவணங்கள்
எரிந்து போயின.

4. இச்சம்பவம் குறித்து திரு. சர்க்கரை என்னும் இரவு
காவலர், மாவட்ட மருத்துவ அலுவலரால் தற்காலிக பணி
நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

5. மேற்படித் தீச்சம்பவம் நடந்த முதல் நாள் 27-12-85
இரவு நேரத்தில் மருத்துவமனையில் இங்கும் அங்குமாகச்
சந்தேகத்திற்குண்டானச் சூழ்நிலையில் திரு. சுருளி சுற்றிக்
கொண்டிருந்ததாக இரவுக் காவலர் திரு. சர்க்கரை கொடுத்த
தகவலின்படி மேற்படித் தலைமை மருந்தாளுநர் திரு.சுருளியை
மாவட்ட மருத்துவ அலுவலர் விளக்கம் கேட்டுள்ளார்.

6. திரு சுருளி, தலைமை மருந்தாளுநர் வடாற்காடு
மாவட்டம், போளூர் அரசு மருத்துவ மனைக்கு உடனடியாக
மாற்றம் செய்யப்பட்டு அங்கு அவர் 16-1-86 அன்று பணி
ஏற்றார்,

7. இது தொடர்பாகக் காவல்துறையினர் மேற்கொண்ட
புலனாய்வின்படி தற்போதைய நிலையைக் கேட்டறிந்து விவர
மான அறிக்கையை அனுப்பும்படி மாவட்ட மருத்துவ அலுவலர்,
மதுரை அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும்
இச்சம்பவம் குறித்து மாவட்ட மருத்துவ அலுவலர் அவர்களின்



அறிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது
முதல் நோக்கிலேயே கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்
வதற்கான ஆதாரங்கள் திட்டவட்டமாகவுள்ளனவா என்று
ஆராய்ந்து மேல் நடவடிக்கைகள் தொடரப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க தலைவரவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் அளித்திருக்கிற
அறிக்கையில் இந்த போடிநாயக்கனூர் அரசு மருத்துவ மனையின்
தலைமை மருந்து ஆளுநர் சுருளி என்பவர் மீது பல்வேறு
குற்றச்சாட்டுகள் வந்து, அந்த அடிப்படையில் விசாரணைக்கு
ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோது அவர் சரியாக கணக்கு
கொடுக்கவில்லை என்று சொல்லப்படுகின்ற நேரத்தில் 28-ந்தேதி
இரவு அந்த ஆவணங்கள் தீப்பற்றி எரிந்திருப்பதாகவும் அன்று
இரவே அந்த அரசு மருத்துவமனையில் இந்த மருந்து ஆளுநர்
சந்தேகத்திற்குரிய முறையில் சுற்றித் திரிந்துகொண்டிருந்தார்
என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு சந்தேகம்
இருக்கிற போது அவரை வேறு ஊருக்கு மாற்றிவிட்டோம் என்று
சொல்வது தண்டனை அல்ல. 'It is not at all a punishment; but
it is a reward உடனடியாக அவரை சஸ்பெண்டாவது செய்திருக்க
வேண்டும். ஏன் அதைச் செய்யக்கூடாது என்று கேட்க விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே,
சஸ்பெண்ட் செய்வது எளிது. ஆனால் சஸ்பெண்ட் செய்வதாக
இருந்தாலும் கூட 'பிரைமா ஃபேசி கேஸ்' இருக்கிறதா
என்பதைப் பார்த்துத்தான் செய்ய முடியும். அவர் தவறு
செய்திருக்கிறார் என்று நிச்சயமாகத் தெரிந்தால் தாட்சணிய
மில்லாமல், எந்தவிதமான சங்கோஜமும் இல்லாமல் கடுமையான
நடவடிக்கை எடுக்கப்படும். அதனால்தான் இந்த அறிக்கையிலே
தெளிவாக விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் அந்த அளவுக்கு
மன நிறைவு அடைவார்கள் என்று கருதுகிறேன். தாட்சணிய
மில்லாமல் நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்ற வகையில் அறிக்கை
தரப்பட்டுள்ளது. சுருளி என்பவரை மாற்றியிருப்பதற்குக்
காரணம் அவர் வேறு ஏதாவது இங்கே செய்துவிடக்கூடாது
என்பதற்காகத்தான். அவரை மாற்றிவிட்டு, முறைப்படி
நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, இந்த அரசு
மருத்துவ மனையில் நம்முடைய அரசுக்குச் சொந்தமான பல
ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான மருந்துகள், மற்றுமுள்ள
பொருள்கள் எல்லாம் களவாடப்பட்டிருக்கின்றன அல்லது
தவறான முறையில் விற்கப்பட்டிருக்கின்றன என்பது தெரிந்த
பின்னால்தான், இது ஒரு மக்கள் பிரச்சனையாக இருக்கிற
காரணத்தினால்தான் நாங்கள் கவனஈர்ப்பு கொடுத்தோம்.
இன்னும் விரிவான அடிப்படையில் விசாரணையைத் தொடங்
கினால், குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டால், இந்த

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 சனவரி 29

மாதிரியான தவறுகள் வேறு மருத்துவமனைகளில் நடக்காமல்
இருக்க துணையாக இருக்கும். ஆகையால் இதிலே இன்னும்
கொஞ்சம் தீவிரமான விசாரணை செய்து, சம்பந்தப்பட்டவர்
மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:
இந்த கவன ஈர்ப்பு நோட்டீஸ் அந்தவகையில் கொஞ்சம் பயன்
படுவதாக இருக்கும் என்று கருதுகிறேன். உயர்மட்ட போலீஸ்
அதிகாரிகளிடம் சொல்லி, நிச்சயமாக கடுமையான நடவடிக்கை
எடுப்பது மட்டுமல்ல; மற்ற இடங்களிலும் இந்த மாதிரி தவறுகள்
நடக்காமல் இருக்க அது பயனுடையதாக இருக்கும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) பாலக்கோடு அரசு மருத்துவமனையைச் செப்பனிட வேண்டிய அவசியம் குறித்து.

திரு.ப.தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
"பாலக்கோடு அரசு மருத்துவமனை மிகவும் பழுதடைந்து
சுகாதாரமற்ற நிலையிலிருக்கும் காரணத்தால் அப்பகுதி மக்கள்
படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு அரசு மருத்துவ
மனை சுகாதார சீர்கேடற்ற நிலையில் இல்லை. ஆனால்
இம்மருத்துவமனைக்கு சில செப்பனிடு பணிகள் செய்யவேண்டி
யுள்ளது. அப்பணிகளை மேற்கொள்ள தர்மபுரி பொதுப்பணித்
துறை செயற்பொறியாளர் அவர்கள் ரூ. 58,000 செலவில்
மதிப்பீட்டை தர்மபுரி மாவட்ட மருத்துவ அலுவலரிடம்
அனுப்பியுள்ளதாகவும், மேலும் ரூ. 21,000 மதிப்பீட்டுச்செலவில்
அம்மருத்துவமனையிலுள்ள கழிவறைகளை பழுதுபார்க்க செயற்
பொறியாளர் உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளதாகவும்,
தர்மபுரி மாவட்ட மருத்துவ அலுவலரிடமிருந்து அறியப்
பட்டதென மருத்துவப்பணி மற்றும் குடும்பநல இயக்குநர்
தெரிவித்துள்ளார். இம்மதிப்பீடுகளை கட்டிட தலைமைப்
பொறியாளரிடம் ஒப்புதல் பெற்றவுடன் இப்பணிகள் மேற்
கொள்ளப்படும். மேலும் இதுசம்பந்தமாகத் தர்மபுரி மாவட்ட
மருத்துவ அலுவலரிடமும், சென்னையிலுள்ள தலைமை கட்டிட
பொறியாளரிடமும் தொடர்பு கொண்டு விரைவில் குறைகளை
சரிசெய்வதாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.



1986 ஜனவரி 29]

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த விவர அறிக்கையில் பழுதுபார்ப்பதற்கு உரிய
தொகை அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் அறிவிக்கப்
பட்டு இருக்கின்றது. இப்படி இரண்டு, மூன்று மாதங்களாகவே
சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் இதுவரையில் வேலைகள்
எடுத்துச் செய்யப்படாமல் இருக்கின்றது. அதுமட்டுமல்ல. அது
தாலுக்கா தலைநகரில் உள்ள மருத்துவமனை. அந்தப் பகுதியில்
கிட்டத்தட்ட 25,30 கிலோ மீட்டர் தூரத்தில் வேறு மருத்துவ
மனைகளே இல்லை. அங்கே வருபவர்கள் மருத்துவ வசதி பெற
போதிய வசதிகள் இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. அந்தக்
கட்டிடம் வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட
கட்டடம், அது மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றது.
ஆகவே மருத்துவர்கள் கூட அங்கே வந்து பணியாற்றுவதற்கு
சங்கடமான சூழ்நிலை இருப்பதன் காரணமாகவும் அங்கே வந்து
பணியாற்றுவதற்குத் தயங்குகிறார்கள். அங்கே வருகின்ற
நோயாளிகளும், அதே போல மிகவும் வேதனையான நிலையில் இருக்கின்ற
காரணத்தால், சங்கடப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே
இந்த நிலைமைகளை மாற்றியமைப்பதற்கு அமைச்சர் அவர்கள்
உடனடியாக முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர்
அவர்களே, அந்தக் கட்டிடத்தைப் பொறுத்தவரையில் 60 ஆண்டு
களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம். அந்த பில்டிங்கைப்
பொறுத்தவரையில் கம்பளீட் ரிப்பேருக்கு என்ற வகையில் 58,000
ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. டாய்லட்ஸ் டு ஹாஸ்பிட்டல்
என்ற வகையில் அதாவது பாத் ரூம் ஃபெஸிலிட்டிஸ் என்ற
வகையில் 21,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதற்காக அந்தத்
தொகையை அதற்காக ரிலீஸ் செய்து உடனடியாக நடவடிக்கை
எடுத்துக்கொள்கிறோம். வேறு ஏதேனும் யோசனைகள் இருந்தால்
கூட அவர்கள் எனக்குத் தெரிவித்தால் அதற்கும் உரிய நடவடிக்கை
எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அந்த பாலக்கோட்டிலே அரசு மருத்துவமனை
கட்டிடத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு அதற்குரிய
வேலைகள் நடந்துகொண்டு வருகின்றன. இந்த ஆண்டின் நிதி
நிலை அறிக்கையிலே சேர்த்து அங்கே புதிய மருத்துவமனை
கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்து ஏற்பாடு
செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆண்டு கட்ட முடியுமா என்பது பற்றி சொல்ல
முடியாது என்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொல்வது ஒரு நியாயமான கோரிக்கையாகும். பாலக்கோட்டிலே
ஒரு இடம் கிடைத்தால்— அதற்குரிய முயற்சி எடுத்துக்கொள்
கிறேன் என்று சொன்னார்கள், நன்றி,— அதற்குப் பிறகு ஒரு புதிய
கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஊ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி தொகுதியில் மூளைக்காய்ச்சல், வாந்தி போன்ற நோயினால் சிலர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. சோலைராசு அவர்கள் ஒரு கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லாததால் அவருக்குப் பதிலாக திரு. சைதை சா. துரைசாமி அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. சைதை சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதியில் பரவலாக மூளைக் காய்ச்சல் மற்றும் வாந்தி ஆகிய இரண்டு நோய்கள் ஏற்பட்டு கார்வாடி கிராமத்தில் ஒரு பையனும், பலுவஞ்சி கிராமத்தில் வாந்தி யால் ஒருவரும் இறந்ததால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதியில் உள்ள கார்வாடி, பலுவஞ்சி என்னும் கிராமங்களில் இருவர் முறையே மூளைக் காய்ச்சல் மற்றும் வாந்திபேதி நோயினால் மாண்டனர் என்ற புகாரினையொட்டி பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் தொடர்பு கொள்ளப்பட்டார்.

திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதியில் கார்வாடி என்னும் கிராமத்தில், சின்னக்கண்ணு என்கிற 17 வயதுடைய பையன் 27-12-85 அன்று தலைவலி, காய்ச்சல், காரணமாக திருச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 2-1-86-ம் தேதி வரை, அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அதன் பிறகு 2-1-86-ம் தேதியன்று மருத்துவ அறிவுரைக்கு எதிராக, மருத்துவமனையை விட்டுச் சென்றதினால், 6-1-86-ம் தேதி யன்று, இவ்வாலிபர் அவருடைய இல்லத்தில் மரணமடைந்தார்.

பலுவஞ்சி என்னும் கிராமத்தில், அரியன் என்பவருடைய இரண்டு குழந்தைகள் பேபி ஆண்டிச்சி என்கிற 5 வயது குழந்தையும், இலட்சுமி என்கிற 3½ வயது குழந்தையும் சீதபேதி யால் முறையே 26-12-85-ம் தேதியன்றும் 3-1-86 ஆம் தேதி யன்றும் இறந்தனர். இவ்விரண்டு குழந்தைகளும் மணப்பாறையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றதாக அறிய வருகிறது. இதைத்தவிர இக்கிராமத்தில் இந்நோயினால் யாரும் பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.



3. மேற்கண்ட இடங்களில் மூளைக்காய்ச்சல் மற்றும் வாந்தி ஆகிய நோய்களினால் பாதிக்கப்பட்டதாக வேறு எந்த தகவலும் இல்லை. இந்நோய்கள் தமிழ்நாட்டில் வராமல் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அவ்வப்போது அரசு எடுத்து வருகிறது.

(எ) திருவொற்றியூர்-பொன்னேரி பஞ்செட்டி நெடுஞ்சாலையில் கொஸத்தலையார்ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணிகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. கே. சேகர் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லாததால் அவருக்குப் பதிலாக திரு. சைதை சா. துரைசாமி அவர்கள் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சைதை சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ''பொன்னேரி தொகுதி திருவொற்றியூர்-பொன்னேரி பஞ்செட்டி நெடுஞ்சாலையில், நாப்பாளையம் கிராமத்தில் கொஸத்தலையார் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணி துவங்கி பல ஆண்டு களாகியும் இன்னமும் கட்டி முடிக்கப்படாததால் அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஈ. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

திருவொற்றியூர் பொன்னேரி பஞ்செட்டி சாலையில் (அரசு மாவட்டப் பெருஞ்சாலை) கி.மீ. 7/8—8/2-ல் நாப்பாளையம் அருகே கொஸத்தலையார் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் ஒன்றைக்கட்ட அரசு ஆணை (நிலை) எண்.5, பொதுப்பணித்துறை நாள்: 3-1-75-ல் ரூ. 17 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணிக்கு ரூ. 17 இலட்சத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ரூ. 14.786 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் அளித்த திருவாளர்கள் நேஷனல் கம்பெனி நிறுவனத்தினரிடம் ஒப்பந்த உடன்படிக்கை 8-12-1975-ம் நாளன்று செய்யப்பட்டது.

2. அதன்படி ஒப்பந்தக்காரர்கள் ரூ. 7.236 இலட்சம் செலவு செய்து பாலத்தின் அடித்தளம் வரை கட்டினார்கள். அதன் பின்னர் இந்த மேம்பாலம் கட்டும் பணியில் போதிய முன்னேற்றம் காண்பிக்காத காரணத்தால் எஸ்.எஸ்.ஆர்.பி. விதி 109.07-ல் கண்டுள்ளபடி மேற்படி ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தம் முழுவதும் 21-9-1979 நாளன்று ரத்து செய்யப்பட்டது. அங்ஙனம் ரத்து செய்த உத்திரவு சட்டப்படி செல்லாதது என்று அறிவிக்கக்

கோரியும், மேற்கொண்டு வேலையை தொடராமல் இருக்கவேண்டி தடை உத்திரவு பிறப்பிக்கக்கோரியும் மேற்படி ஒப்பந்ததாரர்கள் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண். 9306/79-ல் 12-12-79 அன்று வழக்குத் தொடர்ந்தனர். இவ்வழக்கு 17-3-1983-ம் நாள் வரை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்தபோது, மேற்படி பாலம் கட்டும் பணியில் கட்டப்பட்டது போக எஞ்சியுள்ள பணிகளை முடிப்பதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஆனால் எந்த ஒரு ஒப்பந்தக்காரரும் வேலையை எடுத்துச்செய்ய முன்வரவில்லை. எனவே, எஞ்சியுள்ள பணி, பன்னிரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அதற்கு அரசு ஆணை (நிலை) எண். 860, போக்குவரத்துத் துறை நாள்: 27-7-81-ன் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு இருமுறைகள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ஆனால் எந்த ஒப்பந்தக்காரரும் முன்வரவில்லை. மூன்றாவது முறை கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு முன்வந்த ஒரே ஒரு ஒப்பந்தக்காரரும் அவரது ஒப்பந்தப்புள்ளியை திரும்பப் பெற்றுக்கொண்டார்.

(முற்பகல் 9–20)

3. மேற்படி பணியை செயலாக்குவது குறித்து நெடுஞ்சாலைத் துறை தொடர்ந்து பரிசீலனை செய்துவந்தது. 24-3-83-ம் நாளிடப்பட்ட தமது தீர்ப்புரையில் சென்னை உரிமையியல் நீதிமன்றம் மேற்படி திருவாளர்கள் நேஷனல் கம்பெனி நிறுவனத்தினரிடம் செய்யப்பட்டிருந்த ஒப்பந்தத்தை ரத்து செய்தது செல்லாது என்று அறிவித்ததுடன், மேற்கொண்டு வேலையை செய்ய தடை உத்திரவும் பிறப்பித்தது. இந்த தடை உத்திரவை எதிர்த்து பிரின்சிபல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு ஏ.எஸ்.எண் 52/84, 27-1-84-ம் நாள் நெடுஞ்சாலைத்துறையினரால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மேல் முறையீடும் பிரின்சிபல் நீதிமன்றத்தால் 19-6-84 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பின் இரண்டாவது மேல்முறையீடு சென்னை உயர்நீதி மன்றத்தில் 29-7-85-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து அரசு வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி காரணங்களினால் இப்பணியை மீண்டும் துவக்குவதற்கு கால தாமதம் ஏற்பட்டு வருகிறது.

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு.

**திரு. எம். இராசரத்தினம்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க் கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கு துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் இருபதாவது அறிக்கை.





(ஆ) 1972–73 முதல் 1975–76 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1980–81) அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை.

(இ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1980–81) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்:

(அ) 1981–82 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) கல்வித்துறை தொடர்பான குறிப்புகள் மீதான மேற்படி குழுவின் பதினொறாவது அறிக்கை.

(ஆ) 1980–81 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும், சாட்டப்பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழிந்த தொகை பற்றிய மேற்படி குழுவின் பதினேழாவது அறிக்கை.

(இ) தமிழ்நாடு அரசின் 1965–66, 1970–71 மற்றும் 1971–72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது பொதுப்பணித் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் பதினெட்டாவது அறிக்கை.

### (இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

**மாண்புமிகு திரு வெ. ச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): தமிழ்நாடு சட்டமன்ற சட்டவிதிகள் ஆய்வுக்குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளை செல்திறனாக்குதல்) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளைச் செல்திறனாக்குதல்) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான காரணங்கள் சொல்லப்பட்டிருப்பதில், எக்ஸ்பிளனேஷனிலே நவம்பர் 1978-லே உயர்நீதிமன்றத்தினுடைய ரெஜிஸ்டிராரரிடம் இருந்து இந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தினுடைய நீதிபதி நியமனத்திலே தவறு இருந்ததாக குறிப்பிட்டு அதன் காரணமாக அந்தத் தவறுகளை நிறைவு செய்வதற்காக இந்தச்சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் இரண்டு காரணங்களுக்காக இந்தச் சட்டத்தை அவையிலே கொண்டு வருவதை எதிர்க்கிறேன்.

(1) இதை லெஜிஸ்லேச்சரின் மூலமாக போடாமல் ரூல்ஸ் மூலமாகவே போட்டுச் செய்து விடலாம் என்ற காரணத்திற்காக வும்; (2) மிகவும் காலதாமதமாக 1978-லே செய்யப்பட்ட ஒரு விஷயத்திற்கு 1986-லே 8 ஆண்டுகள் கழித்து கொண்டு வருவதற் காக ஒரு சட்டமே தேவையில்லை என்றும் குறிப்பிட்டு, இந்தச் சட்டம் அவையில் விவாதத்திற்கு வைக்கப்படுமானால், இது அவையின் பொன்னான நேரத்தை வீணாக்குவதாக அமையும் என்று எடுத்துக் கூறி, இதை அவையில் அறிமுகப்படுத்துவதை எதிர்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் இன்றியமையாது தேவைப்படுகிறது என்ற காரணத்தினால்தான் காலதாமதம் ஏற்பட்டாலும் கூட பரவாயில்லை இது அவசியம் என்று கருதி கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது அதனுடைய குறிப்பேடுகள், நிலைமைகள், தன்மைகள் போன்றவற்றை விரிவாக விளக்கலாம் என்ற முறை யில் இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''







தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) நில அளவை எல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நில அளவை எல்லைகள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனு மதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (இ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஈ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.21/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவ களே, இந்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள பெறும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் பேச பெ கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைக் தலை அவர்களே, சாதாரணமாக, துணை 'மானியக் கோரிக்கைக வரும்போது பேசி விடுகிறோம். நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவி மீது பெரும்பாலும் பேசுவதில்லை; பேசக்கூடாது என்றில்லை பேசுவதில்லை. இது மரபாக இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி பேசுங்கள்.

திரு. அ.ரகுமான்கான்: மன்றத் தலைவர் அவர்களே, பொ வான தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த அவையில் விவாதிப்பது உண்டு. இங்கே கொடுக்கப்பட்டிருக்க கூடிய இந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு முக்கியமான பிரச்சினை கல்வி என்ற தலைப்பில் வருகிற காரணத்தால், சில கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். தங்கள் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவ விரும்புகிறேன். குறிப்பாக, நம்முடைய தமிழ்நாட்டிலே இன்றைக்கு சுயநிதிக் கல்லூரிகள் என்ற விதத்தில் பல கல்லூ களுக்கு அரசாங்கம் அனுமதி கொடுத்திருப்பதை நாம் பார்க் கிறோம். மூன்று மருத்துவக் கல்லூரிகளை தமிழ்நாட்டில் தனி யார் நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. 2 எஞ்ஜினீயரிங் கல்லூரிகள் தனியார் நடத்துவதற்கு அரசாங் அனுமதி வழங்கியிருக்கிறது. 78 பாலிடெக்னிக் நடத்துவத அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது, இப்படிப்பட்ட தனிய கல்லூரிகள் நடத்துவதற்கு 'ஸெல்ஃப் பைனான்ஸிங் இன்ஸ்டி டியூஷன்ஸ்' என்று சொல்கிற விதத்தில் அரசாங்கம் அனுமதி கொடு பதில் இன்றைக்கு மிகப்பெரிய ஆபத்துகள் நேர்ந்திருக்கின்றன என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

உதாரணத்திற்கு, இன்றைக்கு தனியார் மருத்துவக் கல்லூரி யில் ஒருவர் இடம் பெறவேண்டுமானால், ஏறத்தாழ அவர்கள்— இன்றைக்கு விளம்பரத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். 'கா டேஷன் பீஸ்' ரூ.2,50,000 கொடுத்தால்தான் ஒருவர் மருத்துவக் கல்லூரியில் இடம் பெற முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அவர்களுடைய விளம்பரத்திலேயே வருகிறது, ரூ.2,50,000 என்று நான் கேட்க விரும்புகிறேன். 'விலை கேட்டு வாங்கவா முடியும் கல்வி' என்று பாரதிதாசன் பாடினார். ஆனால் இன்றைக்கு உங்கள் ஆட்சியில் விலை போட்டு கல்வியை வாங்க முடியும் என்ற





நிலையிருந்தால், ஏழை எளிய மக்கள், மத்தியதர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மருத்துவக் கல்லூரியில் பயின்று டாக்டராக முடியுமா? இன்றைக்கு இதுபோன்ற நிலை இல்லாதபடி தனியார் கொள்ளை அடிப்பதற்கு ஒரு நிறுவனமாக இன்றைக்கு மருத்துவக் கல்லூரிகள், என்ஜினீயரிங் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் இருப் பதை நான் இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு அரசு தரப்பிலே சொல்லப்படுகின்ற வாதங்கள் சரியாக இல்லை. நிதி பற்றாக்குறை காரணத்தினாலே, தனியார் உதவியுடன் இவ்வாறு நிறுவப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அதே நேரத்திலே இன்னொன்றையும் நினைவூட்ட விரும்புகிறேன், இன்றைக்குத் தனியாரிடத்திலே நீங்கள் மருத்துவக் கல்லூரியைக் கொடுக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் அதை வியாபாரமாகக் கருதுகிறார்கள். கடுமையான வார்த்தையைப் பயன்படுத்துவதற் காக அவை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் மகாராஷ்டிரா சட்டமன்றத்திலே அந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. தனியார் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்கப் படுவதன் மூலம், தனியார்கள் அந்த நிறுவனத்தின் மூலம் கொள்ளை அடிப்பதற்கு கதவு திறந்துவிடப்படுகின்றது. இது கல்வியின் மூலம் நடத்தப்படும் விபச்சாரம் என்ற வார்த்தையை அங்கே பயன்படுத்தி இருக்கிறார்கள். எனவே, இந்த அரசாங்கம் அதற்கு துணை போகிறது. அது எந்த விதத்திலே நியாயம் என் பதைக் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, இந்திய மருத்துவக் கவுன்சில் இந்தக் கல்லூரிகளுக்கெல் லாம் அனுமதி வழங்கியிருக்கிறதா என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு மருத்துவக் கல்லூரியைத் திறக்க வேண்டு மென்றால், 500 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை அங்கே இணைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அது சிறப்பாக செயல்பட முடியும் என்று விதியிருக்கிறது.

அடுத்து, இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். 40% அரசு கோட்டாவாக இந்த மருத்துவமனைகளில் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறதா? இந்த 40% இட ஒதுக்கீடு தனியார் கல்லூரிகளான இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி. பி.எஸ்.ஜி. மருத்துவக் கல்லூரி, மற்றும் இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி ஆகியவைகளில் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி கொடுக்கப்பட்டிருந்தால், அந்த 40% இடம் முறையாக நிரப்பப்பட்டிருக்கிறதா? எந்த அடிப்படையில் நிரப்பப்பட்டது என்ற விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பிற நாடுகளில் வாழ்கின்றவர்களுக்கு 'பாரின் கோட்டா' என்ற ஒரு கோட்டா இருக்கிறது. இங்கே சுகாதார அமைச்சர் அவர்கள் இருப்பதால், அவர்களின் கவனத்திற்கு உங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்த பாரின் கோட்டா உரிய முறையில் நிரப்பப்பட்டிருக்கிறதா? பிற நாடு களில் வாழ்கின்றவர்களுக்கு, அந்த மருத்துவமனையில் முறையாக இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, இன்னொன்றையும் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். இங்கே இருக்கக்கூடிய இந்த மருத்துவக் கல்லூரி களுக்கு ஏற்கனவே சென்னைப்பல்கலைக்கழகத்திலே அந்த குறிப் பிட்ட தேதிக்கு முன்னாலே மனு போட்டு அனுமதி பெற்றதற்குப் பிறகுதான் அந்தக் கல்லூரியைத் துவக்க முடியும். ஆனால் இங்கே அந்த விதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. சிண்டிகேட்டிலே இதற்கு பலமான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு, எங்கள் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். ஆகவே, உங்கள் மூலம் இந்த அரசின் கவனத் திற்கு கொண்டுவர விரும்புவது, சுய நிதி கல்லூரி என்ற பெயரால் தனி நபர்கள் கொள்ளை அடிப்பதற்கு கதவைத் திறந்து விட்டிருக் கிறார்கள். அதனால், பாலிடெக்னிக்குகள், என்ஜினீயரிங் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றின் தரம் இன் றைக்கு கெட்டுபோய் இருக்கிறது, இவைகளைக் கண்டித்து கல்லூரி மாணவர்கள், மருத்துவ சர்ஜன்கள் போராட்டம் நடத் தினார்கள். அப்போதுகூட நிதியமைச்சர் அவர்கள் கர்நாடகா விலே, மகாராஷ்டிரத்திலே தனியார் கல்லூரிகள் இப்படி இருக் கின்றன என்று சொன்னார்கள். பிற மாநிலங்களிலே இருக்கின்ற காரணத்தினால், நாம் அவற்றை எல்லாம் செய்துவிட முடியாது. அந்தக் கருத்தை இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆகவே தமிழ கத்திலே இருக்கக்கூடிய தனியார்கள் கொள்ளையடிப்பதற்கான வாய்ப்பு திறந்து விடப்பட்டிருப்பதை நான் வன்மையாக கண்டிக் கிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. அதன்மீது பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவில் பல் வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணம், அந்தந்த டிமாண்டுகளுக்கு சரியாக ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பதில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப் பட வேண்டியிருக்கிறது......



திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இன்றைக்குத் தனியார்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கல்லூரி களைப் பற்றி பேசும்போது கொள்ளை அடிப்பதற்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கட்சியின் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களே தனியார்களுக்கு கல்லூரிகளைக் கொடுப் பதை வரவேற்று இருக்கிறார்கள். ஆகவே அவருடைய தலைவர் சொல்வதிலிருந்து உறுப்பினர் மாறுபடுகிறாரா? அல்லது அவரு டைய தலைவரின் கொள்கைக்கு விரோதமான கருத்தைச் சொல் கிறாரா? கொள்ளையடிப்பதாகச் சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மருத்துவக் கல்லூரிச் சீட்டுகள் ஏலம் போனதைப் போல இந்த ஆட்சியில் நடக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மருத்துவக் கல்லூரிச் சீட்டுகள் ஏலம் போடப்பட்டது என்றார், அப்படி ஏலம் போடப்பட்டிருந்தால் அதுகுறித்து இந்த அரசு விசாரணை நடத்தலாம். அவர்கள் சொல்கிறபோது சபைக்கு ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். இல்லையென்றால் சபைக் குறிப்பிலிருந்து தாங்கள் நீக்க வேண்டும்; அவர்களைப் போலவே நானும் பல குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் நீங்கள் நீக்கி விடுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசும்போது இந்த ஆட்சியில் கொள்ளையடிப்பதாகச் சொன்னீர்கள், பெர்சனலாக வருகிறபோது வார்த்தைகள் திரும்புகிறது. ஆகவே இதுபோன்ற வார்த்தைகளில் வருவதுதான் விவகாரமே. ஆகவே உறுப்பினர் பேசுகிறபோது ரெஸ்ட்ரெய்ண்டாக பேசவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இரண்டாவதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தனியார்களுக்குக் கொடுப்பதை ஆதரிக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். ஆதாரம் இருந்தால் சொல்லட்டும். ஆனால் இதை நாங்கள் ஆதரிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், ஆதரிக்காத நிலையில்கூட நாங்கள் மருத் துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள், சர்ஜன்கள் போராட் டத்திலே கலந்து கொண்டு எங்கள் கட்சியின் சார்பாக கருத்துக் களை எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் தலைவர் பேசிய பேச்சு செய்தித் தாளில் வந்திருக் கிறது. அந்த ஆதாரத்தை வேண்டுமானால் ரகுமான்கான் அவர் களுக்கு நான் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: செய்தித்தாளை தங்களிடத்தில் காட்டியதற்குப் பிறகு அதுகுறித்து தாங்கள் விசாரணை செய்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு விளக்கம், செய்தித்தாளில் வந்திருக் கிறது, ஆதாரத்தைத் தருகிறேன் என்று அவர் சொன்னதற்கு தாங்கள் ஒப்புக்கொண்டதற்கு நன்றி. தலைவர் அவர்களே, இன் னொன்றை தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சுப்ரீம் கோர்ட்டின் முன்னாள் நீதிபதி கிருஷ்ண அய்யர் அவர்களை தங்களுக்கு நன்றாகத் தெரியும். கிருஷ்ண அய்யர் அவர்கள் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசுகின்றபோது ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதை சம்பந்தமில்லாத பிரச்சனை என்று தாங்கள் கருதக் கூடாது. அப்ரோப்ரியேஷன் பில்லில் பல்வேறு மானியங்கள் வருகின்றன. அந்த மானியங்களில் நீதித் துறையும் வருகிறது. ஆகவே நீதித் துறையை ஒட்டிய கருத்துக்கள், அந்தத் துறைக்குப் பணம் ஒதுக்கப்படுவதால் சொல்வது என்பது மரபு தான். அவர்கள் சொல்கிறபோது ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தால் போடப்படுகிற கமிஷன்கள் கேலிக்கூத்தாக இருக்கின்றன. அது ஜனநாயகத்தை கேலிச் செய்வதாக இருந்கிறது. காரணம் கமிஷன்களுடைய ஃபைன்டிங்ஸ்களை அரசாங்கம் அமல் நடத்துவதில்லையென்று ஒரு குற்றச்சாட்டை இந்த அரசாங்கத்திற்கு எதிராகவே முன்னாள் சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதி கிருஷ்ண அய்யர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்). ஆகவே, தங்கள் மூலமாக அரசாங்கத்தை கேட்க விரும்புகிறேன். பல லட்ச ரூபாய் செலவழித்து நீதிபதிகளைப்போட்டு நாம் இதுபோன்ற கமிஷன்களை நியமிக்கிறோமே நாம் அதனுடைய முடிவுகளை அமல்படுத்த வேண்டாமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்கு, இன்றைக்கு இந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு எவ்வளவு கெட்டிருக்கிறது என்பதற்கு ஏராளமான ஆதாரங்களை நான் எடுத்துச் சொன்னேன். போலீஸ் லாக்கப்பிலே இந்த ஆட்சியில்தான் ஏறத்தாழ 400-க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது உறுப்பினர் பேசுவது எல்லாம் நிதி ஒதுக்கத்திலே வராது. 10 நிமிடத்திற்கு மேல் பேசி விட்டார்கள். ஆகவே இதோடு முடித்துக்கொள்ள வேண்டும்,

திரு. அ. ரகுமான்கான்: இதெல்லாம் நீதித்துறையில் வருகிற பிரச்னைகள். நிதி ஒதுக்க மசோதாவில் இதுபோன்று ஏற்கனவே பேசப்பட்டிருக்கிறது. பல குற்றக்சாட்டுகள் சொல்லப்பட்டு சபையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாத் துறைகளையும் சேர்த்துப் பேசுவதென்றால் அது ஜெனரல் டிஸ்கஷன் ஆகிவிடும். இதுகுறித்த விளக்கத்தைப் படிக்கிறேன்.

"....matters of detail are not gone into during the discussion on Appropriation Bill"

திரு. அ. ரகுமான்கான்: டீடெய்லாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் லைட்டாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். டிமாண்டுகளில் கருத்துக்களை சொல்வதில் தவறில்லை.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது, இந்த ஆட்சியிலே 400-க்கும் மேற்பட்டவர்கள் போலீஸ் லாக்கப்பில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றஒரு புள்ளி விவரத்தைச் சொன்னார்கள். எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்லுகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.



திரு. அ. ரகுமான்கான்: நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி அவர்கள் பத்திரிகையிலே வந்த ஒரு ஆதாரத்தைச் சொன்னார். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு இருக்கிறீர்கள். ஹிந்துஸ்தான் டைம்ஸ்......

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்றுக் கொண்டு இருக்கிறேன் என்று சொல்ல வேண்டாம். சபையை அமைதியாக நடத்த வேண்டும் என்றுதான் நான் இருக்கிறேன். நான் விதிகளைக் கொஞ்சம் கடுமையாக கடைபிடிக்க ஆரம்பித்தால், அது தவறான ஒரு எண்ணத்தை ஏற்படுத்திவிடும். எனவே, Kindly restrain yourself.

திரு. அ. ரகுமான்கான்: 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியாவில்' எழுதப்பட்டு இருக்கிறது. வேண்டுமானால் அவற்றைக் கொண்டு வந்து நான் தருகிறேன், ஆகவே மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். போலீஸ் காவலில், உதாரணமாக சேலம் கிச்சிப்பாளையத்திலே, தெய்வமணி என்ற ஒரு ஹரிஜனப் பெண், தற்கொலை செய்து கொண்டார் என்று போலீஸ் தரப்பிலே சொல்லப்பட்டது. ஆனால் அதை விசாரித்த நீதிபதி நஞ்சப்பன் கமிஷன் என்ன சொல்கிறது என்று கேட்டால், அது தற்கொலை அல்ல, புடவையை அவர்கள் கழுத்தில் சுற்றிக் கொண்டு இறந்து போனார் என்று சொல்வது உண்மையல்ல. மாறாக, அந்த மரணம் சம்பவித்ததற்குக் காரணம் போலீஸ் லாக்கப்பிலே நடைபெற்றிருக்கிற சம்பவம், அந்தக் குற்றவாளிகள் போலீஸ்காரர்கள்தான். எனவே, இது குறித்து ஒரு புலன் விசாரணை வேண்டும் என்று அந்த பைன்டிங்ஸ் தெளிவாகச் சொல்கிறது. ஆனால், இது குறித்து அரசாங்கம் ஏதாவது புலன் விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறதா என்றால் கிடையாது. நஞ்சப்பனுடைய அந்த கமிஷன் ரிப்போர்ட் இங்கே கொடுக்கப்பட்டு, பல நாட்கள் ஆகிவிட்டன. நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டு இருக்கிறதா என்றால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதைப்போலவே இந்த அரசாங்கத்திலே ஏற்கனவே இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டதா? குற்றவாளிகள் என்று சொன்னவருக்கு, புரமோஷன். ஏற்கனவே பால் கமிஷன் அறிக்கை வைக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்கப்பட்டதா? நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் பால் கமிஷன் ரிப்போர்ட்டை மக்கள் நலன் கருதி வெளிப்படுத்திய கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பாண்டிச்சேரியின் முதலமைச்சராக இருக்கிற பரூக் மரைக்காயர் அவர்கள் பட்ஜெட்டினுடைய ரகசியத்தை இன்னும் சொல்லப்போனால், பட்ஜெட் காப்பியை அப்படியே சபையில் வாசித்தார். யாரும் வழக்கு போடவில்லை.

அதைப்போலவே அம்பா சங்கர் கமிஷனுடைய ரிப்போர்ட் அறிவிக்கப்படவில்லை. ஆனால் பத்திரிகைகள் வெளியிட்டன. ஏனய்யா வெளியிடவில்லை என்றால், வெளியிட்டவர்கள் மீது வழக்கு போடுவோம் என்று பேசுகிறீர்கள். ஆகவே நான் கேட்கிறேன், இத்தகைய கமிஷன்கள் எல்லாம் நீதித் துறையால் போடப்படுகின்றன. இவைகளுக்காக பணம் செலவழிக்கப்படுகிறது. ஆனால் அவைகளுடைய பைண்டிங்க்ஸ் நிறைவேற்றப்படுகிறதா என்றால், இல்லாத ஒரு நிலைமையை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். உங்கள் அமைச்சர்களைப் பற்றி இந்த மசோதாவிலே வந்திருக்கிறது. Public Men Criminal Misconduct Act என்று கலைஞர் அவர்கள் ஆட்சியிலே சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் உங்கள் ஆட்சியிலே அந்தச் சட்டம் அகற்றப்பட்டுவிட்டது.

அதைப்போலவே வெங்கடாத்திரி கமிஷன் * * *

ஆனால் அத்தோடு அந்தப் பிரச்சனை போய்விட்டது. அப்போது இருந்த சட்ட அமைச்சர் சொன்னார். ஒரு காம்ப்ரஹென்சிவ் பில் கொண்டு வருவோம் என்று சொன்னார். இன்னும் அந்த காம்ப்ரஹென்சிவ் பில்லைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, மக்கள் குறை தீர்ப்பதற்காக ஒரு கேபினெட்–சப்–கமிட்டி போடப்பட்டது. அதிலே நம்முடைய நிதியமைச்சர் நாவலர், மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து, மாண்புமிகு அமைச்சர் கிருஷ்ணசாமி, மாண்புமிகு மின் துறை அமைச்சர் ஆகியோர்கள் எல்லாம் அதிலே உறுப்பினராக இருந்தார்கள். ஆனால் இப்போது கேபினெட்-சப்-கமிட்டியும் கலைக்கப்பட்டுவிட்டது.

சட்டசபை உறுப்பினர்கள், ஊழல் செய்தால், எம்.பி.க்கள், எம்.எல் சிக்கள் ஊழல் செய்தால், அவர்கள் மீது எல்லாம் விசாரிப்பதற்கு கமிட்டி, ஆகவே நான் கேட்கிறேன். இப்போது அந்த கேபினெட்–சப்–கமிட்டி போய்விட்டது. அதைப்போலவே Public Men Criminal Misconduct Act போய்விட்டது.

அதேநேரத்தில் அமைச்சர் அவர்களைப் பற்றி பல புகார்கள் இருக்கின்றன. ஊழல் குற்றக் சாட்டுகள் இருக்கின்றன. நான் கேட்கிறேன். இவைகளையெல்லாம் எந்தக் கமிட்டியிலே சொல்வது? எந்தக் கமிஷனிலே சொல்வது? இந்தச் சட்டசபையில் சொல்வது என்றால், இவைகளைப் பொறுத்து நீங்கள் அனுமதி கொடுத்தால்தான் நாங்கள் பேச முடியும். இல்லையென்றால் பேச முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியிலே தெளிவாக இருக்கிறது. அனுமதி என்று இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. அ. ரகுமான்கான்: எனவே சபையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் எல்லாம் சொல்கிற பிரச்சனைகள் குறித்து குழப்பமாக இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள்.* *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுவதை வைத்து இங்கே சொல்லக் கூடாது. எல்லோரையும் பற்றி பேசிவிடலாம். எனவே ஸ்பெசிபிக்காக ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால், அதற்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டுத்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) அமைச்சரைப் பற்றி பேசினால்,

You must give notice. They are also Members of the House. I have to protect them.

** என்று சொல்வது எல்லாம் சரியல்ல. அவை எல்லாம் நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு). ஏதாவது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், என்னிடம் அதற்கான ஆதாரங்களை முன் கூட்டிக் காட்டி, என் அனுமதி பெற்று பின்னர் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்:**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே அந்தப் பிரச்சினைப் பற்றி என்னிடம் பிரிவிலேஜ் வந்தது. என் அறையில் அதற்குப் பதில் கொடுத்து, தள்ளுபடி செய்துவிட்டேன். (குறுக்கீடு) அதை நான் தான் ரிஜெக்ட் செய்தேன். (குறுக்கீடு) ரிஜெக்ட் செய்ததை திருப்பி எப்படிப் பேச முடியும், சொல்லுங்கள்? I want smooth conduct of the House. வேறு ஒன்றும் இல்லை. You should restrain yourself and finish it.

திரு. அ. ரகுமான்கான்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையா? எவிடன்ஸ் இருந்தால் கொடுங்கள்; You have to substantiate.

திரு. அ. ரகுமான்கான்: நான் பொறுப்பு ஏற்றுக் கொள்ளுகிறேன். (கூச்சல்-குழப்பம்) நான் ஆதாரத்தைக் கொடுத்து நிரூபிக்கத் தயார் (கூச்சல்-குழப்பம்).

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களே பதில் சொல்லிக்
கொண்டிருக்கும்போது உறுப்பினர்கள் யாரும் தங்கள் சார்பாகப்
பேச வேண்டாம் என்று உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்
கிறேன். இந்த அவையைப் பொறுத்தவரையில் யார் மீதும்,
உறுப்பினர்கள் மீதோ, அமைச்சர்கள் மீதோ குற்றச்சாட்டு
மற்றவைகள் கூற வேண்டும் என்றால் முன் கூட்டியே தங்களிடம்
சொல்லி, தாங்களும் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி அதற்குப்
பதில் சொல்லுவதற்கு வாய்ப்பைக் கொடுத்து, பின்னர் பேச
வேண்டும் என்ற ஒரு மரபு கடைபிடிக்கப்பட்டு வருகிறது
என்றாலும், பேசுகிறபோது எல்லாம் முன் அனுமதியின்றி
ஏதாவது குற்றச்சாட்டு சொல்லுவது என்ற முறையை
திரு. அ. ரகுமான்கான் அவர்கள் சொல்லுகிற அளவுக்கு இருக்
கிறது. இந்த குற்றச்சாட்டை நான் வைக்கப் போகிறேன் என்று
முன்கூட்டிச் சொன்னால், அதற்குத் தக்க மாதிரி அமைச்சர்கள்
தங்களை தயாராக்கிக் கொண்டுவர முடியும். அது அமைச்
சருக்கும் நன்றாக இருக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றாக
இருக்கும். அந்த முறையைக் கடைபிடிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் என்
அனுமதியின்றி குறிப்பிட்டவற்றை எல்லாம் அவைக் குறிப்பி
லிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஏற்கனவே பிரேமா கொலை வழக்கில்
என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது என்று சொல்லி அந்த
ஆதாரத்தைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இது
வரையில் அந்த ஆதாரத்தைத் தரவில்லை. இப்படி பிரேமா
கொலை வழக்கைப்போல் அவருடைய ஆதாரம் ஆகிவிடக்
கூடாது என்பதற்காக முன் கூட்டியே அவரிடம் ஆதாரத்தை
வாங்கிக் கொண்டு பேச விடுவது நல்லது என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன் அனுமதியின்றி ஒன்றைப்
பேசும்போதுதான் பிரச்சினையாக ஆகிவிடுகிறது. ஆதாரம்
இருக்கிறது என்று சபையில் பேசிவிட்டு போய்விடக் கூடாது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சி.ஆர்.பி.சி. ரூலில் ஒரு கொலை வழக்கைப் பற்றி
அதற்கு ஆதாரம் தெரிந்து வைத்து இருந்து அந்த ஆதாரத்தை
அளிக்காமல் இருந்தால் அந்த ஆதாரத்தை வைத்து இருந்தவர்
மீது ஒரு குற்றச்சாட்டே போடலாம். ஆகவே, பிரேமா கொலை
வழக்கில் ஆதாரத்தை அவர்கள் தெரிந்து, அதைச் சொல்லாத
காரணத்தால், அந்தக் கொலை வழக்கு இன்றைக்கு தள்ளுபடி





செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே, ஒரு கொலையை மறைத்த குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் மீது சுமத்தலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சட்ட சபையில் எழுப்பப்பட்டபோது அந்தப் பிரச்சினைக்கு நான் விளக்கம் கொடுத்து இருக்கிறேன். ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் ஐ.பி.சி. செக்ஷன் 206-ன் படி Screening of evidence is an offence ஆதாரத்தை மறைப்பது தண்டனைக்கு உரியது என்பதை நான் அறியாதவன் அல்ல. அந்தப் பிரச்சினையின்போது நான் சொல்லியது அன்றைக்கு** என்று சொன்னேன். (கூச்சல்—குழப்பம்)

டாக்டர் கே.பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வழக்கறிஞர் அல்ல. ஆனால் அன்றைக்குப் பேசியதை முழுவதையும் படித்து வைத்து இன்றைக்கு எடுத்து வைத்து இருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த கொலை பற்றி அரசாங்கத்திற்குப் போதிய ஆதாரம் இல்லை, ஆகவே போதிய ஆதாரம் எங்களுக்குத் தெரியவில்லை. உறுப்பினருக்குத் தெரிந்தால் கொடுங்கள் என்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் ''என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. என்னிடம் வந்து தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். ஆதாரம் இருக்கிறது. அரசு கொலையை மறைக்க முயற்சிக்கிறது'' என்று இதே வாசகத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்கு —..........

(முற்பகல் 9—50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்கள் ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டும்.

39 CRPC—

Failure to give any information about commission of offence is an offence. A private person can arrest any Person if anybody commits an offence within his premises. Any citizen has got the right to arrest anybody. Failure to give any information on commission of an offence is a cognizable offence. It is a serious matter and it is not good. அதற்கு லிமிடேஷனே கிடையாது. இப்போது அவர்கள் பேசினார்கள். அவருக்கு ஆலோசனையாகச் சொல்கிறேன். இந்த மாதிரி விவகாரங்களில் கொஞ்சம் ஹாப்-ஹேண்டாகச் சொல்வது நல்லதல்ல. கிரிமினல் கேஸுக்கு லைஃப் பூராவும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வாலிடிட்டி, (validity) டைம் இருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் விசாரிக்கலாம். அதற்கு ஆதாரம் தம்மிடம் இருக்கிறது என்றால், இப்போதும் கொடுக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான்: நான் சொல்வது வேறு. ..*..*.. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களிடம் ஆதாரம் இருந்தால் நீங்கள் இன்றைக்கு சபை முடிவதற்கு முன்பாக கொடுத்து விடுங்கள். I will take action. நான் பார்த்துக் கொள்கிறேன். கொலை வழக்கிலே போகிற போக்கில் சொல்லி விட்டுப் போவது நல்லதல்ல. ஆதாரம் இருக்குமானால் கொடுங்கள். இது அவையில் ரெஃபர் ஆன வழக்கு. எனவே, விசாரிக்கலாம். I will refer the matter to the Commissioner of Police.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்த விவகாரம் எழுப்பப்பட்ட நேரத்தில், நான் சொல்லிய பதிலை மிகத் தெளிவாக இங்கே சொல்லி, புரொசீடிங்ஸ்-இல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் இந்த அவை நடந்து கொண்டிருக்கும்போதே, சபைக் குறிப்பேட்டிலிருந்து அதை எடுத்து வரச் சொல்லிப் பார்த்துக் கொள்ளலாம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பவும் கேட்டுவிடுகிறேன். உங்களிடம் ஆதாரம் இருக்கிறதா, இல்லையா? ஒவ்வொரு தடவையும் எழுந்து சொல்லிக் கொண்டே இருப்பது நல்லதல்ல. (குறுக்கீடு) ** என்று சொல்லிவிட்டுப் போவது நல்லதல்ல. உங்களிடம் ஆதாரம் இருக்கிறதென்றால் சொல்லுங்கள். (குறுக்கீடு)' 'என்னிடம் ஆதாரம் இருக்கிறது'' என்று பேசியிருக்கிறீர்கள். ''இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கிலே என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது'', என்று சொல்லி இருக்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: சபைக்குறிப்பை எடுத்துப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: படித்துப் பார்ப்பேன். அதிலே நீங்கள் 'ஆதாரம் இருக்கிறது' என்று சொல்லியிருந்தீர்கள் என்றால் நீங்கள் சட்டப்படி எந்த நடவடிக்கைக்கும் உங்களை உட்படுத்திக் கொள்ளுகிறீர்கள். நடவடிக்கைக் குறிப்பிலே, ''என்னிடம் ஆதாரம் இருக்கிறது'', என்று நீங்கள் சொல்லியிருந்தால், நான் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன். ஏனென்றால், இது கொலை வழக்கு. சொல்லிவிட்டுப் போய் விடுவது நல்லதல்ல.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் என்னுடைய நண்பரைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத் தான் நிற்கிறேன். அன்றைக்கு அவர்கள் பேசிய பேச்சினை நானும் இந்த அவையிலே இருந்தவன் என்ற முறையில் முழுமையாகக் கேட்டேன். அவருடைய வெண்கலக் குரலில், 'பிரேமா கொலை வழக்கிற்கு என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது'', என்று அழுத்தமாகவே தெரிவித்தார்கள். அவருடைய பாணியிலேயே சொல்கிறேன். 'பொய் சொல்லக் கூடாது பாப்பா' என்று பாரதியார் சொன்னார். பாப்பாவே பொய் சொல்லக்கூடாது என்றால், என்னுடைய நண்பர் ரகுமான்கான் பொய் சொல்லலாமா?

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியதை, அவைக் குறிப்பேட்டில் இருப்பதை நீங்கள் படித்துப் பாருங்கள். அதோடு இணைத்து, நீங்கள் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லிவிடுகிறேன். கொலை சம்பந்தமாக பொதுவாக சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களைச் சொல்கிறபோது, அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படையில் பேசுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முதலில் நடவடிக்கைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். பிறகு இந்த விவகாரத்தைப் பற்றிப் பேசலாம். அதிலே, நீங்கள் ஆதாரம் இருக்கிறது என்று சொல்லி இருந்தீர்கள் என்றால், நீங்களே சொல்லிவிட்டீர்கள், I will take action and law will take its own course.

திரு. அ. ரகுமான்கான்: மீண்டும் தெளிவாகச் சொல்லி விடுகிறேன். இந்தப் பிரச்சினை குறித்து நீங்கள் சபைக் குறிப்பேட்டைப் பார்த்து, அதற்கு உரிய முறையில் காரியங்கள், ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால், இங்கே திரும்பவும் கேட்பது: அமைச்சர்கள் மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை நேருக்கு நேராகச் சொல்லக்கூடாது, முறைப்படி சொல்லுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். மீண்டும் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற இருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டுக்கள் அத்தனையையும் நான் எழுதி, உங்களிடம் கொடுத்து, அவர்களுக்கும் தெரிவித்து......

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: நேருக்குநேர் சொல்லக் கூடாது என்று சொல்லவில்லை. நேருக்குநேர் தான் சொல்ல வேண்டும். அதற்காக முன்கூட்டி அனுமதி பெற்று சொல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நேருக்குநேர் சொல்லவேண்டுமென்று நெஞ்சுறுதியோடு நண்பர் சொல்லியதற்கு நன்றி. ஆகவே நேருக்குநேர் சந்திக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே முக்கியமான

பிரச்சினை, விவகாரம் என்னவென்றால் ஊழலை ஒழிப்பதற்காகப் போடப்பட்ட சப் கமிட்டியிலே அமைச்சர் திரு. காளிமுத்து இருந்தார். அமைச்சர் பண்ருட்டி இருந்தார். அந்தக் கமிட்டி கலைக்கப்பட்டுவிட்டது. அதற்காக ஒரு காம்ப்ரஹன்சிவ் லா வரும் என்று சொன்னார்களே, ஏன் இதுவரையிலே அது வரவில்லை? ஏன் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை? சபையில் முக்கியமான அமைச்சர்கள் பேசுகிறார்கள். ஒன்றைச் சொல்லிவிட்டு ஒன்றை மறுப்பது என்பது இருக்கக்கூடாது. அமைச்சர்கள் என்ற தலைப்பிலேயும் அப்ரோப்பிரியேஷன் வருகிறது. *** ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கிற பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசுங்கள் **

திரு. அ. ரகுமான்கான்: ஏன் நீக்கவேண்டும்? என்னைப் பற்றிச் சொன்னது மட்டும் இருக்கலாமா? **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விவகாரம் முந்தைய சட்டசபையில் நடந்தது. முன்னால் நடந்ததற்கு எல்லாம் போனால் 15 வருடத்திற்கு முன்னாலே உள்ளதையெல்லாம் நான் எடுக்கவேண்டிவரும்.

திரு. அ. ரகுமான்கான்: என்னுடைய பிரச்சினையும் முந்தைய சபையில் தான் நடந்தது. அதை எடுக்கலாம் என்றால் இதை ஏன் எடுக்கக்கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதும் அதனையே குறிப்பிடுவதால் தான் விவகாரங்கள். நீங்கள் வேகமாகப் பேசும்போது எதை எதையோ பேசுகிறீர்கள் (குறுக்கீடு) அதுவும் முந்தைய சபையில் நடந்தது என்றால் பிரேமா விவகாரம் விசாரிக்க வேண்டாமா? சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: விசாரியுங்கள், விசாரிக்க வேண்டு மென்று சொல்பவனே நான்தானே? ** பற்றிச் சொல்லியது பற்றிப் பேசலாமா வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுவது என்றால் பூராவையும் நான் எடுப்பேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. அ. ரகுமான்கான்: எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கர்நாடக மாநிலத்திலே ஸ்பீக்கருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. நானும் அப்படி அதிகாரத்தோடு செய்தால் சர்க்காரியா கமிஷனில் தப்பித்துப் போனவர்கள் இப்போது தப்பிக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: மிரட்டுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் என்ன மிரட்டல்? எல்லாவற்றையும் எடுப்பேன், பல பேர்கள் வெளியே வருவார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: தப்பு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களால் பல பேர்கள் வெளியே வரப் போகிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் போன சட்டசபையிலே சொன்னது வரலாம் என்றால் (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் விதிமுறைகளின்படி நடத்திச் செல்ல வேண்டிய முழுப் பொறுப்பும் தங்களுக்கு உண்டு. எந்த எந்த நடவடிக்கைகளை எவ்வப்போது எடுப்பது என்பதை முடிவு செய்யவேண்டியது தங்களைச் சார்ந்தது. விண்ணப்பித்துக் கொள்ளவேண்டியது, கேட்டுக் கொள்ள வேண்டியது தான் உறுப்பினர்களுடைய உரிமை. அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தலைவரை உறுப்பினர்கள் கட்டளையிட முடியாது. கேட்டுக்கொள்ளத்தான் உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. ஆகவே இந்த விவகாரத்தை இத்தோடு முடித்துவிடலாம். நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிலே எல்லாத் துறைகளும் வருகின்றன. எல்லாப் பிரச்சினைகளும் வருகின்றன என்று சொல்லி எல்லாப் பிரச்சினைகளையும் இதிலே பேசித் தீரவேண்டுமென்று கருதமுடியாது. இந்த விவாதத்திலேயே திரு. ரகுமான்கான் அவர்கள் முன்பு பல தடவை அவரே இந்தச் சபையிலே பேசியதைத்தான் மீண்டும் மீண்டும் இப்போது பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாங்களும் பதில் சொல்லி வருகிறோம். வரவுசெலவுத் திட்டம் வருகிறது, அதிலே பொது விவாதம் இருக்கிறது. அப்போதும் அவர் பேசலாம். இப்போதே எல்லாவற்றையும் பேசிவிட வேண்டு மென்று இல்லை; இன்று அவை முன்னுள்ளது நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு தான். நாம் ஒரு நெறிமுறைக்கு உட்பட்டுப் பேசவேண்டுமென்று நீங்களும் பல முறைகள் சொல்லி, தங்களுடன் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்ற முறையிலே நாங்களும் திரும்பவும் திரும்பவும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் திரும்பவும் அவர்கள் பேசியதையே பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாம் என் செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தம்முடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், I am speaker for everybody நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதுதான். பிசினஸ் அட்வைசரி கமிட்டி இருக்கிறது, என்ன செய்ய வேண்டுமென்று அது சொல்லலாமே, அப்படிச் சொன்னால் அதை நான் செய்கிறேன். அதிலே எல்லாக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். நான் தன்னிச்சையாகச் செய்யப் போவதில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்படிப்பட்ட விவகாரங்களை எழுப்புகின்ற நிலைமை வருகின்றபொழுதுதான் அதற்குப் பதில் வருகிறது.

(முற்பகல் 10–00)

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவரவர்களே, இத்துடன் முடித்துக் கொள்வதைப்பற்றி எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் ஒரேயொரு வேண்டுகோள். போன சட்டசபைக் கூட்டத்தில் வந்த பிரச்னையை எடுத்தால் என்னுடைய பிரச்னையையும் எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. முன்பு சொன்னது தவறு என்றால், தவறு என்று சொல்லிவிடுங்கள். வேறொன்றுமில்லை. We want some statement. இதைத்தான் சொல்ல முடியும்.

*திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த அப்ரோபிரியேஷன் பில்லில் ஒரு குறிப்பிட்ட ஸ்கோப்பிற்குள்ளே தான் இந்த விவாதம் என்பதைக் கணக்கிற்கொண்டு சுருக்கமாகச் சில வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். கல்வித் துறையைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள். நமது கல்வியமைச்சரவர்களுடைய கவனத்திற்கு நான் என்ன கொண்டு வர விரும்புகிறேன் என்றால், ஏற்கனவே இந்த மன்றத்தில் நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டு உள்ளேன். சாதாரண மக்களுக்கு ஓரளவிற்கு உயர் ரகமான கல்வியைக் கற்க முடியாத அளவிற்கு இப்படிப்பட்ட சுய நிதி கல்வி ஸ்தாபனங்கள் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. அந்த நிலைமை இப்படிப்பட்ட இடத்திற்குத்தான் கொண்டு செல்லுகிறது. இதைப்பற்றி நம்முடைய அமைச்சரவர்களே, கல்வி அமைச்சரவர்களே பேசும்போது குறிப்பிட்டுள்ளதை நான் கவனமாகப் படித்திருக் கிறேன், பத்திரிகைகளில் அந்தச் செய்தி வந்திருக்கிறது. மக்கள் மத்தியில் ஏராளமான மாணவ, மாணவிகள் படிக்க வேண்டுமென்று முன் வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான கல்வியை ஊட்ட வேண்டிய அனைத்து ஸ்தாபனங்களையும், ஏற்பாடு களையும் அரசினுடைய நிதியிலிருந்து செலவழித்துச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம்; ஆகவே, பணம்



வைத்திருப்பவர்கள், வசதி உள்ளவர்கள் அப்படிப்பட்ட உயர் ரகமானக் கல்வியைக் கொடுப்பதற்கு முன்வந்தால் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே நாங்கள் செய்கிறோம்; அப்படிச் செய்தால் அது சமுதாயத்திற்கு உதவியாக இருக்கும் என்பது அவர்களின் வாதம். இதில் இருக்கின்ற ஒரு பெரிய குறை என்னவென்றால், இப்படிப்பட்ட உயர்தரக் கல்வி ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்குத்தான் கிடைக்கும்; சமுதாயத்தினுடைய உயர் மட்டத்திலே இருப்பவர் களுக்குத்தான் அது பயன்படும்; சாதாரண மக்களுக்கு அது பயன்படக்கூடிய நிலையில் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முக்கியமான ஒரு பிரச்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருத்து தெரிவித்திருக் கிறார்கள். உயர் கல்வியைப் பொறுத்தவரையில், அரசிடம் போதுமான அளவிற்கு நிதி ஆதாரங்கள் இல்லை, செலவு செய்ய முடியாத நிலையில் தனிப்பட்ட நிறுவனங்களை, தனிப் பட்ட நபர்களைப் பயன்படுத்திக் கொள்வது என்ற ஒரு முறையில் தனியாருக்கு இப்பொழுது அனுமதி தந்து வருகிறோம். அதையும் ஓரளவிற்குத்தான் தர முடியும். ஏனென்றால் ஓரளவுக்குத்தான் அப்படி வருகிறார்கள், நிறையப்பேர் ஆரம்பிக்கும் நிலை இல்லை. ஆனால் இதிலே கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான அடிப்படை என்னவென்றால், பொதுவாக இப்பொழுது புதிய கல்விக் கொள்கையிலேகூட, தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, முதியோர் கல்வி ஆகிய இந்தப் பகுதிகளின் கீழ் அதிகமான அளவிற்கு அரசுப் பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்றும், உயர் கல்வியைப் பொறுத்தவரையில் கூடுமானவரையில் மாணவர்களே செலவுகளை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இந்த அமைப்பு இருக்க வேண்டுமென்றும் சொல்லி, பேசப்பட்டுக் கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் மாநில அரசினுடைய வருமானத்தில் பெரும்பாலும் விற்பனை வரியின் மூலம், சாதாரண மக்கள் தரும் பணத்தின் மூலம்தான் கிடைக்கிறது. ஆனால், அவர்களின் குழந்தைகள் என்று பார்க்கின்றபொழுது 1-வதிலே நின்று விடுகிறார்கள். 2–வதிலே நின்று விடுகிறார்கள், 5-வதிலே நின்று விடுகிறார்கள், 10-வதிலே நின்று விடுகிறார்கள், 12-வதுக்கு மேல் அதிகம் போவதில்லை.

உயர் கல்வி ஸ்தாபனங்கள் என்று வருகின்றபொழுது, வசதி படைத்தவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான் அதிகமாச வருகிறார்கள்; கொஞ்சம்பேர் இதிலேயிருந்தும் வரலாம். எனவே, சாதாரண மக்களுக்கு—இந்தப் பகுதி மக்களுக்குச் செலவு செய்வதும், உயர் கல்வியைப் பொறுத்தவரையில் தனிப் பட்டவர்கள். தனிப்பட்ட நிறுவனங்கள் செலவை ஏற்க வேண்டும், வரி வசூலிக்கின்ற அந்த முறையிலே பார்த்தாலும்கூட இது நியாயமாகப் பயன்படுகிறது. ஆனால், அதற்காக ஏழை

களுக்கு என்ன செய்வது என்ற கேள்வி எழுகிறது. அரசு அவர்களுக்கு ஸ்டைபண்ட், ஸ்காலர்ஷிப், உதவித் தொகை தருகின்ற முறையில்தான் செய்ய வேண்டும். எனவே, இது மேலாகப் பேசத் தக்க பிரச்னை அல்ல. அடிப்படையிலேயே வரி வசூலை, அரசு பொது மக்களிடத்திலே எப்படி வசூலை செலவு செய்கிறது என்கிற அடிப்படையிலே பார்க்கிறபொழுதுகூட இந்தக் கருத்துச் சரியாக இருக்கும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நான் சொல்லும்படியான கருத்துக்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும்படியான விளக்கம் பொருத்தமானது அல்ல என்பது என்னுடைய கருத்து. ஏன் சொல்கிறேன் என்றால், அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து நமக்குத் தெளிவாகத் தெரியலாம். பல்லாயிரக்கணக்கான மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த மாணவர்கள், மாணவிகள், கீழ் மட்டத்தில் இருக்கிற தொழிலாளர்கள் போன்று, கிராமத்தில் சாதாரண ஏழை விவசாயிகளின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்தான்—ஓவர் வெல்மிங் மெஜாரிட்டி மாணவர்களாக இன்றைக்குப் படித்துக் கொண்டிருக்கிறார்கள் அப்படிப்பட்ட ஏழை சமுதாயம் இன்றைக்கு நாட்டில் இருக்கிறது. 50 சதவீதத்துக்கு மேல் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும்படியான நிலை நம் நாட்டில் இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, உயர்நிலைக் கல்வி முழுவதையும் தனியார் துறையிலே அனுமதிக்கும்போது, புதிதாக இன்ஜினீயரிங் கல்லூரிகளையும் இப்பொழுது மருத்துவக் கல்லூரிகளையும்கூட அனுமதிக்கும் போது, அவர்கள் ரூ. 1 இலட்சம், ரூ. 2 இலட்சம், ரூ. 2½ இலட்சம் என்று காப்பிட்டேஷன் ஃபீஸ் வாங்கினால், எப்படி அந்த இடத்திற்கு இந்த மாணவர்கள் செல்ல முடியும்.

பாதி ஸ்தானங்களை அரசு நிரப்பலாம் என்றால் கூட, அங்கே வரும்போது, மார்க்கிலே சாம்படிஷன் வந்துவிடுகிறது. மிகுந்த பண வசதியோடு, விசேஷமான டியூஷன் வகையறாக் களுக்கு ஏற்பாடு செய்து, அதிலே முன்னணியில் நிற்கிற மாணவர்களுக்குத்தான் அங்கேயும் வாய்ப்பு வருமே தவிர, மற்றபடி சாதாரண மட்டத்தில் இருக்கிற மத்திய தர மக்களுக்கோ அல்லது கீழ் மட்டத்தில் இருக்கிற உழைப்பாளர் மக்களுக்கோ, அத்தகைய வாய்ப்பு இல்லை. அப்படிப்பட்ட மாணவர்கள் சேர முடியாது என்பதுதான் அனுபவத்திலே இருக்கிற நிலைமை.

எனக்கு நேரடியான அனுபவமே இருக்கிறது. 82% மார்க் வாங்கிய ஒரு தொழிலாளி குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஒரு தனியார் இன்ஜினியரிங் கல்லூரியில் சேர மனு போட்டால், 80% 90% மார்க் வாங்கிய மாணவர்கள் லிஸ்டில் இருக் கிறார்கள். ஆகவே, உனக்குக் கொடுக்க முடியாது என்று பதில் சொல்லிவிட்டார்கள். இதை கவனத்திலே கொள்ளவேண்டு மென்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, காப்பிட்டேஷன்



ஃபீஸ் என்பதைத் தடை செய்து அரசாங்கம் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் துறையில் இந்தக் கல்வியை வர்த்தக சரக்காக்குவதைத் தடை செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

இன்னொரு முக்கியமான விஷயம். நம்முடைய அரசாங்கம் வரி விதிப்பதிலே இப்பொழுது சில குறைபாடுகள் இருக்கின்றன. ஏற்கனவே இது சம்பந்தமான ஒரு கோரிக்கையினை நான் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கும் நிதி அமைச்சர் அவர் களுக்கும் கூட சமர்ப்பித்திருக்கிறேன். உதாரணமாக, மோட்டார் வெகிகில்ஸ் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து, புதிதாக வரியை உயர்வு செய்திருக்கிறார்கள். பஸ்களிலே, அதே மாதிரி குறைந்தபட்சக் கட்டணத்திலிருந்து, சகல பகுதி கட்டணங் களையும் உயர்த்தியிருக்கிறார்கள். லாரிகள், டெம்போக்கள் போன்ற வாகனங்களுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். சாதாரண மக்கள் உபயோகப்படுத்தக் கூடிய, கிராமத்து மக்கள், காய்கறிகளை மார்க்கெட்டுக்குக் கொண்டுவர பயன்படுத்தக்கூடிய டெம்போ வாகனங்களுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அந்த வண்டியினுடைய எடையே 2,000 கிலோ. பர்மிட்டிலே அவ்வளவுதான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் 1,250 கிலோ பாரத்தை அவர்கள் ஏற்றலாம். ஆக, 3,250 கிலோ பாரம் உள்ள ஒரு வண்டிக்கு 3,500 கிலோ என்று அவர்கள் ஃபேஸ்ட் மானரிலே, அந்த வரியை விதித்து, படிப்படி யாக மேன்மேலும் கொண்டு போயிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்பொழுது, 10,000 கிலோ ஏற்றக்கூடிய ஒரு லாரிக்கும், இந்த டெம்போ வாகனுக்கும் கணக்கிட்டுப் பார்க்கும்போது, ரூ. 200 தான் வித்தியாசம். அந்த அளவுக்குச் சிறு வாகனங்களின் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இது சரியான நடவடிக்கை அல்ல. இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரும்போதே, இங்கே அதை பரிசீலிக்கும்போதே, உடனே மாற்றம் செய்ய வேண்டு மென்று திருத்தம் செய்யாது விட்ட குறை, எங்களிடத்திலே இருக்கலாம். ஆனால், அதை இப்போதாவது அரசு கவனத்தில் கொண்டு, அந்தக் குறையை இப்போது நீக்கவேண்டும். இப்படி வரி விதிப்பதனால், அடிமட்டத்தில் இருக்கும்படியான, சாதாரண மக்கள், இந்தச் சிறு வாகனங்களைக் கூடப் பயன்படுத்த முடியாமல், பணம் படைத்தவர்கள்தான் அதைப் பயன்படுத்த முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதற்கடுத்து, இன்றைக்கு அரசாங்க நடவடிக்கையிலே, போலீஸ் இலாகாவினுடைய கடுமையான தாக்குதல்கள் ஏழை மக்கள் மீது பலமாக விழுந்திருக்கிறது.

(முற்பகல் 10–10)

இது பல சந்தர்ப்பங்களிலே இந்த மன்றத்திலே நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிற உதாரணங்களின் மூலம் தெரியவரும். ஏற்கெனவே நாம் இந்த மன்றத்திலே எடுத்துக்காட்டியிருக்கிறோம்,

என்றபோதிலும் உதாரணத்திற்கு இன்னொன்றையும் சொல்கிறேன். 2, 3 நாட்களுக்கு முன்னால் நான் ஒரு பிரச்சனையை இங்கே கிளப்ப விரும்பினேன். பேரவைத் தலைவர் அவர்கள் நீங்கள் முன் நோட்டீஸ் இல்லாமல் எழுப்ப வேண்டாம் என்று சொன்னதால் நிறுத்திவிட்டேன். பழனி நகரில் மாணவர்கள் மாநாடு நடத்துவதற்காக 10, 20 பேர் சேர்ந்து ஒரு குழுப்பாக பிரச்சாரம் செய்துவந்தார்கள். கடைகளுக்கும், வீடுகளுக்கும் சென்று நோட்டீஸ் விநியோகம் செய்து, பிரச்சாரம் செய்த போது முத்துசாமி என்ற டி.எஸ்.பி. அவர்களை தடுத்து நிறுத்தி, கூட்டிக் கொண்டுபோய், நீங்கள் இப்படி பிரச்சாரம் செய்தால் உங்களை ஜெயிலுக்குள் தள்ளிவிடுவேன் என்று தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இப்படி பல தாக்குதல், பொய் கேஸ் எல்லாம் நமக்குத் தெரியும். அதுபற்றி பட்ஜெட்டில் நிறைய பேசலாம். ஆனால் இது ஒரு சாதாரண ஜனநாயக உரிமை. இப்படிப்பட்ட வகையிலே மாணவர் சங்க உரிமை தடுக்கப்படுகிறது.

இதிலே இருக்கிற பாரபட்சம் என்னவென்றால், அண்ணா தி.மு.க. தலைமையில் இருக்கிற மாணவர்கள், இந்தக் காரியம் நடக்கிறபோது, அந்த பழனி நகரில் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எந்தவிதமான தாக்குதலும் இல்லை. ஆனால் இந்த மாணவர்கள் கொண்டு போன நோட்டீஸ் எல்லாம் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். இப்படிப்பட்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகள் எல்லாம் நடக்கின்றன என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஜனநாயக விரோத நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் ஜனநாயக முறைகளை அனுசரிக்காமலும், வரி விதிப்பின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்காமலும், கல்வித் துறையில் சாதாரண மக்களுடைய குழந்தைகள் படிக்க வசதி இல்லாமல் இருப்பதாலும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பது சரியல்ல என்று கூறி, என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின்மீது மிகச் சுருக்கமாக கிடைத்த வாய்ப்பில் இரண்டொரு விஷயங்களை மட்டும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முதலாவதாக, மாவட்டப் பிரிவினையைப் பொறுத்தவரையில் கடந்த சில தினங்களாகவே கடுமையான சில சர்ச்சைகள் நாட்டில் நடந்துகொண்டிருக்கின்றன. உண்மையிலேயே மாநில அரசும் இந்த சட்டமன்றமும் மிக அக்கறையோடும் பொறுமையோடும் கவனிக்க வேண்டிய ஒன்று இந்த மாவட்டப் பிரிவினை குறித்ததாகும்.







இந்த மாநிலத்திற்குள் இருக்கிற மாவட்டங்களைப் பிரிக்கிற போது முக்கியமான பிரச்சினையாக, பதட்டமானப் பிரச்சனையாக இருப்பது பெயர் வைப்பதில் எழுகிறது. தங்களுடைய வாழ்நாள் எல்லாம் மக்களை ஒன்றுபடுத்தி முன்னேற்ற பாடுபட்ட தலைவர்களை முன்நிறுத்தி, மக்கள் பிளவுபட்டு கலவரம் ஏற்படும் சூழ்நிலை இந்த பெயர் வைக்கும் பிரச்சனையினால் எழுகிறது. வ. உ. சி. போன்றவர்கள் ஆனாலும் சரி அல்லது தேசிய விடுதலைக்கு முன்னணியில் நின்று குரல் கொடுத்த பெரியவர்கள் ஆனாலும் சரி அவர்களுடைய பெயரால் இன்றைக்கு பதட்ட நிலை நிலவுகிறது.

அதைப்போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில்கூட, அந்த மாவட்டத்திலே பிறந்து, மறைந்த பொதுவுடைமைத் தந்தை ஜீவா அவர்களின் பெயரை பேருந்துக் கழகத்திற்கு வைப்பதில் தகராறு நிகழ்ந்தது. அதைப்போன்று இன்னும் பல்வேறு மாவட்டங்களில் இந்தப் பிரச்சனை இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தாலும் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டுமென்ற முறையினாலும் நான் வேதனையோடு இந்த விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். இத்தகைய பெரியவர்களின் பெயர்களை எந்த நோக்கத்திற்காக நாம் வைக்கிறோமோ அதற்கு எதிராக மக்கள் நடந்துவிடுகிறார்கள் என்றால் மாநில அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டும். மக்கள் பிளவுபடக் கூடாது என்று செய்கின்ற காரியத்தினால், அதை ஒரு கருவியாக வைத்து மக்கள் பிளவுபடும் நிலை எழுமானால், நாம் எண்ணுகின்ற நோக்கத்திற்குப் பக்குவப்படாத மக்கள் மத்தியிலே அந்தப் பெரியவர்களின் பெயர்களை எழுப்புகின்ற வாய்ப்பினை தடுக்கின்ற முறையில் மாவட்டத் தலைநகரின் பெயராலேயே அந்த மாவட்டம் அழைக்கப்படுவதில் எந்தவிதமான தவறும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏதாவது ஒரு சம்பவம் நடைபெறுகிறபோது, அதைத் தடுக்க ஒரு நடவடிக்கையை மேற்கொள்கிறோம். எடுத்துக்காட்டாக ஜாதி சம்பந்தப்பட்ட சில பிரச்சனைகள் எழுகின்றன. அந்த ஜாதி சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்பிலே இருக்கிற சில பெரியவர்கள் கூட அப்படிப்பட்ட நேரங்களில், தங்களுடைய பொறுப்பை மறந்து, ஜாதிப் போர்வைக்குள் புகுந்துகொண்டு ஜாதியின் அந்தஸ்தை நிலைநாட்ட முற்படுகின்ற நிலைமை இருக்கிறது. நான் திராவிட இயக்கத்தின் நல்ல பாரம்பரிய உணர்வை மதிக்கின்றவன் என்ற முறையில் தெரிவிக்கிறேன். காலம் எல்லாம் ஜாதி ஒழிப்புக்கு குரல் கொடுத்த பகுத்தறிவு தந்தை பெரியார் பாரம்பரியம் என்ற உரிமைக்கு உரியவர்களாக அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்கள் இந்த ஜாதி பெயரால் பிளவுபட்டு நிற்பது என்ன நியாயம் என்று கேட்கிறேன்.

ஜாதிய அமைப்புக்களில் அங்கம் பெறுவது திராவிட இயக்கத்திற்குப் பொருத்தமானதுதானா? திராவிட இயக்கத்தால் ஒத்துக்கொள்ளக்கூடாத ஒரு விஷயத்தை, திராவிட இயக்கத்தில் இருந்து வளர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் மேற்கொள்வது கிஞ்சித்தும் பொருத்தம் இல்லை.

மாநிலத்தை ஐக்கியப்படுத்த உதவுகிற விஷயம் இல்லை இது. எனவே இந்த இலாக்கா விஷயத்தில் மாநில அரசு ஜாதிய உணர்வுகளின் அடிப்படையில் நடத்தப்படுகிற நிகழ்ச்சி களை முற்றாகக் களைய வேண்டும். அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அது வெடிக்கிறது. அவ்வாறு வெடிக் கிறபோது—மாநில அரசை நான் ஆழமாகவே. குற்றம் சாட்ட விரும்புகிறேன்—மாநில அரசு கைகட்டி வேடிக்கை பார்க்கிறது. அவர்கள் இதைத் தடுக்கும் திறத்தை இழந்து விட்டவர்களாக நின்றுவிடுகிறார்கள். இத்தகைய நிலைமை ஏற்படுகிறபோது பல்வேறு கலவரங்கள் ஏற்பட்டு மக்கள் அழிந்த பிறகு அனுதாபத் தீர்மானம் போடுவதால் மட்டும் எந்த நலனும் ஏற்பட்டுவிடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அரசு திட்டங்களை நிறைவேற்றுவதிலே கடுமையான தேக்கமும், பலவீனமும் தொடர்ந்து நீடிக்கிறது. ஒரு உதாரணத் திற்கு என்னுடைய தொகுதியிலே உள்ள ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 13-12-1983 அன்று திருப்பூர் நகரத்திற்கு இரண்டாவது குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்று வதற்குரிய அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்பிறகு இரண்டாண் டுக்காலம் கடந்து முடிந்ததற்குப் பிறகும்--குடிநீர் பிரச்சனைப் பற்றி நான் குறிப்பிடவேண்டியதில்லை. குடிநீர் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது, அத்தியாவசியமானது என்பது அனைவருக்கும் தெரியும்- - ஆனால் அடிக்கல் நாட்டப்பட்ட பின் இரண்டாண்டுக்காலம் ஆகியும் கூட இத்தகைய நிலைமையே நீடிக்கிறது என்றால் என்ன பொருள்? நண்பர்கள் ஆத்திரப்படக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். எதிர்த்தரப்புக் கட்சி வெற்றி பெற்றதால் அதைக்கண்டிக்கிற முறையில் ஆளுகிற கட்சி நண்பர்கள் அந்தப் பகுதிக்குத் தண்டனை வழங்குகிறார்களா என்று நினைத்தால் அதில் தவறு எதுவும் இருக்க முடியாது. அத்தகைய நினைவுக்கு அந்தத் தொகுதி மக்கள் ஆட்படுகிற போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தின் அரசியல் கௌரவம் பாழ்படுத்தப்பட வில்லையா? பாதிக்கப்படவில்லையா?

எனவே அத்தகைய நிலைமைக்கு யார் காரணமோ அவர்களுக்கு இரையாகின்ற போக்கு இலாக்காக்களில் இருக்கின்றது. அதிகாரிகள் மட்டத்தில் இத்தகைய போக்கு இருக்கிறது. இது நல்ல முன் உதாரணம் இல்லை என்பதால் இத்தகைய போக்குக்கு இரையாகி இருக்கின்ற அந்தத் துறையை





முடுக்கி விடுகிறவகையில் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும், மேலும் சிரத்தை எடுத்துக்கொள்ளவேஸ்டும் என்று என்னுடைய மரியாதைக்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து பார்த்தார்கள். அதற்காக உண்மை யிலேயே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு அவர்கள் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். ஆனால் அவர்களை யும் மீறி பல்வேறு காரியங்களைச் செய்கிற புத்திசாலித்தனமான அதிகாரிகள் அந்தத் துறைகளில் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அந்தத் தாக்கோலை வைத்துக்கொண்டிருப்பவர்களாக, அதிகாரிகளை இயக்குபவர்களாக அமைச்சர்கள் இல்லை என்று சொன்னால், அந்த வகையில் நிர்வாகம் இல்லை என்று சொன்னால், கொஞ்சம் நாம் தூங்குவோமேயானால், அசந்து விடுவோமேயானால் அமைச்சர்களை இயக்குகிற அதிகாரிகளும் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதைப் புரிந்துகொண்டு இந்தத் துறையில் இருக்கிற பலவீனத்தைப் போக்கவேண்டும். எப்போதுதான் அந்தத் திட்டம் நிறைவேறும்? அல்லது அங்கே கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வெற்றி பெற்றவர்கள் இருக்கின்ற வரையில் அது நிறைவேறாதா? அல்லது நிறைவேறுவதற்கு ஏதாவது காலவரம்பு உண்டா? மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கூட கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே குறிப்பிட்டார்கள், 1985-ஆம் ஆண்டு இறுதிக்குள் அந்தத் திட்டப் பணிகள் துவக்கப்படும் என்று பேரவையிலேயே அறிவித்தார்கள். அந்த அறிவிப்பையே அரிக்கிற கரையான்களாக அதிகாரிகள் இருந்து கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதை நந்தியாக இருந்து கொண்டு தடுக்கிறார்கள். அதற்கு எதிராக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? அந்தத் திட்டத்தை எப்போது நிறைவேற்றப் போகிறது என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்து நிலை நாட்டப்பட்டு விடக்கூடாது என்பதற்காக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் வெற்றி பெறாத தொகுதி அது என்பதற்காக அந்தக் குடிநீர்த் திட்டம் புறக்கணிக்கப்படுகிறது என்பதைப் போல் ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் எல். ஐ. சி. உடன் வழங்குவதிலே ஏற்பட்ட காலதாமதம் காரணமாகத்தான் அதிலே சிக்கல் ஏற்பட்டதே தவிர வேறல்ல. ஒருவேளை எங்களுக்கு வேண்டு மானால் உங்கள் மீது கோபம் இருக்கலாம்; ஆனால் எல். ஐ. சி, —க்கு உங்கள் மீது கோபம் இருக்க எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. எனவே அதிலே ஏற்பட்ட சிக்கல்தான் காலதாமதத்திற்குக் காரணம். இப்போது அந்தத் திட்டப் பணிகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக என்மீது கோபம் இருக்க முடியாது. ஆனால் அமைச்சரை ஒத்தவர்கள் அந்த ஆளுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை என்பதையும், அது நிதர்சனமான உண்மை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையினைப் பொறுத்தவரையில் எதிர்த்தரப்பிலே இருக்கின்ற பல நண்பர்கள் குறிப்பிட்டதுபோல் உயர் கல்வி. தொழில் நுட்பகேல்வி போன்றவற்றை இப்போது காசு கொடுத்து வசதி படைத்தவர்கள் மட்டுமே பெற்றுக்கொள்வதற்குரிய ஒரு விபத்து தமிழ் நாட்டில் எழுந்துவிட்டது. இத்தகைய நிலைமை தொடர்ந்து நீடிப்பது தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சியை எதிர்காலத் திட்டத்தைப் பாதிக்கும் என்பதை நான் குறிப்பிட்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கல்வித் துறையில் எப்படிப்பட்ட பலவீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் மேல்மருவத்தூர். அதுவும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஜாதிக் கலவரங்களும், வேறு கலவரங்களும் நடந்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே தமிழகத்திலே இருக்கிற மக்கள் அத்தகைய கலவரங்களுக்கு ஆட்படாமல் இருப்பதற்கு காரணமாக இருக்கக்கூடிய, தந்தை பெரியாருடைய கொள்கைகளை போற்றி வருகின்ற இயக்கத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆளுகின்ற இந்த ஆட்சியிலே தான் மேல்மருவத்தூரிலே, அந்தக் கோயிலின் கீழ் நடைபெற்று வரும் பொறியியல் கல்லூரியில் நடைபெறும் அட்டூழியங்கள் சொல்லி மாளாத அளவுக்கு இருக்கின்றன.

[முற்பகல் 10-20.]

அங்கே மாணவர்களுக்கு கழிப்பிட வசதி இல்லை, குடி தண்ணீர் வசதி இல்லை. எந்தவிதமான வசதியும் கிடையாது. அந்த வசதிகளை அந்த ஆதிபராசக்தி கொண்டு வந்து தருவதாக வும் இல்லை. நடைமுறையில் இப்படி இருக்கிறபோது, அவற்றை எடுத்துச் சொன்னதற்காக, அங்கே பல மாணவர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள், தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். கோவிலின் பெயராலே தெய்வீக புருஷர் என்ற அவதார தோற்றத்தை மட்டும் வைத்துக் கொண்டு அதர்மத்தையே வளர்க்கப் பாடுபட்டு வருவதை இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அனுமதிக்கிறதா? அத்தகைய நடவடிக்கைகளை ஒப்புக்கொள்கிறதா என்பதை நான் அறிந்துக் கொள்ள விளம்புகிறேன். ஆகவே அத்தகைய போக்கை நாம் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. ஆகவே கல்லூரிகளுக்கு அனுமதி கேட்டு வரும்போது, உரிமம் வழங்கப்படுவதற்கு முன்பே, அவர்கள் தேவையான, போதுமான வசதிகளை வழங்கு வதற்கு வகை செய்யவில்லை என்றால், அந்த உரிமம் ரத்து செய்ப்படும் வகையில் செய்ய வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியில் அவ்வாறு வைத்திருக்கிறார்கள் என்றால் அதற்கு அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்களைத்தான் குற்றம் சொல்லவேண்டும். ஆதிபராசக்தியின் மேல் குற்றம் இல்லை. ஆதிபராசக்தியின் மேல் குற்றம் சாட்டுவதும் சரியல்ல. ஏனென்றால் பாரதியார் அவர்கள் ரஷ்ய புரட்சியைப் பற்றி பாடும்போது பராசக்தியின் துணையைத்தான் விரும்பினார்கள்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆனால் ஆதி பாரசக்தியின் பெயராலே அவர்கள் தர்மத்தை போதிப்பதாகச் சொல்லிக் கொண்டு, அதர்மத்தையே தமது அன்றாடம் வாழ்க்கையாகக் கொண்டு இருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட லைசன்ஸ் வழங்குவது சரியல்ல. அது முறைப்படி செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து வழுவுவது போன்றதாகும். ஆகவே அந்த லைசன்சுகளை, உரிமையை ரத்து செய்ய வேண்டாமா என்பதை தெரிவிக்கத்தான் நான் அந்தப் பிரச்னையை கிளப்பினேன்.

இறுதியாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். வீட்டு வசதி துறை குறித்து. வீட்டு வசதி துறையைப் பொறுத்தவரையில் பெருத்த மதிப்போடும் மரியாதை யோடும் நான் அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர் களைப் பாராட்ட விரும்புகிறேன். ஆனால் அவர்களுக்கு கீழே இயங்கக் கூடிய அந்த வீட்டுவசதி வாரியம் என்பது ஏதோ பேரரசின் கீழே இயங்கக்கூடிய ஒரு சிற்றரசு போல இயங்கிக் கொண்டிருக்கிறது. உண்மையிலேயே கனிவோடும் மதிப்போடும் எதிர் தரப்பினராலேயே மதிக்கக்கூடிய அளவுக்கு இருந்துக் கொண்டிருக்கிற, அந்த அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருந்து அந்த வீட்டு வசதி வாரியம் முற்றிலும் விலகியிருக்கிறதா? அல்லது அமைச்சருக்கு மேலாக வீட்டு வசதி வாரியத் தலைவருக்கு அதிகாரம் அளவிற்கரிய முறையில் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை தெரிந்துக்கொள்ளத்தான் ஒரு விஷயத்தை அறிய விரும்புகிறேன்.

அந்த வீட்டு வசதி வாரியம் என்பது நலிந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காகத்தான் உருவாக்கப்பட்டதே தவிர, ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட வில்லை. மாநில அரசு என்பது அண்ணா தி. மு. க. வினுடைய பிராப்பர்ட்டி அல்ல. மாநில அரசு என்பது மாநில மக்களின் பொதுவான பிராப்பர்ட்டி. ஆக அரசு சார்புள்ள ஒரு...

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, நலிந்தவர்களின் பட்டியலில் அண்ணா தி.மு.க. வினா இருந்தால் அதற்காக அவர்கள் பாதிக்கப்படலாமா?

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நலிந்தவர்களின் பட்டியலில் இருக்கும் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வினருக்கு வீடு வழங்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஆனால் ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபையிலே இப்படி எல்லாம் சொல்ல முடியாது. அதை அவைக்குறிப்பிலிருந்து எக்ஸ்பென்ஜ் பண்ணுகிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி ஸ்விப்பிங் காக அலிகேஷன் சொல்வது சரியல்ல. யார் எங்கே அப்படி அறிவித்தார்கள், இது எல்லாம் சரியல்ல என்று ஏற்கெனவே எடுத்துவிட உத்தரவிட்டிருக்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லி முடிக்கிறேன். அதற்குப் பிறகு நீங்கள் ரூலிங் கொடுக்கலாம். கொஞ்ச நேரத்திற்கு முன்பு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குறிப்பிட்டார்கள், பத்திரிகைச் செய்திகளைப் பற்றி, தமிழ்நாட்டில் எல்லா பத்திரிகைகளிலும் வெளி வந்தது. *** பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக எடுக்கப்படுமா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்திரிகைச் செய்தி களை ஆதாரமாக எடுப்பது இல்லை. எடுக்கக் கூடாது. அப்படி நீங்கள் ஆதாரமாக எடுத்துச் சொல்வது என்றால் அதற்கான பொறுப்பையும் தாங்கள் ஏற்றுக்கொள்வதாக இருத்தல் வேண்டும். ஆகவே தான் நான் எக்ஸ்பென்ஜ் பண்ணி யிருக்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: அமைச்சர் அவர்களின் கருத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மயிரிழை கூட அமைச்சர் அவர்களின் நடவடிக்கையில் எனக்கு மாறுபாடில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது அரை மணி நேரத்திற்கு முன் பத்திரிகைச் செய்திகள் ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படுமென்று அனுமதித் தார்கள். அப்படி அனுமதிக்கப்படாது என்று தாங்கள் ரூலிங் கொடுத்தால் எங்களுக்கு ஆட்சேபணை இலலையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்திரிகை செய்தியை ஆதாரமாக வைத்து பேசக் கூடாது. பேசுவதாக இருந்தால் முன்கூட்டியே அதை பேரவைத் தலைவரிடம் காண்பித்து அனுமதி பெற்று, பொறுப்பேற்று பேச வேண்டும்.

திரு. கு. சுப்பராயன்: ஒரு விஷயத்தைச் சொல்கிறபோது அந்த விஷயத்தை மறுப்பதில் எந்தவித ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆனால் பெரும்பான்மை இருக்கிறதென்ற நிலையில் குரல் வெளிவருவதையே தடுக்க முயற்சிப்பது ஒருபோதும் ஜனநாயகத்தில் வெற்றி பெறாது. பெரும்பான்மை என்ற காரணத் தாலே வலுவான குரல் எழுப்பினால் ஒரு குறிப்பிட்ட வட்டத் திற்குள்தான் வெற்றி பெறலாம். வரலாற்றில் வெற்றி பெற முடியாது என்பதைக் குறிப்பிட்டு உரையை முடித்துக் கொள் கிறேன்.

திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள்: துணைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற அந்த அப்ரோப்ரேயஷன் பில்லில் இரண்டொரு கருத்துக்களைத் தெரி விக்க விரும்புகிறேன். இந்த பில்லில் பணம் ஒதுக்கப்படுகிறது. ஒதுக்கப்படுகிற பணம் அரைகுறையாக விடப்பட்டிருக்கிற திட் டங்களை முழுமையாக நிறைவேற்றுவதற்கு போதுமானதாக இல்லையென்பதால் இன்னும் கொஞ்சம் அதிகமாக பணம் ஒதுக்குவது நலமாக இருக்குமென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

கல்வியைப் பற்றி சொல்லும் போது என்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவைகளில் மார்க் அடிப்படையில் அட்மிஷன் கொடுக்கப்படுவதால், உண்மையில் எங்களைப் போன்றவர்களுக்கு தொந்தரவு இல்லாமல் இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். காரணம் மார்க்கை வைத்து மாணவர் களை அவர்கள் சேர்ந்து விடுகிறார்கள். அடுத்து தனியார் களுக்கு கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி கொடுத் திருப்பதிலும் அரசாங்கத்தின் அனுமதிபேரில் மார்க் அடிப் படையில் அட்மிஷன் கொடுக்கப்படுவதால், ஏழை எளிய மாணவர்கள், குறிப்பாக அரிசன மாணவர்கள் கூட அவற்றில் இடம் பெறுகிறார்கள். இந்த நிலையில் நான் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு என்ஜினியரிங் கல்லூரியில், பெயர் சொல்ல விரும்பவில்லை, எஸ்.சி. பையன் ஒருவனுக்கு முதல் செமஸ்டரில் 4,800 ரூபாய் வசூலித்தார்கள். அதற்கு பிறகு இன்னும் 1,800 ரூபாய் கட்டினால்தான் கல்லூரியில் இருக்க முடியும், தொடர்ந்து படிக்க அனுமதிக்க முடியுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கல்லூரியில் இடம் கொடுக்கப் பட்டும் அந்த ஏழை குழந்தை பணம் கட்ட முடியாததால் வெளியே போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஏழை மக்களால் 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று பணம் கட்ட முடியாத நிலைமை இருப்பதாலே....

136448

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் சொல்கிற போது எந்தக் கல்லூரியில் அப்படி நடைபெற்றது என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அமைச்சர் நடவடிக்கையெடுக்க வசதி யாக இருக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : துணைத்தலைவர் அவர் களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் தனியார் என்ஜினியரிங் கல்லூரியில் படிக்கிற முருகேசன் என்ற மாணவனுக்கு அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. நாம் எவ்வளவோ பணம் செலவு செய் கிறோம். கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் நமக்கு வருகிறது. ஆகவே கிண்டியில் இருக்கிற கல்லூரியைப் போல, திருச்சி ஆர். இ. சி. கல்லூரியைப் போல இன்னும் ஒரு சில கல்லூரிகளை அரசாங்கம் உருவாக்குமானால் இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு கல்லூரிகளில் பணம் இல்லாமல் படிப்பதற்கு வழிவகை ஏற்படும் என்பதற்காக இதனைச் சொன்னேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு பல நல்ல காரியங்களைச் செய்கிறோம். அதை நான் பாராட்டுகிறேன். இன்றைக்கு கரும்பு விவசாயிகளை எடுத்துக் கொண்டால் உண்மையில் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாண்டியராஜ புரம் மதுரை ஷுகர்ஸ் ஆலையை அரசாங்கம் எடுத்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அந்த ஏரியாவிலே திருமணம் செய்திருக்கிற காரணத்தால் அவர்கள் அந்தப் பகுதியைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கிறார்கள். இப்போது அண்ணா மாவட்டத்தில் எம்.எல்.ஏ. ஆகவும் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு ஏக்கர் கரும்பு விவசாயம் செய்வதற்கு 2,000, ரூபாய்க்கு மேல் ஆகிவிடுகிறது. இன்றைக்கு கரும்பிற்கு 195 ரூபாய் என்று விலை நிர்ணயித்து கொடுக்கக் கூடிய நிலை அந்த ஆலையில் இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பீக் பீரியடில் கரும்பு அறைக்கப்படாத காரணத் தால் அவர்களுக்கு ரெக்கவரி அடிப்படையில் பணம் கொடுக்க முடியவில்லை. பாண்டியராஜபுரம் ஆலைக்கு அனுப்பக்கூடிய கரும்பு ஆலையில் அறைக்கப்படாத காரணத்தால் அரசாங்கம் முன் நின்று அலங்காநல்லூருக்கும், பொன்னி சர்க்கரை ஆலைக்கும், அமராவதி சர்க்கரை ஆலைக்கும் அனுப்பியது. அங்கே டன்னிற்கு 235 ரூபாய், 240 ரூபாய் என்று கொடுத்திருக்

(முற்பகல் 10-30)

கிறார்கள். ஆனால் இந்த பாண்டியராஜபுரத்திலே அறுத்த கரும்புக்கு எல்லாம், அதை அறைக்க முடியாத காரணத்தாலே, இப்போது அலங்காநல்லூரிலே 235 ரூபாய் என்று வைத்து, இங்கே மட்டும் 195 ரூபாய் என்றால், அது உண்மையிலேயே போதாது. ஆகையினாலே, இன்னும் 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அன்-ரிஜிஸ்டர்ட் கேன், உற்பத்தி செய்யக்கூடிய நிலங்கள் அங்கே இருந்து கொண்டு இருக்கின்றன. அதையும் பதிந்து கொடுப் பார்கள். இப்போது பெரம்பலூரிலிருந்து கரும்பு வருகிறது.





அப்படி வரும்போது, ஒரு டன் கரும்புக்கு, 240 ரூபாய் கொடுக்
கிறோம். பிறகு அந்தக் கரும்புக்கு டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ்
அதையும் கொடுக்கக் கூடிய நிலைமை வருகிறபோது, ஒரு
டன்னுக்கு கிட்டத்தட்ட 300 ரூபாய் வரக்கூடிய நிலைமை
இருக்கிறது. ஆகையினாலே, ஒரு ஏக்கர் கரும்பு உற்பத்தி செய்
தால், மத்திய அரசுக்கு 2000 ஆயிரம் ரூபாயும், மாநில அரசுக்கு
1,800ரூபாயும் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலே,
அரசாங்கத்திற்கு வருமானம் வரக்கூடிய அளவிற்குச் செய்கிற,
இந்த விவசாயிகளுக்கு கண்டிப்பாக—சென்ற ஆண்டே விட்டுவிட்டு
அறைக்காமல் இருந்தாலும் கூட, வெளியிலே அறுத்த அந்த
ரெக்கவரியையும் வைத்து—அவர்களுக்கு 230 ரூபாய்க்கு குறை
யாமல் விலை நிர்ணயம் செய்யவேண்டும் என்று விவசாயிகளின்
சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல குடிநீர்ப் பிரச்சனை. நான் நேற்றையதினம்
கூட நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சரிடத்திலே சொன்
னேன். பல இடங்களில் தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும்
கஷ்டப்படுகிறார்கள். நாம் இதற்கு கோடிக்கணக்கான ரூபாயை
ஒதுக்கியிருக்கிறோம். அப்படி ஒதுக்குகின்றபோது, எங்கே
யெல்லாம் ஸ்கார்சிடி இருக்கிறதோ,—இப்போது மழையில்லை—
அங்கெல்லாம் தண்ணீருக்காக அதிகப்படியான பணத்தை ஒதுக்கி
ஒரு இணைப்புத் திட்டத்தை, காம்ப்ரெஹன்சிவ் ஸ்கீமாக கொண்டு
வரவேண்டும். இப்போது குழாய் போடுகிறோம். ஒரு போர்
வெல் போடுவதற்கு 20 ஆயிரம் ரூபாய் செலவழிக்கிறோம், 25
ஆயிரம் ரூபாய் செலவழிக்கிறோம். சில நேரத்தில் 30 ஆயிரம்
ரூபாய் அளவிற்கு கூட நாம் செலவழிக்கிறோம். அப்படி செல
வழித்தும் கூட தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. எனவே
எங்கெல்லாம் ஆறுகள் ஓடுகின்றதோ, அதை அடுத்துள்ள, 10
கிராமங்கள், 15 கிராமங்கள் என்று இணைத்து, ஒரு இணைப்புத்
திட்டத்தைப் போட்டு, அதன் மூலமாக நாம் தண்ணீர் வினி
யோகம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தால், சீக்கிரமாக
இந்தக் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்பதை இந்த
நேரத்திலே நான் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, பழனி தொகுதியை எடுத்துக் கொண்டால்,
ஆயக்குடி பேரூராட்சியிலே 30 ஆயிரத்திற்கு மேல் மக்கள் இருக்
கிறார்கள். அங்கே 59 லட்சம் ரூபாய் குடிநீருக்காக சாங்க்சன்
செய்யப்பட்டது. 1980-லே சாங்க்சன் செய்யப்பட்டு, அடிக்கல்
நாட்டப்பட்டது. நான் ஏற்கனவே இதைப் பற்றிச் சொல்லியிருக்
கிறேன். 1985-லே வேலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்
பட்ட அந்த வேலை இன்னும் முடிக்கப்படவில்லை. அதற்குக்
காரணம், அங்கே கான்ட்ராக்ட் எடுத்திருக்கக்கூடிய சிலர் கட்சிக்
காரர்களாக இருப்பதாலே, அவர்கள் என்ன செய்கிறார்கள்
என்றால், இந்த அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வரவேண்டும்
என்று அந்த அடிப்படையிலே வேலையை முடித்துக் கொடுக்காமல்
இருக்கிறார்கள். ஆகையினாலே, அடுத்த பட்ஜெட் கூட்டம்

வருவதற்கு முன்னாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு, இதை விரைவிலே முடித்துக் கொடுப்பதற்கான வழி வகைகளைச் செய்தால் நன்றாக இருக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, பாப்பம்பட்டி குடிநீரைப் பற்றி ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். 12 ஆயிரம் ரூபாய் ஆய்வுக்காக 1972-லே கட்டப் பட்டது. இதுவரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. எனவே. இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் சற்று முன்னுரிமைக் கொடுத்துச் செய்தால், அது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். பொதுவாக நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவின் மீது அதிகமாக கருத்துக்களை வழங்குவதில்லை. ஏன் என்றால், இந்தத் துணை மானியக் கோரிக்கை இந்த அவையிலே வைக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை விரிவாக எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டு விடுகிறது என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள், பொது விவாதத்தின் போதும், அந்தந்த மானியக் கோரிக்கைகளின் போதும், எடுத்து வைக்க வேண்டிய பல்வேறு கருத்துக்களை எல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே அத்தனைக்கும் நான் இங்கே விடையிறுப்பது என்பது இப்போது இயலாது. நேரமும் இடம் தராது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அதுமட்டுமல்லாமல், பொதுப்படையாக எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்களிலே, கல்வியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். கல்விக்காக அதிகமாக பணம் ஒதுக்க வேண்டும், அதன் மூலம் கல்விக்கு வளர்ச்சி தர வேண்டும் என்றெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். கல்வியைப் பொறுத்தவரையிலும், நம்முடைய மாநிலம் மிக அதிகமான அளவிற்கு அக்கறை எடுத்து, அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறோம். பொதுக் கல்வி, தொழில் கல்விக்கு மட்டும், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 468 கோடி ரூபாய் நாம் ஒதுக்கீடு செய்தோம். அதற்குப் பிறகும் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், வேறு பல துறைகள், வேளாண்மைத் துறைக்கு, மருத்துவத் துறைக்கு, கலைத்துறைக்கு, கால்நடைத் துறைக்கு, உடற் பயிற்சித் துறைக்கு, கவின் கலைத் துறைக்கு என்று எல்லாவிதமான பயிற்சிகள், எல்லாவிதமான கல்வியையும், அத்தனையும் நாம் கணக்கெடுத்துக் கொண்டால்



மாணவர்களுக்கு வசதி வாய்ப்புக்களை செய்து தருவது. அவர்களுக்கு சீருடை வழங்குவது, இலவச புத்தகம் வழங்குவது அவர்களுக்கு சத்துணவு வழங்குவது ஆகிய அத்தனையையும் எடுத்து கணக்குப் போட்டால் நம்முடைய வரவு செலவுத் திட்டத்திலே கிட்டத்தட்ட 750 கோடி ரூபாய்க்கு மேல் இந்த வகையில் வருகிறது. அத்தனையையும் நாம் கணக்கிட்டுப் பார்த்தால் முடிந்த அளவுக்கு நாம் இத்தகைய துறைக்கு ஒதுக்கீடு செய்து கொண்டு வருகிறோம். அந்த வகையில் தான் பிளஸ் 2 வகுப்பு , படிக்கின்ற வரையில் மாணவ மாணவியர்களுக்கு அத்தனை பேர்களுக்கும் எல்லாவிதமான வசதிகளையும் இலவச மாக நல்லமுறையில் கொடுத்து நாம் நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம்.

இங்கே தனியார் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குற்றச்சாட்டுகளை சுட்டிக் காட்டினார்கள். ஆகவே இந்த அரசு ஏற்கனவே பொறியியல் துறையில், மருத்துவ துறையிலே ஒதுக்கப் பட்ட இடங்கள் அத்தனையையும் யாருக்கும் விற்பனைக்குக் கொடுத்து விடவில்லை. ஏற்கனவே இருந்து வருகின்ற இடம் அப்படியே இருக்கிறது. கூடுதலாக ஆக்குகின்ற முறையில் தான் அரசு இதை கொண்டு வந்து இருக்கின்றது. நாம் தனியார் துறைக்கு அனுமதி அளிக்கவில்லை என்று இருக்கும். ஆனால் ஏற்கனவே நாம் வகுத்துத் தந்த அந்த இடங்களுக்கு மட்டும் தான் மாணவர்கள் தேர்ந்து எடுக்கப்படுவார்கள். அந்த வகுப்புகள், கல்லூரிகள் மட்டும் தான் இயங்கும்.

அது மட்டும் அல்லாமல் மருத்துவக்கல்லூரியைப் பொறுத்த வரையில் சேலத்தில் ஒரு மருத்துவ கல்லூரியை துவங்குவதற்கு அரசு முயன்று அந்த ஒரு மருத்துவ கல்லூரியை துவக்கினால் அதனால் கிட்டத்தட்ட 60 பேர் அல்லது 90 பேர் தான் படிக்க முடியும். மற்ற தனியார் கல்லூரிகளுக்கு நாம் அனுமதி அளிப்பதன் நோக்கம் சாதாரண ஏழை எளிய மாணவர்களுக்கு கிடைக்கின்ற இடத்தை மறுக்கின்ற சூழ்நிலை இல்லை. நாம் ஏற்கனவே அரசின் மூலம் நடத்தி வருகின்ற கல்லூரிகள் மூலமாக ஒதுக்கப் பட்ட இடங்கள் கூட மிச்சமாக, எக்ஸ்ட்ராவாக, கூடுதலாக இந்த மாநில மக்களுக்கு வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருகின்ற தன்மையில் தனியார் கல்லூரிகள் முன் வருகிறபோது அரசின் முழு உதவியைப் பெறாமல் அவர்களே முழுச் செலவையும் ஏற்றுக் கொள்கிறார்கள். அந்த முறையில் தான் நாங்கள் கொடுக் கிறோம்.

உதாரணமாக நான் சொல்கிறேன், ஏற்கனவே இரண்டா யிரத்து சில்லரை இடங்கள் தான் பொறியியல் கல்லூரியில் மொத்தம் இருந்தது. இப்போது தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி தந்ததன் காரணமாக ஐந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் மாணவர்கள் படிப்பதற்குண்டான வசதி தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது. இந்த 5 ஆயிரத்தில் கிட்டதட்ட 3500 இடங்கள் கல்லூரிகளுக்குத் தந்து இருக்கிறார்கள் என்றால் அந்த 3500-லே

கிட்டத்தட்ட ஆயிரத்து எழு நூறு சில்லரை அதாவது 50 சதவீதம் சம்பளம் வாங்காமல் அரசு எடுத்து வைத்து இருக்கிற பட்டியலிலிருந்து நாம் எடுத்து தருகிறோம். மீதி 50 சதவீதத்திற்குத் தான் அவர்கள் பணம் வாங்குகின்ற நிலைமையும் 50 சதவீதத்திற்கு பணமே வாங்கக் கூடாது என்றும் அரசு எடுத்து இருக்கிற பட்டியலிலிருந்து நாம் தருகிறோம். அந்தப் பட்டியலில் இருக்கிற மாணவர்களைத் தான் எந்த ஒரு தொகையும் வாங்காமல் அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அரசின் உதவியைக் கூட பெறாமல் அவர்களே முழு செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். 180 இடங்கள் என்றால் 90 இடங்களுக்கு அரசு பட்டியலிலிருந்து அரசு தரும். மீதியை அவர்கள் தேர்வு செய்து கொள்ளலாம். அரசு கல்லூரிகளில் சேர்க்கப்பட்டவர்கள் போக அங்கே பட்டியலில் தேர்வு செய்யப்பட்டு வெயிட்டிங் லிஸ்ட்டில் வைத்திருப்போம், அது தான் அரசு பட்டியல் அதிலிருந்து தான் எடுத்துத் தருவோம். பாலிடெக்னிக் ஆக இருந்தாலும் சரி, பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி இதன் மூலமாகத் தான் அரசுக்கு செலவு இல்லாமல், மாணவர்களுக்கு செலவு இல்லாமல் கிட்டத்தட்ட 2 ஆயிரம் இடங்கள் பொறியியல் கல்லூரிகளில் ஏற்படுகிறது.

அதைப்போன்று பாலிடெக்னிக் ஏற்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 50, 60 பாலிடெக்னிக் ஏற்படுத்தப்பட்டன என்றால் அவர்கள் அதில் சரி பாதி இடங்கள் அரசு பட்டியலிலிருந்து தரப்படுகிறதே தவிர வேறு அல்ல. பணமே செலவழிக்காமல் தரப்படுகிறது. மீதியை அவர்கள் தேர்வு செய்துக் கொள்ளலாம். இதன் காரணமாக இந்த மாநிலத்திற்கு கூடுதலாக நன்மை ஏற்படுகிறதே் தவிர வேறு அல்ல.

அது மட்டுமல்ல, தரம் குறைந்து விடும் என்று எல்லாம் சொன்னார்கள். கிட்டத்தட்ட தமிழகத்தில் பொறியியல் கல்லூரி மற்றவைகள் பாலிடெக்னிக் எல்லாம் சேர்ந்து 15 ஆயிரம் இடங்கள் இருக்கின்றன என்றால் இதை விட சிறிய மாநிலமான கர்நாடகத்தில் 29 ஆயிரத்து சில்லறை இடங்கள் இருக்கின்றன. காரணம் 35க்கும் மேற்பட்ட தனியார் கல்லூரிகள் அங்கே இப்படி நடைபெறுகின்றன. இன்னும் சொல்லப்போனால் அங்கே இருக்கின்ற மணிபால் போன்ற இடங்களில் இருக்கின்ற கல்லூரியில் $4\frac{1}{2}$ லட்ச ரூபாய் கட்டினால் தான் ஒரு மாணவன் இடம் பெற முடியும். அதேபோல் $3\frac{1}{2}$ லட்சம், $2\frac{1}{2}$ லட்சம் என்று வாங்குகிறார்கள். ஏற்கனவே தமிழகத்தில் இருப்பவர்கள் அங்கே போய் அந்தப் பணத்தைக் கட்டி பொறியியல் கல்லூரி அல்லது மருத்துவ கல்லூரியில் இடம் பெறுகிறார்கள். மகாராஷ்டிராவில் 47 கல்லூரிகளுக்கு மேல் பொறியியல் கல்லூரி மருத்துவக் கல்லூரி தனியார் துறையில் வைத்து இதே பெயரால் நடத்துகிறார்கள். வேறு பல மாநிலங்களிலும் இருக்கிறது. கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலத்திலே ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த மாநிலத்திற்கும்



நம்முடைய மாநிலத்திற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டால், அங்கே 50 சதவிகிதம் மார்க், அக்ரெகேட்—ஆக வாங்கி இருந்தால், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகளில் கர்நாடக மாநிலத்தில் சேர்ந்து விடலாம்.

(முற்பகல் 10–40)

நம்முடைய மாநிலத்தில், எல்லாவற்றையும் சேர்த்து கூட்டிப் பார்க்கும்போது, சராசரி 70 மார்க் வாங்கவேண்டும். நம்முடைய அரசுக் கல்லூரிகளில், 70 மார்க் என்று எப்படி போட்டு இருக்கிறோமோ, என்னென்ன விதிமுறைகள் வைத்து இருக்கிறோமோ, அதன்படி.தான் நடக்கவேண்டுமே தவிர, கொஞ்சம் கூடக் குறையக் கூடாது. 70 மார்க் வாங்கினால் தான் சேர்க்கவேண்டும். $69\frac{3}{4}$ வாங்கினாலும் சேர்க்கக்கூடாது. அதை முழுமையாக ஆக்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறோம். முழுமையாக ஆக்கவேண்டும் என்றால், மார்க் போட்டவர் ஆக்க வேண்டும். இங்கே நாம் ஆக்கக்கூடாது என்று சொல்லி, $69\frac{1}{2}$, $69\frac{3}{4}$ வாங்கினால்கூட சேர்க்கக்கூடாது என்று வைத்து இருக்கின்றோம்.

அந்தவகையில் நமக்கு லாபமே தவிர, நஷ்டம் இல்லை. உள்ளபடியே மெரிட்டில் வந்தவர்களுக்கு முறையாக, இரண்டாயிரத்து சில்லறை இடங்களில் தந்து வருகிறோம். அவர்கள் துவக்கியதிலே பாதி இடங்கள் நமக்கு வருகின்றன. மருத்துவக் கல்லூரியிலே 35 சதவிகிதம் அரசாங்கத்தினுடைய பட்டியலிலே இருந்து தருகிறோம். மற்றவைகளுக்கு 50 சதவிகிதம் அரசாங்கப் பட்டியலிலிருந்து தருகிறோம். மீதிப் பொறுப்பை அவர்கள் ஏற்கின்றபோது, சாதாரணமாக, வருகின்றபோது, நம்முடைய முறைப்படி, திட்டப்படி, தகுதி, திறமையினுடைய அடிப்படையிலே இருக்கிற பட்டியலின்படி தான் சேர்க்கப்படுகிறார்கள். அதற்கு கூடுதலாக பண வசதி படைத்தவர்கள்—மணிப்பாலுக்கோ, கர்நாடகத்தினுடைய பிற கல்லூரிகளுக்கோ, மகாராஷ்டிரத்திற்கோ, மற்றவற்றிற்கோ போகாமல் தடுக்கப்படுகிறார்கள்.—பண வசதி படைத்தவர்கள் தந்து செல்லலாம். அவர்களுக்கு 70 மார்க்குக்கு கீழே இருப்பவர்கள் பெறமுடியாது. அதற்கு மேலே இருக்கிறவர்கள் பெறலாம். இதனால் தவறொன்றும் கிடையாது. இதற்கு அரசு அனுமதி தரவேண்டும். அதற்குப்பிறகு, பல்கலைக் கழகமும் அனுமதி தரவேண்டும், இந்தியன் மெடிகல் கவுன்சிலும் அனுமதி தரவேண்டும்.

ஆகவே, ஒரு கல்லூரியைத் துவங்குகிறபோது, சில பல அடிப்படை வசதிகள் இருக்கின்ற அளவுக்கு அனுமதி தருகிறோம். அதற்குப் பிறகு, தேர்வு நடத்துவதற்கு வேறு பல வசதிகள் இருக்கின்றனவா என்று பார்த்து, தரலாமா, ஒப்புக் கொள்ளலாமா, இல்லையா என்பதை பல்கலைக்கழகத்தில் ஒரு குழுவினை அனுப்புகிறார்கள். அவர்கள் பார்த்து சான்றிதழ் தரு உர

களானால், ஏற்றுக்கொள்கிறார்கள்; இந்தியன் மெடிக்கல் கவுன்சில் ஒரு குழுவை அனுப்பும், அவர்கள் பார்த்து சரியாக இருந்தால் தான் ஏற்றுக்கொள்கிறார்கள். இல்லாவிட்டால் பரீட்சைக்கு அனுப்ப மாட்டார்கள்.

பரீட்சைக்கு அனுப்பமாட்டார்கள் என்ற நிலை ஏற்படுகிற போது, அவர்கள் என்னென்ன விதிகளை விதிக்கிறார்களோ, அவைகளை நிறைவேற்றித் தீரவேண்டும் என்ற அடிப்படையில் இருக்கிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொல்லியது மாதிரி—வசதிகள் இருக்கவேண்டும் என்பதும், வசதிகள் இல்லாத துறைகள் இருக்கக்கூடாது என்பதும், வசதிகள் அற்ற நிலையிலே கல்லூரிகள் துவங்கிவிட்டு அவதிகளுக்கு உள்ளாகக்கூடாது என்றும் அப்படிப்பட்ட கல்லூரிகளைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும், மாநில அளவிலே தொழில் நுட்பத் துறையில் ஒரு குழுவை அமைத்து, ஆராய்ந்து பார்த்து அப்படி வசதிகளே இல்லாது, யாராவது ஏமாற்றிக்கொண்டிருந்தால், அந்த கல்லூரிகளை ஆரம்பக் கட்டத்திலேயே நிறுத்தி விடுவது நல்லது; அதற்கு அனுமதி இல்லை என்று ஆக்குவது நல்லது. அப்படி ஒன்றிரண்டு ஆக்கப்பட்டும் இருக்கிறது.

அப்படிப்பட்ட முறைகளை மேற்கொள்ளலாம். இந்தக் கொள்கையை, முறையை மேற்கொண்டிருப்பதனால், எந்தத் தவறும் ஏற்படவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொல்கிறபோது, லாரி வரி கட்டண விகிதங்களைச் சொல்கிறபோது, அதிலே சில பல குறைபாடுகள் இருக்கின்றன என்றும், வசதி படைத்த வர்களை ஒட்டி, வசதி அற்றவர்களுக்கும் அந்த விகிதங்கள் விதிப்பதன் காரணமாக தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அது பற்றி தனியாக ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவு எடுக்கவேண்டும். அவர்கள் எடுத்துச் சொல்கிற கருத்தை அந்தத் துறையினர் ஆராய்ந்து பார்த்து, அதனுடைய அடிப்படையிலே நியாயமான ஒரு முடிவு எடுப்ப தற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகின்ற போது சொன்னார்கள். மாவட்டப் பிரிவினையைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே ஒரு முடிவு ஆரம்பக் கட்டத்திலேயே எடுத்திருந்தால், அது சரிதான். அந்த ஊர் பெயரையே வைத்து, அந்தந்த மாவட்டம், மதுரை மாவட்டம், திருச்சி மாவட்டம், கோவை மாவட்டம் என்ற நிலைமை இருக்குமானால் எந்த வம்பும் இருக்காது, எந்த தும்பும் இருக்காது.



ஆனால் அடிப்படைக் கட்டத்திலேயே இப்படி பெயர் வைக்கின்ற, நிலைமை இந்தியாவில் ஏற்பட்டு விட்டதனால் இது இருக்கிறது. இந்த நிலைமைகள் இதற்கு முன்னாலேயே, சோழர் காலத்திலேயே, ராஜராஜசோழ மண்டலம், ராஜேந்திர சோழன் விண்ணகரம் என்று அப்போதே அந்தப் பெயர்கள் வைத்து இருக்கிறார்கள்.

நரசிம்மபுரம் என்றும், சேரன்மாதேவி என்றும், பாண்டிமா தேவி என்றும் அப்போதே வைத்து இருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்தின்படி, அடிப்படையிலேயே அமைந்து விட்டால் எந்தத் தொல்லையும் இல்லைதான். எந்த மாவட்டத்திற்கு எது தலைநகரோ, அதை வைத்து அழைப்பது என்பது அடிப்படையிலேயே வைப்பது. ஒரு முயற்சியை எடுத்துக் கொண்டு பாதிதூரம் வந்து விட்டோம். வந்து, பல பெயர்கள் வைக்கப்பட்டு, இன்றைக்கு அது மட்டும் அல்ல, ஒரு நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள், நாட்டுக்கு பெருமை தேடித் தந்தவர்கள், புகழ் தேடித் தந்தவர்கள், அவர்களுடைய பெயர்கள் என்றென்றும் நிலை பெற்று இருக்க வேண்டுமானால், இப்படி நினைவுச் சின்னங்கள் மூலம் ஆக்கவேண்டும் என்று ஆக்குகிறோம்.

அப்படி சிறந்தவர்களுக்கு, நல்லவர்களுக்கு புகழ் பெருமை தேடித் தந்தவர்களுக்கு ஆக்குவது ஒரு முறை தான். ரஷ்யாவில் பீட்டர்கிரேட் என்று இருந்தது. என்றென்றும், லெனின் பெயர் தங்கவேண்டும் என்பதற்காக அதை லெனின்கிரேட் என்று மாற்றினார்கள். இப்படி பல இடங்களை மாற்றி இருக்கிறார்கள். கென்னடி முனைக்கு ஏற்கனவே வேறு பெயர் இருந்தது. கென்னடியினுடைய பெயர் நிலைக்க வேண்டுமென்பதற்காக மாற்றினார்கள். அதில் தவறு இல்லை. ஆனால் அது போராட் டத்திற்குக் காரணமாக மாச்சரியத்திற்குக் காரணமாக இரண்டு பிரிவினராய்ப் பிரிந்து சண்டை போடுவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது என்று அவர் சொன்னதை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சி உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி என்று திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்து வந்திருக்கிற தொகுதி திருப்பூர் தொகுதி, அந்தத் தொகுதி சென்ற ஆண்டு வரையிலே அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுக்கு உரிய தொகுதியாகத்தான் இருந்தது. அவரிடத்திலேயே அந்தத் தொகுதியை என்றென்றும் விட்டு விடுவதாகவும் இல்லை. அதை அடுத்த முறை கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. அந்தத் தொகுதியை அடுத்த முறை கைப்பற்ற வேண்டுமென்று எண்ணு கிறபோது அந்தத் தொகுதியிலே உள்ள மக்களின் அன்பையும் அரவணைப்பையும் பெறுவது எப்படி என்று தான் நாங்கள் பார்ப்போம்.

தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது மொத்தம் 375 ஒன்றியங்களுக்கும்தான் கணக்கிட்டிருக்கிறோமே தவிர இந்தக் கட்சி, அந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்று பார்த்து திட்டமிடுவதில்லை. அந்த வகையிலே தான் நாம் திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு வேண்டுமானால் சட்டமன்றத்திலே மாச்சரியங்களின் அடிப்படையிலே கொள்கை களின் அடிப்படையிலே கருத்துக்களை, குறைபாடுகளைச் சொல்லலாம். ஆனால் வெளியே இப்படிப்பட்ட காரியங்களை ஆற்றுவதிலே நாம் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று வேறுபாடு காட்டுவதில்லை. குடிநீர் வசதி செய்வதில் ஆகட்டும், சாலை வசதிகள் ஆகட்டும், பாலங்கள் கட்டுவதில் ஆகட்டும், கட்ட டங்கள் கட்டுவது ஆகட்டும், கொள்கைவேறுபாடுகளோ கருத்து வேறுபாடுகளோ குறுக்கிடுவது இல்லை. அவைகளை நிறை வேற்றுவதிலே எல்லோருடைய முழு ஒத்துழைப்பும் இருக்க வேண்டுமென்ற முறையிலே செயல்படுகிறோம். நிறைவேற்று வதிலே குறைபாடுகள் இருந்தால் அவைகளைச் சுட்டிக்காட்ட லாம். அவர்கள் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினால்தான் எங்களுக்கும் நல்லது, அதிகாரிகளுக்கும் நல்லது. அப்படிச் சுட்டிக் காட்டினால்தான் ஏன் காலத்தாழ்வு ஏற்பட்டது என்று கேட்க முடியும். மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார் களே ஏன் நடைபெறவில்லை என்ற எண்ணத்தோடு கேட்பதற்கும் வசதியாக இருக்கும். ஆனால் குற்றச்சாட்டுகளை தேவையில் லாமல் காரணம் இல்லாமல் ஆதாரமில்லாமல் பழிசுமத்த வேண்டும் என்ற நிலைமையில் வாரியிறைத்தால் நாமே ஒருவருக் கொருவர் வாரியிறைத்துக் கொண்டால் நம்மீதே கறைபடுமே தவிர வேறல்ல. காரணகாரிய விளக்கங்களோடு எடுத்துச் சொல்ல லாம். திரு. ரமணி அவர்கள் காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொன்னார்கள். முடியும் என்றால் முடியும் என்று சொல்கிறோம், இயலாது என்றால் இயலாது என்று சொல் கிறோம். என்ன என்ன காரணங்கள் என்று சொல்கிறோம். அந்த வகையிலே எதிர்க்கட்சிகள் சொல்வதினாலே அரசுக்கு நன்மையாகத்தான் இருக்கும், எல்லாமே எங்களுடைய கவனத் திற்கு வரும் என்று சொல்லிவிட முடியாது, அரசின் கவனத்திற்கு வரவேண்டும், வரும்போதுதான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும்.

கரும்பு விலைபற்றி திருமதி பொன்னம்மாள் அவர்கள் சொன்னார்கள். திரு. சித்தன் அவர்களும் சொன்னார்கள். இனியமாகச் சொன்னார்கள், இனிப்பாகச் சொன்னார்கள். போதாது என்பதற்குக் காரண காரிய விளக்கங்களைச் சொல்லி இருக்கிறார்கள். பல பேர்கள் கோரிக்கைகளை வைத்திருப்பதால் அதை மீண்டும் பரிசீலனை செய்து நல்ல செய்தியைத் தருகிறேன் என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். கரும்பு உற்பத்தியாளர்கள் விலைபற்றிச் சொல்கிறார்கள். 185 ரூபாய் என்ற அளவுக்குத்தான் இந்த மாநிலம் தாங்கும் என்று அறிவித்து இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே இருக்கிற 2, 3 தவிர மற்றவைகள் நட்டத்திலேதான்



இருக்கின்றன. காரணகாரிய விளக்கங்களைச் சொல்லி உரிமை யாளர்களும் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் சொல்கிற புள்ளிவிவரங்களை இந்தத் துறை ஆராய்கிறபோது நியாயமாக இருக்குமானால் அதைப் பரிசீலிக்கும். இருக்கிற 185 ஐ இப்போது இருக்கிற நிலைமைகளிலே 195 ஆக ஆக்கு வதற்கு நாம் முடிவுக்கு வந்திருக்கிறோம்.

அடுத்து காவல் துறைபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். காவல் துறை மானியம் வருகிறபோது அவர்கள் விரிவாகப் பேசுவதற்கும் விரிவாகப் பதில் சொல்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்நார் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) :—மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சற்று நேரத்திற்கு முன் நடந்த விவாதத்தில் ஏற்பட்ட பிரச்னை சம்பந்தமாக ஒரு விஷயத்தை நான் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏனென்றால் அடிக்கடி இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு சபையின் நேரம் வீணாகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்பொழுது ஒரு ஆதாரத்தைப்பற்றிச் சொன் னார்கள். தான் அப்படிக் கடந்த சட்டமன்றத்திலே பேசவில்லை, வேறு முறையிலே பேசியதாக விவரங்களைச் சொன்னார்கள்.

1,978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் தேதி, தொகுதி 11, பக்கம் 263–தெளிவாகப் பேசியிருக்கிறார்கள்.

''இந்த ஆட்சியிலே இந்திரா நகரில் பிரேமா கொலை செய்யப் பட்டாள். நான் கேட்கிறேன், தமிழ் நாட்டினுடைய காவல் துறை சக்தி வாய்ந்த காவல் துறை. நான் சந்தேகிக்கவில்லை. பிரேமா கொலையில் ஏன் துப்பு துலக்கவில்லை? நான் பகிரங்க மாக இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் சொல்லுகிற குற்றச்சாட்டிற்கு பொறுப்பு ஏற்றுக்கொள் கிறேன். ஒரு மிகப் பெரிய புள்ளிக்கு அதிலே பங்கு உண்டு. நான் ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும், இதைப் பார்த்து விட்டு நடவடிக்கை எடுக்கச் சொன்னார்கள். ஆகவே, இதன் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(முற்பகல் 10-50)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(உ) நிதி ஒதுக்க (எண். 2 சட்ட முன்வடிவு) 1986**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.



## 4. அரசினர் தீர்மானங்கள்.

**(அ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30 (3)-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 6-ஐ இனம் 2-க்குப் பிறகு எடுத்துக் கொள்ளலாம்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

## 5. அறிவிப்புகள்.

**(அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986)-ஐ பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 2. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1986

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1986)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

* **திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நான் ஆட்சேபிக்கிறேன். ஆசிரியர்கள் சம்பள உயர்வு கேட்டால் ஐம்பதாயிரம் பேர் சிறைப்படுத்தப்படுகிறார்கள்; அனாமலி கமிஷன்தான் இதைப் பரிசீலிக்க வேண்டுமே தவிர, உங்கள் ஊதிய உயர்வை ஏற்றுக் கொள்ள முடியாது என்று வலுவாகச் சொல்கின்ற இந்த அரசு என்.ஜி.ஓ.க்கள் விஷயத்திலும் இதே கொள்கையைக் கடைப்

---

@ 1986-ம் ஆண்டு ஜனவரி 27-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிடித்தது; போலீஸ்காரர்கள் சம்பள உயர்வு கேட்டால் அதற்கும் இதே கொள்கையைத்தான் கடைபிடிப்போம் என்று சொல்கிறது; தமிழகத்திலே உள்ள ஏராளமான தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, சம்பள உயர்வு கேட்டாலும் அவர்களைப் போலீசை வைத்து மிரட்டுவதும், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தும் அளவிற்கும், போராட்டம் நடத்தும் தொழிற்சங்கத் தலைவர்களை குண்டா சட்டத்தில் பிடித்து, சிறையில் வைப்பது என்ற உணர்வோடு காரியங்களைச் செய்கின்ற இந்த அரசு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும், அடிக்கடி இந்தச் சம்பள உயர்வைக் கொடுப்பது நியாயம் அல்ல; சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் சம்பளமே போதுமானது, இதற்கு மேல் வேண்டும் என்ற கோரிக்கை இந்த நாடு தாங்காது; அது நம்முடைய பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதாக அமையும் என்பதால் நான் இதை வன்மையாக ஆட்சேபிக்கிறேன், இதை எதிர்க்கிறேன்.

* திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் பேசுகின்றபொழுது, 'இது எங்களுக்குத் தேவையில்லை' என்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். சென்ற முறை பேசுகின்ற பொழுதுகூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் 'இது எங்களுக்குத் தேவையில்லை' என்று சொல்லிவிட்டு, சட்டம் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டு, அமுலாக்கப்பட்ட பிறகு, அதனுடைய பலனை அடைந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையிலே, அவர்களுக்கு.....

* திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய வேங்கடரமணன் அவர்கள், நான் பேசும் காலத்தில் அதை நன்றாகக் கேட்டாரா, இல்லையா என்று தெரியவில்லை. நான் பேசிய விஷயம் அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இவ்வளவு சம்பள உயர்வு தேவையில்லையென்பதுதான். அதற்குப் பிறகு சட்டம் வந்தவுடனே ஆரம்பத்தில் நாங்கள் பல மாதங்கள் எங்களுடைய உயர்த்தப்பட்ட சம்பளத்தை வாங்கவில்லை. அதை நாங்கள் நிராகரித்தோம். எங்களுக்குத் தேவையில்லையென்று எழுதிக் கொடுத்தோம். பல மாதங்களுக்குப் பிறகுதான் உயர்த்தப்பட்ட சம்பளங்களைப் பெற்றோமே தவிர....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அரியர்ஸ் மொத்தமாக வாங்கினீர்களா, இல்லையா? எனக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன்.

திரு. கு. ரமணி : கோர்ட்டிலே நடக்கிற விவாதத்திற்குப் பதில் சொல்கிறமாதிரி சட்ட சபையிலே பதில் சொல்லமுடியாது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்கிற தொனி எப்படி இருக்கிறது என்றால், அமைச்சர்கள், மற்றும் எல்லோரும் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொள்கிறார்கள் என்பது, பொது மக்கள் மத்தியில் வேறு மாதிரி கருத்தை ஏற்படுத்தும். நீங்கள் வேண்டாம் என்று சொன்னால், நீங்கள் வாங்கக் கூடாது. ஆகவே, நீங்கள் அரியர்ஸ் வாங்கினீர்களா, இல்லையா என்பதைச் சொல்லுங்கள். சபைக்குத் தெரியட்டுமே, நாட்டுக்குத் தெரியட்டுமே.

திரு. கு. ரமணி : நான் சொல்வது நாட்டுக்குத் தெரிந்துதான் எல்லோருக்கும் தெரிந்துதான் நடந்திருக்கிறது. முதன்முதல் சம்பளத்தை உயர்த்தச் சட்ட முன்வடிவு வந்தபோது அதை எதிர்த்து, நாங்கள் பல மாதங்கள் உயர்த்திய சம்பளத்தை வாங்கவில்லை. அதை நாங்கள் நிராகரித்தோம், எழுதிக் கொடுத்தோம். அதற்குப் பிறகு வந்ததைத் தான் நாங்கள் வாங்கினோமே தவிர, அந்தச் சமயத்திலே நாங்கள் வாங்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதிப்பதாக உறுப்பினர் நினைக்கக் கூடாது. வேண்டாம் என்று விட்டு விட்டார்களா, அரியர்ஸ் கிளெய்ம் பண்ணி வாங்கினார்களா?

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : நாங்கள் 1977-78-ல் வாங்கவில்லை.

திரு. கு. ரமணி : நாங்கள் வாங்கவில்லை. அதைத்தான் நான் சொன்னேன். அன்றைக்கு உயர்த்தியதை நாங்கள் வாங்கவில்லை. அதற்குப் பிறகு ஒவ்வொரு தடவையும் உயர்ந்து கொண்டே இருக்கும், நீங்கள் இழந்து கொண்டே இருங்கள், நாங்கள் வாங்கிக்கொண்டே இருக்கிறோம் என்ற நிலை இருந்தால், எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரி விவகாரங்களையெல்லாம் கமிட்டியிலே பேச வேண்டும். நம்முடைய பிரச்னையைப் பேசுவதற்கா சட்டசபை? நம்மை நாமே எக்ஸ்போஸ் செய்ய, இதை யூஸ் பண்ணாதீர்கள். அந்த அர்த்தத்தில் தான் சொல்கிறேன் வேண்டாம் என்றால் வேண்டாமென்று சொல்லுங்கள். ஏனென்றால், என் சம்பளத்தையும் சேர்த்திருக்கிறார்கள். வார்த்தைகளை யோசித்துப் பேச வேண்டும். வாங்கிவிட்டு பேசுவது கூடாது. கட்சிக் கொள்கை வேறு. இங்கே கட்சிப் பாகுபாடு இல்லாமல் உறுப்பினர்களாக இருக்கிறோம். கட்சியினுடைய கொள்கை வெளியே. இந்தச் சட்டசபைக்குள்ளே வரும்போது, சட்டசபை ஒரு முழுமையான நிறுவனம். நாம் எல்லோரும் அங்கத்தினர்கள். நம் எல்லோருடைய கௌரவத்தை பாதுகாக்கிற அளவுக்கு, பேச்சுக்கள் அமைய வேண்டும். அதற்காகத்தான் சொன்னேனே தவிர, வேறல்ல.

திரு. கு. ரமணி : அகௌரவப்படக்கூடிய எந்தக் காரியத் தையும் நாங்கள் செய்வதில்லை. இங்கே மட்டுமல்ல, பாராளு மன்றத்திலேயே, எங்களுடைய கட்சித் தலைவராக இருந்த (குறுக்கீடு) நீங்கள் ஒரு தர்க்கத்திற்குப் பதில் சொல்கிற மாதிரி. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தர்க்கம் என்பது எல்லாம் பெரிய வார்த்தைகள்.

திரு. கு. ரமணி : வேறு யாராவது நடந்து காட்டட்டுமே. நாங்கள் இந்தச் சம்பள உயர்வை அடியோடு வாங்காமல் இருக்கத் தயார். அதற்கு மற்றவர்களும் முன் வரட்டும். நாங்கள் நிற்கத் தயார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் எல்லோரும் வெளியே முடிவு எடுப்போம். சபையில் சவால் வேண்டாம். நான் என்ன சம்பளத்திற்கா வேலை பார்க்கிறேன். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் அல்லது சர்வீஸ் கமிஷனிலிருந்தா நாம் வருகிறோம்? இதெல்லாம் ஹானரோரியம், அவ்வளவுதான். நீங்கள் அந்த அளவுக்குப் போகிறீர்கள் என்றால், அது எல்லோரையும் பாதிக் கிறது. நீங்கள் ஒருவர் மட்டும் அந்த வார்த்தைகளை உபயோகப் படுத்தாதீர்கள்.

திரு. கு. ரமணி : நான் ஒருவர் மட்டுமல்ல, கட்சியினுடைய முடிவு, கட்சியே சொல்வது. (குறுக்கீடு) எங்களுக்கு என்று ஒரு அடிப்படை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதில் ஒன்றும் பிரச்சனை இல்லை. எந்த ஒரு சட்டம் கொண்டு வந்தாலும், தீர்மானம் கொண்டு வந்தாலும் தங்க ளுடைய கருத்துக்களைச் சொல்ல எல்லோருக்கும் உரிமை உண்டு. அந்த முறையிலே திரு. ரமணி அவர்கள் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்க ளுடைய கருத்துக்களைச் சொல்லி, பிறகு எல்லோரும் சேர்ந்து பெரும்பான்மையோடு சட்டத்தை நிறைவேற்றுகின்றபோது, எல்லோரும் அதற்கு ஒத்துக்கொண்டு போகவேண்டியதுதான். ஆக, எல்லோரும் எல்லாச் சட்டங்களுக்கும் ஒத்துப்போக மாட்டார்கள். கருத்துக்களைச் சொல்லி, சட்டம் நிறைவேறிய பின்னால் எல்லோரும் அதற்கு ஒத்துப்போவார்கள். அந்த முறையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களும் தங்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே பிரச்சனை இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பிரச்சனை இல்லை என்று அவை முன்னவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் எல்லோருக்கும் இது பொருந்தும். இங்கே இருக்கிற 234 உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும்.



திரு. கு. ரமணி: என்னுடைய கருத்தை நான் தெரிவித்து விடுகிறேன். இந்தச் சம்பள உயர்வு வேண்டாம் என்று அத்தனை பேர்களும் நிராகரித்தால் நாங்களும் நிராகரிக்கிறோம். அதற்குத் தயாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே சவால் வேண்டாம். நீங்கள் எப்படி கருதுகிறீர்கள் என்பது உங்கள் நிலை. வேண்டாம் என்றால் விட்டு விடுங்கள்; யாரும் கட்டாயப்படுத்திக் கொடுக்க மாட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பள உயர்வு வேண்டாம் என்ற கருத்தைச் சொல்கிறார்கள். சம்பள உயர்வு இந்த அளவுக்கு இருப்பது நியாயம் என்று சிலர் சொல்கிறார்கள். இது போதாது என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். இது அவரவர்களுடைய கருத்து, அவ்வளவுதான்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவரவர்களே, திரு. ரமணி அவர்களையோ அல்லது மற்றவர்களையோ அவர்களுடைய மனம் புண்படும்படி நான் எதையும் சொல்லவில்லை. அவர் களுடைய கருத்துக்கு ஒரு மாற்றுக் கருத்தாகத்தான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டமுன் வடிவிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்கின்ற போது இந்தச் சட்டம் நிறைவேறுகிறபோது, அதனுடைய விளைவுகள் இப்படி என்று பார்க்காமல், இதிலே தனிப்பட்ட வர்களுடைய கருத்து என்று பார்க்காமல், இந்த மன்றத்தில் இருக்கிற அனைவருடைய பிரச்சனைகளையும் கருத்திற்கொண்டு சொன்னேன். இன்னும் சொல்லப்போனால், ''சாரிட்டி பிகின்ஸ் ஆட் ஹோம்' என்று சொல்வார்கள். நான் இதை மிகுந்த வருத்தத்தோடு சொல்வதாக இருந்தாலும் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிற காரணத்தால் சொல்கிறேன். ஆலிவர் குவிஸ்ட் காலத்திலிருந்தே 'ஐ வான்ட் சம் மோர்' என்ற பிரச்சனை இருந்து வருகிறது.

இந்த மாமன்றத்தில் உறுப்பினராக வருவதற்கு முன்னால் நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் வசதியாக வாழ்ந்தவன். நான் உறுப்பினராக வந்தபின்னால் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காட முடியாமல் ஏற்கெனவே பெற்றுவந்த ஊதியத்தை இழந்தவன் நான். என்னுடைய வருமானத்தை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், அதைப் போன்று இங்கே இருக்கிற 234 உறுப்பினர்களின் வருமானத்தை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், அதை ஈடுகட்ட இங்கே தனியாக ஒரு பட்ஜெட் போட வேண்டிய நிலைமை வரும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். ஆனால் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இங்கே என்ன ஊதியம் கொடுக்கப்படுகிறது? 500 ரூபாய் சம்பளம், இதர படிகள்தான். (குறுக்கீடு) சம்பளம் 600 ரூபாய் என்று

சொல்கிறார்கள். 1,50,000 மக்களின் பிரதிநிதியாக வருகின்ற ஒரு உறுப்பினருக்குக் கொடுக்கப்படுவது சம்பளம் 600 ரூபாய்; அகவிலைப்படி 400 ரூபாய், டெலிபோனுக்கு 400 ரூபாய். நான் தெரிவித்துக்கொள்கிறேன், எங்களுக்கு டெலிபோனுக்கு பணம் வேண்டாம்; டெலிபோன் பில்லை நீங்களேகட்டிவிட்டால்போதும். அதிலே கூட லோக்கல் காலுக்கு மட்டும் கட்டினால் போதும், ட்ரங் காலுக்கு கட்ட வேண்டாம். அப்படிச் செய்தால் அது எங்களுக்கு பேருதவியாக இருக்கும்.

எங்களுக்கு சம்பளம் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் நாளை வேண்டுமென்றால் பத்திரிகையில் பெயர் வரலாம் வேங்கடரமணன் சம்பளம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்று. அதுவல்ல பிரச்சனை. சென்ற முறை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் நன்றாக இலக்கியம் படித்தவர்கள் என்பதால் இலக்கிய நயத்தோடு நல்ல தமிழிலே அழகாகச் சொன்னார்கள். ''கொள் என்று கொடுப்பது உயர்ந்தது, கொடுத்ததை வேண்டாம் என்று சொல்வது அதைவிட உயர்ந்தது'' என்றெல்லாம் இலக்கியத்திலே இருந்து மேற்கோள் காட்டி சொன்னார்கள். ஆனால் அப்படிச் சொல்வது நடைமுறைக்கு சாத்தியமா என்று பார்க்க வேண்டும். அப்படிச் சொல்வதாக இருந்தால் உறுப்பினர் சொன்னாலும் தவறு, அமைச்சர் சொன்னாலும் தவறு என்பது என்னுடைய கருத்து. பணப் பெட்டியையும் கையிலே கொடுத்துவிட்டு, திருடவும் கூடாது என்று சொன்னால் எப்படி இருக்குமோ அதைப்போன்றுதான் இருக்கும் வேண்டாம் என்று சொல்பவர்கள் கருத்து.

ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை இருக்கிறது. எவ்வளவு கொடுத்தாலும் தேவையை பூர்த்தி செய்ய முடியாது. இது மனித இயற்கை. நானும் பொருளாதாரம் எல்லாம் படித்திருக்கிறேன், 'ரிசோர்ஸஸ் ஆர் ஸ்கார்ஸ்' என்று திரும்பத் திரும்ப படித்திருக்கிறோம். நமக்குத் தேவையான அந்த அளவுக்குக் கொடுக்காவிட்டாலும் நியாயமாகக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினரான பிறகு நான் மதிப்பீட்டுக் குழுவில் உறுப்பினராக இருக்கிறேன். மதிப்பீட்டுக்குழு உறுப்பினர் என்ற முறையில் பல்வேறு மாநிலங்களுக்கு அந்தக் குழுவுடன் சென்றிருக்கிறேன்; அந்த வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. மற்ற மாநிலங்களுக்குச் செல்கிறபோது அங்கே இருக்கிற குழு உறுப்பினர்களுடன் பல விஷயங்களை பேசுவோம். பொதுவாக தமிழ்நாடு எல்லா விஷயங்களிலும் இந்தியாவிலேயே சிறந்து விளங்குகிற மாநிலம் என்ற முறையில் அந்த மாநில உறுப்பினர்கள் உங்களுக்கு சம்பளம் எவ்வளவு, என்னென்ன ஃபெசிலிட்டிஸ் என்று கேட்கும்போது நாங்கள் மிகவும் வெட்கப்படுவோம். ஏனென்றால் இந்தியாவிலேயே மிகவும் குறைந்த சம்பளம் பெறுகின்ற எம்.எல்.ஏக்கள் தமிழ்நாட்டில் இருக்கிறவர்கள்தான்.



சமீபத்திலே நாங்கள் கௌகாத்திக்கு சென்றிருந்தோம். அங்கே ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனியாக வீடுகட்டி கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது, நம்முடைய சென்னை மாநகரில் பெரிய சிறந்த பங்களாக்கள் இருக்கின்றன; அந்த மாதிரி எங்களுக்கு கட்டித்தாருங்கள் என்று கேட்கவில்லை.

சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் இரவு நேரத்திலே நீண்ட நேரம் படிக்கிறவர்கள். அப்படி படிக்கிறபோது எங்களது ரூமிற்கு வந்து தங்குகின்றவர்கள் எம்.எல்.ஏ. படிக்கிறார் என்பதற்காகத் தூங்காமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே அவ்வாறு படிக்கின்ற விதத்தில் பிரைவேட்டாக ஒரு எக்ஸ்ட்ரா ரூம் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் கட்டிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இவையெல்லாம் அடிப்படை உரிமைதான். அனைவருக்கும் தேவையானதுதான். இந்த வசதி வேண்டும் என்று கேட்பதால் நான் பேராசை பிடித்தவன் என்றோ, எந்த வசதியும் வேண்டாம் என்று சொல்வதால் மற்றவர்கள் தியாகிகள் என்றோ நினைப்பதற்கு இடம் இல்லை. அப்படி ஒருவேளை எண்ணுகின்ற உறுப்பினர்கள் இருந்தால் அவர்களிடத்தில் நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இந்தச் சபைக்குப் புதியவன். நீங்கள் எல்லாம் நீண்ட காலம் இந்த அவையிலே இருப்பவர்கள். உங்களுடைய மனதைப் புண்படுத்த வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் இல்லை. காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக மூன்று முறை எங்கள் பகுதியிலுள்ள சங்கரன்கோயில் தொகுதியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஊர்காவலன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், ஆனால் அவர்கள் இறந்ததற்குப் பிறகு அவர்களுடைய குடும்பம் பிச்சை எடுக்கிற நிலைமையில் இருக்கிறது. மரியாதைக்குரிய திரு. கக்கன் அவர்கள் நிலைமையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணம் கொடுத்து உதவியதற்குப் பிறகுதான் அவர்கள் ஓரளவுக்கு நல்ல சூழ்நிலையிலே வர முடிந்தது. இதைத் துர்பாக்கியமான சூழ்நிலை என்று காங்கிரஸ் கட்சியின் பாரம்பரியத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் கருதுவதில்லை. பெருமையாகத்தான் நாங்கள் கருதுகிறோம். அமைச்சராக இருந்த ஒருவர் அமைச்சர் பதவியை விட்டு அகன்றதற்குப் பிறகு கையிலே காசு இல்லாமல் நடந்து செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதை மிகப்பெரிய பெருமையாகக் கருதுகிறோம். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் கடந்த காலங்களில் இருந்து விட்டதன் காரணத்தால், அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் கடந்த காலங்களில் ஏற்பட்டுவிட்டதன் காரணத்தால் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறபோதாவது அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்குச் சொத்து வாங்கக் கூடிய அளவுக்கு பணம் தரவேண்டாம். அந்தக் குடும்பத்தின் அன்றாடச் செலவுக்கு அரிசி வாங்குவதற்காகவாவது பணம் தரவேண்டும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமக்காக நாம் அதிக நேரம் பேசக் கூடாது. எனவே சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: பேரவைத் தலைவா அவர்களே, இந்த சட்டத்தைப் பொறுத்தவரையில் நான் சில ஆலோசனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பெற்றுத்தர வேண்டும்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகன வசதிக்காக இனாமாகப் பணம் தர வேண்டாம்—குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து ஒரு ஐந்தாண்டுக்கால அளவிலே பெற்றுக் கொள்கிற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது பல வங்கிகளிலே எல்லாம் கடன் கொடுக்கப்படுகிறது. அவற்றைப் பெற்றாவது குறைந்தது கார் இல்லாதவர்களுக்காவது உதவுகின்ற வகையில் அந்தக் கடன் வசதியினை சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளம் வழங்கல் திருத்த சட்டமுன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த மன்றத் தலைவர் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் என்னுடைய உரையைத் துவக்குவதற்கு முன்பாக மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் ஒரு சலுகையை எதிர்பார்க்கிறேன். இதிலே பேசுவதற்கு எனக்குக் கொஞ்சம் அதிகமான நேரம் தேவை. ஏனென்றால் நான் நீண்ட இடைவெளிக்குப் பிறகு பேசுகிறேன். இந்த மன்றத்தில் நான் தான் இளையவனாக இருக்கிறேன். எனவே சற்று அதிகமான சலுகை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் அவரவர்களுக்குரிய வகையில் கருத்துக்களைச் சொன்னார்கள். ஒருவர், சம்பளம் தேவையில்லை என்று சொன்னார். அப்படித் தேவையில்லை என்றால் வாங்கக்கூடாது என்றும் சொன்னார்கள். அதேபோல நானும் எனக்குச் சம்பளம் தேவையில்லை என்று சொல்லமாட்டேன். காரணம் சம்பள உயர்வு என்பது அவசியமான ஒன்று. இந்தச் சம்பள உயர்வு மூலமாக முதலமைச்சர், சபாநாயகர், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத்தலைவர், துணைச் சபாநாயகர், தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களுக்குச் சம்பள உயர்வு கிடைத்துவிடுகிறது. இந்தச் சம்பள உயர்வு அவசியம்





தான். காரணம் இப்போது பெருமளவில் விலைவாசி எல்லாம் பெருகிவிட்டது. இந்த விலைவாசி ஏற்றத்தால் சமுதாயத்தில் இருக்கின்ற அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நீங்கள் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு விலைவாசி குறையவில்லை; மாறாக உயர்ந்துகொண்டுதான் இருக்கிறது. பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள், பால் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஜெனரல் பட்ஜெட் வரும்போது அதிகமான நேரம் பேச வாய்ப்பு தருகிறேன். அப்போது விரிவாகப் பேசிக்கொள்ளலாம்.

(முற்பகல் 11–10)

திரு. பரிதி இளம்வழுதி: ஒரு பிச்சைக்காரனிடம் 5 காசு தூக்கிப்போட்டால் கூட அவன் நம்மை ஒரு மாதிரியாகப் பார்க்கிறான். அந்த அளவுக்கு நாட்டில் விலைவாசி ஏற்றம் இருக்கிறது. அந்தவகையை குறிப்பிட்ட வகையில் நாங்களெல்லாம் சம்பள உயர்வு அவசியமானதுதான். அதுவும் சாதாரணமான குடும்பத்தைச் சார்ந்த என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தச் சம்பள உயர்வு அவசியமான ஒன்றுதான். ஆனால் நம்முடைய சம்பளத்தை உயர்த்தி நாமே சட்டம் இயற்றிக்கொள்கிற இந்த நேரத்திலே வெளி உலகத்திலே இருக்கிற மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதையும் நாமும் தொட்டு எண்ணிப் பார்க்க வேண்டும்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி இளம்வழுதி அந்த மாதிரியான விஷயங்களையெல்லாம் இதிலே சேர்த்து பேசுவது நல்லதல்ல.** இந்த அவை இந்த நாட்டின் முக்கியமான அமைப்பு. இந்த அவையைச் சேர்ந்த நாமே நம்மை குறைத்துக் கொள்ளும் வகையில் பேசுவது சரியல்ல. ஒரு எம்.எல்.ஏ. 1½ லட்சம் மக்களின் பிரதிநிதி. அதனால் இப்படி எல்லாம் பேச வேண்டாம்.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினைகளை யெல்லாம் பின்னால் பட்ஜெட் பொது விவாதம் வரும்போது பேசிக் கொள்ளலாம். அப்போது நிறைய கால அவகாசம், சலுகை தருகிறேன். இந்த நிறுவனம் சம்பந்தப்பட்டதில் இது. இதன் மீது பேசுங்கள். இந்த நிறுவனத்தின் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. அதனால் அதன் கண்ணியத்தை கருதி பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாக பேசும் அவர், எந்த எண்ணத்தின் அடிப்படையில் அப்படிக் கூறினார் என்று விளக்க அனுமதிக்க வேண்டும். சம்பள உயர்வு வேண்டாம் என்று சொல்லவில்லை, மற்றவர்களையும் கொஞ்சம் கவனியுங்கள் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்படி விளக்கம் என்ற பெயரால் இடை மறித்து மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுவது என்பது சரியாக வராது என்று நினைக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அவற்றையெல்லாம் இந்த பில்லிலே பேச வேண்டாம். * * *

திரு. பரிதி இளம்வழுதி: சம்பள உயர்வை ஒட்டி வருகின்ற கருத்துக்களை தானே நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது குறித்து விவாதம் வரும் போது பேசலாம். இதிலே வராது. இது பத்திரிகையிலே வேறு விதமாக வரும். நம்மை நாமே குறைத்துக் கொள்ள வேண்டாம். ஆகவே, அது வேண்டாம் உட்காருங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: நான் முடிக்க வேண்டாமா . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிக்கலாம். இதுபோன்ற பேச்சுக்களை தொடர்ந்து பேசக்கூடாது.

திரு. பரிதி இளம்வழுதி: அதை ஒட்டி வருவதனால்தான் சொல்கிறேன். * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைத்தான் திரும்ப திரும்ப சொல்கிறீர்கள். அது வேண்டாம் என்றுதான் நான்சொல்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் உள்ள 5 கோடி மக்களுக்கும் நாம் தான் செய்யவேண்டும். Are they adopted children of the Goverment.? சாதாரண மக்களைப் பற்றி பேசுங்கள். சாதாரண மக்களைப் பற்றி பேசினால் நான் அனுமதிக்கிறேன். இந்த விவகாரத்தைப் பேசக்கூடாது. அது சரியல்ல. இது வேறு விதமாக பத்திரிகையிலே வரும். திரு. பரிதி இளம்வழுதி பேசியதைப் படித்துப் பார்த்துவிட்டு அதை அனுமதிப்பதா இல்லையா என்ற முடிவுக்கு வரமுடியும்.

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களுக்கு பொது விவாதத்தில் அதிகமாக வாய்ப்பு தருகிறேன். அப்போது பேசிக்கொள்ளலாம். இப்போது அமரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இங்கே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டு மென்ற முறையில் அவை முன் வைக்கப்பெற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். 1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12-ம் நாள் இந்தப் பேரவைக் கூட்டத்தில் அறிவித்த தன்மையை ஒட்டி இந்தச் சட்டம் வருகிறது. அப்போது யார் யாருக்கு எந்தெந்த அளவிற்கு உயருமென்று குறிப்பிடப்பட்டதோ, அது இப்போது சட்டமாக வருகிறது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் இந்தச் சம்பளம் அவரவர்களுக்குக் கொடுக்கப்படும். சென்ற ஆண்டு ஜூலைத் திங்களில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதே தவிர, இதுவரையில் யாரும் கூடுதலான சம்பளத்தை வாங்கவும் இல்லை. வாங்கவும் முடியாது. இந்தச் சட்டத்தை பேரவையும், மேலவையும் நிறைவேற்றித் தந்தால்தான் கூடுதல் சம்பளத்தை வாங்க முடியும். இதனை மறுத்து விடுவார்களானால் நிதியமைச்சர் என்ற முறையில் எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சி தான். இனிமேல் கூட்டவேண்டாம் என்றாலும் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி தான் நிதியமைச்சர் என்ற முறையில். ஆகவே அப்படி இருந்தால் நல்லது தான். அப்படிப்பட்ட கருத்து உருப்பெற்று வளருமானால் அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று தான். இங்கு இப்படி எடுத்துப் பேசப் பட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போன்று இந்த மன்றத்தின் தன்மையையும், மற்றவையையும் நாம் உணரவேண்டும். அவர்கள் எடுத்துச் சொல்லியதைப் போன்று இந்த நாட்டில் இருக்கிற 5 கோடி மக்களுக்கான எல்லா துறைகளையும் பொறுத்தவரையில் முடிவு எடுக்கவேண்டிய பிரதிநிதிகளாக நாம் இங்கே வந்திருக்கிறோம். மாண்புமிகு சிந்தன் அவர்கள் கூட ஒன்றை ஆரம்பித்தார்கள். இந்தச் சம்பளம் வேண்டுமென்று முடிவு செய்வது நாம் தான். எவ்வளவு என்று முடிவு செய்கிற முழு உரிமை பெற்றவர்கள் நாம் தான். நமக்கென்று ஒரு தனி ஊதியக்குழுவை அமைக்கவும் முடியாது. அமைக்கவேண்டிய அவசியமும் இல்லை. அப்படி அமைப்பதும் சரியல்ல. அதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஆசிரியர்கள், மற்றவர்கள் எல்லாம் போராடு னார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். ஆசிரியர்கள் என்றால் ஒரு குறிப்பிட்ட வேலைக்கு அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு ஒரு தகுதி வேண்டும். அதற்கு பிறகு தேர்வு நடை பெறும். இன்னென்ன சம்பளம் கொடுக்கப்படும், இந்த வேலைக்கு வருகிறாயா என்று கேட்பார்கள். பிறகு இந்தச் சம்பளம் வேண்டுமென்று அவர்கள் கேட்பார்கள். அதற்கு பிறகு உயர்வு இருக்கிறது. அந்த அடிப்படையில் தருகிற சம்பள முறைகள் வேறு. அதையும் சட்டமன்ற பேரவை உறுப்பினர்களுக்கு கொடுக்கிற சம்பளத்தையும் ஒப்பிட்டுக் காட்டக் கூடாது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

3,600 கோடி ரூபாய்க்கு மேலே வரவு செலவு நடக்கிற இந்தத் தமிழக அரசு சட்டமன்ற பேரவை, மேலவை இரண்டுக்கும் சேர்த்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய சம்பளம் படி, அதற்கு ஆகிற செலவுகள், இந்தத் துறைக்கென்று இருக்கிறவர்களுக்கான செலவு இப்படி எல்லாம் சேர்த்து ஒரு கோடியே 67 லட்சம் ரூபாய் தான் செலவழிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல வேறு பல மாநிலங்களில் எடுத்துப் பார்த்தால், இதைவிட கூடுதலாக வருகிற மாநிலங்களும் இருக்கிறது. குறைவாக வருகிற மாநிலங்களும் வருகிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 3,600 கோடி ரூபாயில் 1 கோடியே 67 லட்சம் ரூபாய் தான் செலவழிக்கிறோம். அதற்காக அதிகம் செலவழிக்க வேண்டுமென்ற கட்டத்திற்கு வரவில்லை. குறைவாக இருந்த நிலையை மெல்ல மெல்ல மாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். 1962-ஆம் ஆண்டில் எல்லாம் வெறும் 150 ரூபாய் தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சம்பளமாக இருந்தது. அன்றைக்கு 12 ரூபாய் தான் படியாக இருந்தது. பிறகு 15 ரூபாயாகி, 21 ரூபாயாகி, 35 ரூபாயாகி, 50 ரூபாயாக வந்திருக்கிறது. இப்போது கூட பாராளுமன்றத்திலே அந்தப் படி 51 ரூபாய் என்று இருந்து, இப்போது சமீபத்தில் 100 ரூபாயாக ஒரு நாள் படியை உயர்த்தி இருக்கிறார்கள். வேறுசில மாநிலங்களில் கூட படி உயர்த்தி இருக்கிறது. இருக்கிற மாநிலங்களிலேயே குறைவான சம்பளத்தை நிர்ணயித்து இருப்பவர்கள் மேற்கு வங்கம் தான். ஆனால் அப்படி குறைவான சம்பளமாக இருக்க வேண்டுமென்பதல்ல.

சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் இங்கே எல்லா தரப்பினரும் வருகிற இடம். கல்வித் தகுதி என்று நாம் வற்புறுத்துகிற நிலைமை இங்கே இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற பிரதிநிதிகள் இருக்கிற இடம். மேலும் இது நிரந்தரமான இடமும் இல்லை. மறுபடியும், மறுபடியும் அவரவர்கள் சாமர்த்தியம், திறமை அடிப்படையில், செல்வாக்கின் அடிப்படையில் வென்று வந்தால் தான் உண்டு. ஓய்வூதியம் என்று ஒன்று இல்லாமல் இருந்த காலம் இருந்தது. ஓய்வு பெற்றால் ஒன்றை மட்டும் குறிப்பிட வேண்டும்.

(முற்பகல் 11-20)

சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற தகுதி வந்ததற்குப் பிறகு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற ஒரு நிலை வந்ததற்குப் பிறகு, அவர்கள் ஓய்வு பெற்றதற்கு பிறகும் சரி, இங்கே பணியாற்றுகின்ற போதும் சரி, பொதுமக்களுடைய மத்தியிலே, அவர்களுடைய மரியாதையும், மதிப்பும் காப்பாற்றப்படவேண்டும். அவர்களுடைய ஓரளவிற்கு, அதைக் காப்பாற்றிக் கொண்டு வருகிற அளவிற்கு, சாதாரண நிலையில் ஒருவர் இருப்பதைவிட, இப்படிப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, கூடுதலான செலவு ஆகிறது என்பது அனைவருக்கும் தெரியும். இப்போது கொடுக்கப்படுகிற



தொகையை வைத்துக்கொண்டு, அந்த மரியாதையை, மதிப்பைக் காப்பாற்றுகின்ற சூழ்நிலை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் இருக்கிறதா, என்று சொன்னால், இல்லை என்று தான் நான் சொல்ல முடியும்.

வேறு பல இடங்களில் இன்னும் கூட சில வசதிகளை வைத்திருக்கிறார்கள். சில பல இடங்களில் அவர்கள் தங்குவதற்கு என்று ஒரு தனி வீட்டையே ஆண்டு முழுவதும், அந்த பீரியட் முழுவதும் கூட தந்திருக்கிறார்கள். அதைப்போன்ற வசதியை நம் உறுப்பினர்களுக்குக் கூட செய்து தரவேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கூட உண்டு. ரூம் என்று கொடுக்காமல், டெல்லியிலே இருப்பது மாதிரி, வேறு பல மாநிலங்களில் இருப்பது மாதிரி, ஒரு சட்டமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவாரானால், அவர்களுக்கு என்று ஒரு தனி வீட்டை ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்கள் அந்தப் பொறுப்பிலே இருக்கிற வரைக்கும், அவருக்கு என்று வாடகையை நிர்ணயித்து, எப்படி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, 10%, 8%, 5% என்று வைக்கிறார்களோ, அந்த வகையிலே வைக்கவேண்டும். அவர்களுடைய மரியாதை காப்பாற்றப்பட வேண்டும். ஏன் என்றால், சட்டமன்ற உறுப்பினராக ஆனதற்குப் பிறகு, பொறுப்புகள் அதிகமாக ஆகிவிடுகின்றன. பொறுப்புகள் அதிகமாக ஆகின்ற காரணத்தாலே, தொகுதி முழுவதும் மக்களுடைய விருப்பத்தை அவர்கள் நிறைவேற்ற வேண்டியதிருக்கிறது.

திரு. வி. பி. சிந்தன்: ஒருவருடைய செல்வத்தினுடைய அடிப்படையில் மரியாதை இந்த நாட்டிலே காப்பாற்றப் படுவதில்லை. இந்தக் கருத்துக்கள் தவறான கருத்துக்களே என்பதைச் சொல்லி, எப்படி ஆசிரியர்கள், மற்றவர்கள் பெறுவதற்கு மிகக் கஷ்டங்கள் இருக்கிறதோ, அந்த கஷ்டங்கள் இல்லாமலேயே நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, ஒரு சட்டத்தை உருவாக்கி, பணத்தைப் பெற்றுவிடுகிறோம். சபைக்கு அவமானம் ஏற்படுகிற முறையில் பேசுவதாக, தலைவர் அவர்கள், திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். நான் அதை ஆட்சேபிக்கிறேன். அப்படி இந்த மன்றத்தை அவமதிக்க வேண்டும் என்ற நோக்கம் கிடையாது. ஒரு கொள்கையை வலியுறுத்துகிறோம் சிம்பிள் லைப். எளிய வாழ்க்கை, அது நாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். அதற்காகத்தான் சொன்னேமே தவிர, வேறு அல்ல.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதை என்று நாம் சொல்கின்றபோது, கூடுமான வரையில் அந்தத் தொகுதி முழுவதும் அவர்கள் போகும்போதும், வரும்போதும், கையிலே காசு இல்லாமல், வருகிறவர்களை வைத்து, டீ வாங்கிக் கொடு, அல்லது டிபன் வாங்கிக் கொடு என்று சொன்னால், அங்கே மரியாதை கெடுகிறது.

சாதாரணமாக காரிலே, மற்றவைகளிலே போகின்றபோது, வேறு பல நிலைமைகள் வருகின்றபோது, செலவு ஏற்படுகிறது என்று சொன்னேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் சொல்கிற கருத்தோடு நான் ஒன்றிப் போய்விட்டேன். எளிமையாக வாழ்வு நடத்தவேண்டும். குறைந்த செலவில் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற கொள்கையை எல்லாம் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் செலவுகள் என்று ஏற்படுகின்ற போது, ஒரு கல்யாணத்திற்குப் போகின்றபோது, அவருடைய செலவிலேதான் போகவேண்டும். இன்னும் மற்ற செலவுகளையும் அவர்கள்தான் செய்யவேண்டும். எனவே அவர்கள் பல்வேறு பொறுப்புகளை சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொல்கிறேன். 30 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய பொறுப்புக்களை விட, இப்போது மிகமிக அதிகமான வேலைகளும், மற்றவைகளும் வருகின்றன. நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட சம்பள உயர்வினால் ஒரு கெடுதலும் இல்லை. அதனால் ஒரு இழி நிலையும் ஏற்படப் போவதில்லை. நாம் இதை ஏற்படுத்திக் கொள்கிறோம். நாம் தான் இதற்கு முடிவு செய்யவேண்டும். ஆகவே, மற்றவைகளைப் பொறுத்தவரையில், சம்பளம் பெறுவதும், பெறாததும் அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. ஏற்கனவே இருந்த எத்தனையோ உறுப்பினர் களில், சிலர், உதாரணத்திற்கு ராஜா பொப்பிலி அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு ரூபாய்தான் சம்பளம் பெற்றார்கள். திரு. மகாலிங்கம் அவர்கள் இருக்கும்போது, அவர்களும் அந்த அளவிற்குத்தான் இருந்தார்கள். வேறு சிலர் கூட இங்கே இருக்கும்போதும், ஒரு ரூபாய் சம்பளம் கொடுத்தால் போதும் என்று சொன்னார்கள். ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் ஒரு ரூபாய் கொடுத்தால் போதும் என்று சொன்னார்கள். எனவே இது அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

இப்போது கூட மால்கம் ஆதிசேசையா அவர்களை நாம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் போட்ட போது, அவருக்கு ஐக்கிய நாடு சபையில் இருந்து பென்சன் வருகிறபோது, இதை வாங்குவதிலே எந்தவிதமான தவறும் இல்லை. இருந்தாலும் கூட, அவர்கள், ஒரு ரூபாய் கொடுத்தால் போதும் என்று சொல்லி, 3 ஆண்டுகளாக, சென்னையில் துணை வேந்தராக இருந்தபோது, ஒரு ரூபாய்தான் வாங்கிக் கொண்டார்கள். எனவே அவரவர்களுடைய கருத்தை எடுத்துச் சொல்வதிலே தவறில்லை. ஆகவே இதிலே எந்தவிதமான முரண்பாடும் இல்லை. இப்படிப்பட்ட வசதி வாய்ப்புகளை மெள்ள மெள்ள பெருக்கிக் கொண்டே போகவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. செலவினங்கள் அதிகமாக ஆகிற காரணத்தால் தான் அதை ஓரளவிற்குத்தான் நாம் உயர்த்திக் கொண்டு வருகிறோமே, தவிர வேறு அல்ல; சட்டமன்ற மானியக்



கோரிக்கை விவாதத்திற்கு வருகின்றபோது, பல மாநிலங்களில் எந்த அளவிற்கு இருக்கிறது, எந்த மாநிலம் நம்மைவிட கீழே வருகிறது, எந்த மாநிலம் மேலே இருக்கிறது என்பதைப் போன்ற புள்ளிவிவரங்களை வேண்டுமானால் நான் சொல்கிறேன். ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டம். எல்லோருடைய ஒப்புதலின் அடிப்படையிலே நிறைவேற்றியதற்குப் பிறகு இன்றைக்கு சட்டபூர்வமாக அதிகாரம் தருகிறோம்.

ஆறுமாத காலமாக இது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. நிறைவேற்றினால் தான் சம்பளம் வாங்க முடியும். ஆகவே, எல்லோரும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக வாங்குவதற்கு ஒரு வழிமுறை ஏற்படுகிறது. ஆகவே அந்த சூழ்நிலையில் இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 7 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 2. அறிக்கைகள் அளித்தல்.

(ஈ) "தைவான் போனவர்கள்" என்ற தலைப்பில் வந்துள்ள செய்தியில் தம்பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்களின் விளக்க அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய செய்தித் தாட்களில் "தைவான் போனவர்கள்" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள செய்தியில் எனது பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளதால், விளக்க அறிக்கை ஒன்றினை இந்த அவைக்கு அளிக்க விரும்புகிறேன்.

1962 ஆம் ஆண்டில் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன், அதற்குப் பிறகு சீன இந்திய எல்லைப் போர் மூண்டது. அதில் சீனா நமது நேச நாடு அல்ல என்ற அறிவிப்பு தரப்பட்டது. அதற்குப் பிறகு 1964-ல் ராஜ்ய சபையில் சுதந்திராக் கட்சித் தலைவர் தயாப்பாடேல், ஜனசங்க கட்சித் தலைவர் திரு. வாஜ்பாய், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரிதிராஜ்சிங், சுந்தரமண பட்டேல், நரசிம்மரெட்டி, தி.மு.க.வைச் சேர்ந்த திரு. நாஞ்சில் மனோகரன், நான் ஆகிய 9 பேர் கொண்ட ஒரு பாராளுமன்ற குழுவை தென் வியட்நாம் நாட்டிற்கும் தைவான் நாட்டிற்கும் அழைத்தார்கள். நாங்களும் சென்றோம். அது ஏறக்குறைய ஒரு சுற்றுலா போலத்தான் இருந்தது.

அந்தப் பயணத்தில் கூட பாதி செலவு எங்களுடையதுதான். ஆனால் தென் வியட்நாம் அரசாங்கமும், தைவான் நாட்டு அரசாங்கமும் எங்களை அரசு விருந்தினர்களாக ஏற்றுக் கொண்டார்கள். தென் வியட்நாம் நாட்டில் அப்போது போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தென் வியட்நாம் நாட்டுத் தலைநகரான சைகோன் நகரத்தை சுற்றிப் பார்க்கும் நல் வாய்ப்பை பெற்றோம். அங்கு ஏராளமான தமிழர்கள் கடைகள் வைத்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தென் வியட்நாமில் அப்போதிருந்த குடியரசுத் தலைவர் பிக்மிங் அவர்களையும், தைவான் நாட்டில் திரு. ஷியாகே ஷேக் அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பை நாங்கள் பெற்றோம். அவர்கள் இருவரும் இந்தியாவோடு தங்களுக்கு உறவு வேண்டும் என்பதை எங்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு ஜப்பான் நாட்டிற்குப் போய்விட்டு வந்தோம்.

பின்னர் டெல்லி திரும்பிய பிறகு அப்போதிருந்த இந்தியப் பிரதமர் மறைந்த இந்திரா காந்தி அவர்களை சந்தித்து நாங்கள் சுற்றுப் பயணம் சென்ற நாடுகளைப் பற்றியும் அங்கு சந்தித்த தலைவர்களுடன் நாங்கள் பேசிய விவரங்கள் குறித்தும் அவரிடம் தெரிவித்தோம்.





மேற்கண்ட எனது பயணத்தைப் பற்றி 'தென் கிழக்கு ஆசியாவில்' என்று தமிழில் ஒரு நூலைக் கூட நான் எழுதியிருக்கிறேன். மேற்கண்ட அந்த பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து அழைத்துக்கொண்டு போனது திரு. ராமசுவருப் ஆகும். ஆகவே எங்களுக்கும் அவர் சம்பந்தப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிற உளவு வேலைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் அப்போது நாங்கள் எதிர்கட்சியில் பணியாற்றியவர்கள். எங்களிடத்தில் எந்தவிதமான நாட்டு இரகசியமோ அதை வெளிவிடக்கூடிய வாய்ப்போகூட இல்லை. எனவே, எங்களுக்கு அதில் எந்தவித தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உள்ளாட்சித்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 112-வது விதியின் கீழ் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28-1-1986 அன்று ஊராட்சி மற்றும் நகராட்சி தேர்தல்களில் உறுப்பினர் பதவிக்கோ தலைவர் பதவிக்கோ சேர்த்து ஒரு நபர் நிற்க கூடாது என்று தெரிவித்தேன். மேலும், ஒரு நபர், ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் கொடுத்திருந்தால், தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்குரிட்டினி செய்யும் போது, வேட்பாளர்களை அழைத்து ஏதேனும் ஒன்றைத் திரும்பப் பெற வேண்டுமெனவும், திரும்பப் பெற மறுத்தால், ஏதேனும் ஒன்றை அவர் திரும்பப் பெற்றதாகக் கருதி ரத்து செய்வார் என்றும் தெரிவித்தேன்.

ஆனால், இவ்வாறு ஒரு வேட்பாளர் ஒன்றுக்கு மேல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தால், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் தேதியன்றோ அதற்கு முன்போ, ஒரு பதவிக்கான வேட்பு மனுவைத் தவிர மற்ற வேட்பு மனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு திரும்பப் பெற்றுக் கொள்ளாவிட்டால், தேர்தல் நடத்தும் அலுவலர் அந்த நபரின் எல்லா வேட்பு மனுக்களையும், சட்ட விதிகளின்படி ரத்து செய்வார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(எ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள்சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/1986)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், கு. சுப்பராயன் ஆகியோர், "ஆளுநர் அவர்களால் 3-12-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற

1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/1985) இப்பேரவை நிராகரிக்கிறது'' என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

(முற்பகல் 11.30)

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஆளுநர் அவர்களால் 3-12-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1985) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு 17/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கடந்த டிசம்பர் 1985 லிருந்து மேலும் ஒரு ஆண்டிற்குத் தனி அதிகாரி பதவியை நீட்டிப்பதற்காக அவசரச் சட்டமாக வந்து, இரண்டு அவசரச் சட்டங்களாக வந்து, இப்போது மசோதாவாக வந்திருக்கிறது. குறிப்பாக பொது வாகக் கூட இல்லாமல் புதுக்கோட்டை மார்க்கெட் கமிட்டி சம்பந்தமாகத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. அந்த மார்க் கெட் கமிட்டியை எப்போது கலைத்தார்கள்? அது 1978-ல் கலைக்கப்பட்டது. 1978 லிருந்து இதுநாள் வரையிலே பப்ளிக் ரெப்ரசென்டேடிவ் இல்லாமல் வெறும் தனி அதிகாரிகளே ஆட்சி செய்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இதனால் விவசாயத் துறையிலே சடுபட்டிருக்கின்ற விவசாயத் தொழிலாளிகள் முறையான விலையை, சீரான விலையை அடைவதற்கு அல்லது பெறுவதற்கு இதுபோன்ற அதிகாரிகளுடைய செயல் தடுக்கிறது என்பதை நான் முதலில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதோடு மக்கள் பிரதிநிதி

*1986 ஆம் ஆண்டு சனவரி 23 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



களே இருந்திருப்பார்களேயானால், விவசாயிகளுடைய பிரதிநிதி களே இருந்திருப்பார்களேயானால் இந்நிலை இல்லை. எட்டு, ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு நாம் கூடப் பேசினோம். கரும்புக்கு விலையை உயர்த்தித்தர வேண்டும், காரணம் உற்பத்திச் செலவு அதிகம் ஆகிறது என்று. இதே வேளாண்மைத்துறை அமைச்சர் நல்லெண்ணத்தோடு ரூ. 10 உயர்த்தித் தந்திருக்கிறார்கள். தனிப்பட்ட அதிகாரிகள், அரசு அதிகாரிகள் இருக்கின்றபோது, உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய விளை பொருள்களுக்கு முறையான விலை, நியாயமான விலை கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இந்தச் சூழ்நிலையில், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்காத ஒரு அமைப்பாக தனி அதிகாரிகளுடைய நிர்வாகம் இயங்குகிறது என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், அமைச்சர் அவர்கள் ஓராண்டு கேட்கிறார். தனி அதிகாரிகள் கன்ட்டினியூ செய்வதற்கு மேலும் ஓராண்டு தாருங்கள் என்று கேட்கிறார். நான் ஏற்கனவே அறிமுக நிலையில் எதிர்க் கின்றபோது சொன்னேன். என்ன காரணம் என்று சொல்லு கின்றபோது, ஓரிரு வாரங்களிலே செய்யக்கூடிய மிகச் சாதாரணக் காரணம் என்று கூறினேன். மத்திய சர்க்காரிட மிருந்து ஒரு மாடல் பில் வந்திருக்கிறது. அந்த மாடல் பில்லை வைத்து அதை இன்கார்ப்பரேட் பண்ணி இங்கே நாம் ஒரு மசோதா தயாரிக்க வேண்டும். நான் சொன்ன மாடல் பில் வந்து மூன்று மாதங்கள் அல்லது ஆறு மாதங்கள் ஆகின்றன என்றாலும் கூட நான் ஒத்துக்கொள்வேன். ஏனென்றால் அதையெல்லாம் விவாதித்து முறையாக அந்த மசோதா தயாரிக்க வேண்டும்; அதனால் அவகாசம் வேண்டும் என்று சொல்லப்படுமானால் நான் ஒத்துக்கொள்வேன். ஆனால் மத்திய சர்க்காரிடம் மாடல் பில்லை இந்தச் சர்க்கார் கேட்டு 1984 டிசம்பரில் பெற்றிருக்கிறது. 1984 டிசம்பரிலே மாடல் பில்லைப் பெற்ற நமது சர்க்கார், இது நாள் வரையில், இன்கார்ப்பரேட் பண்ணுகிற அந்த வேலையை—அதை இணைத்து ஒரு மசோதா தயார் செய்து அந்த மசோதாவை சட்டமன்றத்திலே வைத்து, அந்த சட்டப் படி மார்க்கட்டிங் கமிட்டிக்கு தேர்தல், நிர்வாகிகளை, ரெப்ரசன்டேடிவ்களை தேர்ந்தெடுக்கிற வேலையை—செய்யத் தவறுகிறது. நம்முடைய பஞ்சாயத்து போர்டு பஞ்சாயத்துயூனியன், முனிசிபாலிட்டிக்குக் கூட தேர்தல்கள் அறிவித்தாகிவிட்டது. பிப்ரவரி 23-ல் அவற்றிற்குத் தேர்தல்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தக் கால கட்டத்தில், அமைச்சர் அவர்களும் முன் வந்து. அவருடைய பதிலில்—இந்தத் தேர்தல்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினால் இவற்றை நடத்தமுடியவில்லை என்று எப்படி மெட்ராஸ் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர் கார்ப்பரேஷன், மதுரை கார்ப்பரேஷன் எலக்‌ஷனுக்கு காரணம் சொல் கிறார்களோ, அப்படி வேண்டுமானாலும் காரணங்கள் வைத்துக் கொள்ளட்டும்—லோக்கல் அட்மினிஸ்டிரேடிவ் பாடிக்கு எலக்‌ஷன் முடிந்தவுடன் மத்திய சர்க்காருடைய மாடல் பில்லைப் பரிசீலித்து, ஆராய்ந்து, ஒரு 'காம்பரஹன்சிவ் ஆக்ட்' ஆக ஒரு மசோதாவைத் தயார் செய்து, 3, 4 மாதங்களிலே நாம் தேர்தல் நடத்துவோம் என்று அமைச்சர் அறிவிப்பார் என்று நான் நம்புகிறேன்.

இன்னும் இரண்டு மாதத்தில் அந்தத் தேர்தல் வரப் போகிறது என்றால், மார்ச், ஏப்ரலில் கூட, இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, சட்டமன்றம் நடக்கிறபோது கொண்டு வந்து, அதற்குரிய மக்கள் பிரதிநிதிகள் வருகின்ற அளவுக்கு, விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நியாயமான விலை, அதுவும் விலைவாசி ஏறு கின்ற இந்தக் காலக்கட்டத்தில், அந்த உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும். அதற்குத் தடையாக தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகையால் நான் இந்தச் சட்டத்தை எதிர்த்து அமர்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், வேளாண் விளை பொருள் சந்தைக் குழு அதிகாரிகளுக்கு மேலும் 1 ஆண்டு பதவிக் காலம் நீடிக்கப்படவேண்டும் என்று மசோதா கொண்டு வந்திருக் கிறார்கள். நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இப்படி 8 ஆண்டுக் காலம், 1978-ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரையில், அந்த விவசாயிகளுடைய வேளாண்மைவிளை பொருள் களுக்கு எல்லாம், நியாய விலை கிடைக்கவில்லை. இன்றைக்குப் பருத்தியிலிருந்து பல்வேறு விதமான பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து, அதை கொள்முதல் செய்யக்கூடிய விநியோகம் செய்யக்கூடிய, அங்காடிகளில், அதிகாரிகள் தங்கள் இஷ்டத்திற்கு தேவையானவர்களுக்கு என்ன என்ன செய்யவேண்டும், தேவை இல்லாதவர்களுக்கு என்ன என்ன செய்யவேண்டும் என்ற நிலை வந்து, அந்த நிர்வாகமே இன்று சீர் குலைந்திருக்கிறது.

குறிப்பாக இந்த ஆண்டு கூட, பருத்தி விவசாயிகள் கூட, பல்வேறு விதமான போராட்டத்தைத் துவக்குகிறார்கள், வேளாண்மைத் துறையில் தென்னம்பிள்ளைகள் விவசாயி களுக்குக் குறைந்த விலையில் விநியோகம் செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், தென்னம்பிள்ளைகள் எல்லாம் நன்றாக வளர்க்கப்பட்டு எந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேரவேண்டுமோ, அவர்களுக்குப்





போய்ச் சேராமல், இடைத்தரகர்களிடத்திலே கமிஷன் பேசிக்கொண்டு, பெயர்களை மட்டும் தனித்தனியாக எழுதி, தென்னம்பிள்ளைகளை மொத்தமாக, விநியோகம் செய்யக் கூடிய ஒரு தவறு நடந்து கொண்டிருக்கிறது. அது என்னுடைய தொகுதியில் நடந்து இருக்கிறது. இப்படிப்பட்ட முறைகேடு களைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவிக் கிறேன். எல்லா அதிகாரிகளும் இந்தத் தவறைச் செய்கிறார்கள் என்று குற்றம் சாட்ட விரும்பவில்லை.

அப்படி அந்த அதிகாரிகளிடத்தில் தவறு ஏற்படாமல் தடுக்க வேண்டுமானால், ஒரு ஆண்டு என்பதற்குப் பதிலாக, இன்னும் 3 மாதத்தில் தேர்தலை நடத்தி, நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய குறைபாடுகளைத் தடுக்கவேண்டும். தவறுகள் சிறிதளவில் ஏற்பட்டாலும்கூட, அது அமைச்சர் அவர்களுக்கும் கெட்ட பெயர் தரும். அரசுக்கும் கெட்ட பெயர் தரும். அந்த அளவுக்குவராமல் தடுக்கவேண்டுமானால், மேலும் ஒரு ஆண்டு என்பதை, 3 மாதம் என்று குறைத்து, அந்தத் தேர்தல்களை இப்பொழுதே அறிவித்து, அந்த நிர்வாகச் சீர்கேடு களையும், குறைபாடுகளையும் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

(மு.ப. 11-40.)

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் விளைபொருள் சந்தைகள் சம்பந்தப்பட்ட திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்த போதே நான் எதிர்த்துப் பேசியிருக்கிறேன். இந்தச் சட்டத் திருத்தத்திலே 7 ஆண்டுகள் ஆறு மாதம் தனி அதிகாரிகள் காலம் என்று இருப்பதை 8 ஆண்டுகள் ஆறு மாதம் என்று ஆக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவின் நோக்க காரண விளக்கவுரையிலே இந்தச் சட்டம் 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது என்றும் 1984 ஆம் ஆண்டு டிசம்பரில் இந்திய அரசு, வேளாண் விளைபொருள் சந்தைகள் பற்றிய நோக்கத்திற்காக, இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவினால் வரையப் பட்ட வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டமுன்வடிவின் மாதிரி ஒன்றினை மாநில அரசுக்குப் பரிசீலனைக்காக அனுப்பி வைத்துள்ளது. அந்த மாதிரிச் சட்ட முன்வடிவில் கண்ட பல வகை முறைகளையும்கூட கருதியுள்ள விரிவான சட்டத்தில் சேர்ப்பதற்காகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதனால் கருதியுள்ள சட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கும் இன்னும் சில காலமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக்காலம் ஆகிவிட்ட பிறகும்கூட இன்னும் சில காலம் ஆகும் என்று சொல்லப்பட டிருக்கிறதே தவிர எவ்வளவு காலம் என்று சரியாகக் குறிப்பிடவில்லை. சில காலம் என்று சொல்வது எப்போதும் சொல்லிக்கொண்டே இருக்கலாம். அந்த முறையிலே ஆயுட்காலத்தை நீடித்துக்

கொண்டே போவது சரியல்ல, அந்தச் சந்தைக் குழுக்கள்
இல்லாத காரணத்தினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்
டிருக்கிறார்கள். நோடிபைடு ஏரியாக்கள் என்றும் நோடிபைடு
பொருள்கள் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு
விவசாயிகள் கொடுத்தாலும் சரி கொடுக்காவிட்டாலும் சரி ஒரு
ரூபாய்க்கு விற்பனை செய்தால் 45 காசு செஸ் என்று வசூலிக்கப்
படுகிறது. குறிப்பாக அமைச்சர் அவர்களுக்கே அது தெரியும்.

திண்டுக்கல் நகரத்திலே சந்தைக் குழு ஊருக்கு வெளியே
இருப்பதால் மக்கள் தொடர்பு இல்லாத இடத்திலே இருக்கிறது
என்ற காரணத்தினால் எல்லோருக்கும் கஷ்டமாக இருக்கிறது.
விவசாயிகள் போனால் பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது.
சில இடங்களில் பணம் உடனடியாகப் பட்டுவாடா செய்யப்படு
வதில்லை. அதைப்போலவே கோவை போன்ற இடங்களிலேயும்
நோடிபைட் பொருள்களிலிருந்து தேங்காய் போன்ற பொருட்
களை நீக்கிவிட்டார்கள். அதனால் விவசாயிகளுக்குப் பெரிதும்
பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. பருத்தி, மணிலா, மரவள்ளிக்
கிழங்கு போன்ற பொருட்கள் மோசமான விலைக்கு விற்க
வேண்டிய நிலைமை ஏற்படுகிறது, அந்த விவசாயிகள் சில
மாதங்களுக்கு முன்னாலே தங்களுடைய உணர்வுகளை வெளிப்
படுத்துகிற முறையிலே தாங்கள் உற்பத்தி செய்த பருத்திக்கு
உரிய விலை கிடைக்காமல் அதன் விலை படு வீழ்ச்சியாகிவிட்ட
காரணத்தினால் அந்தப் பருத்தியை சேலத்திலே எரித்தார்கள்.
இப்படி பருத்தி, மணிலா போன்ற பொருள்கள் மோசமான
அளவுக்கு தனிப்பட்ட வர்த்தகர்களால் மோசடி செய்யப்படு
கின்ற நிலைமையிலே மிகக் குறைந்த விலைக்கு வாங்கப்படு
கிறது. தனி அதிகாரிகளோடு இந்த வியாபாரிகள் தொடர்பு
வைத்துக் கொண்டு சந்தையிலே அந்தப் பொருள்களை விற்கச்
செய்யாமல் வியாபாரிகளிடத்திலே கொடுக்கக்கூடிய சூழ்
நிலையை ஏற்படுத்திவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் மிகவும்
பாதிக்கப்பட்டிருக்கறார்கள். விவசாயிகளுக்கு என்னதான் செய்
தாலும்கூட அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு
நியாயமான விலை கிடைக்கும்போதுதான் அவர்களுக்குத் திருப்தி
ஏற்படும். ஆகவே விரைவிலே தேர்தலை நடத்தவேண்டும்.
இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கும் அந்தத் தேர்தலை
நடத்துவதற்கும் சம்பந்தம் இல்லை. தேர்தலை எப்போது
வேண்டுமானாலும் நடத்தலாம். 6 மாதம் என்று போட்
டாலும், 1 வருடம் என்று போட்டாலும் அப்போது சட்டம்
கொண்டுவரலாம், ஆனால் அதற்காக தேர்தலைத் தள்ளிப்
போட வேண்டியதில்லை, இப்போதே உள்ள உறுப்பினர்களை
வேட்பாளர்களாக்கி டைரக்டர்கள் போர்டை தேர்ந்தெடுக்
கலாம். அதிலே ஒன்றும் சிரமம் இல்லை. எனவே சட்டம்
கொண்டுவருவதற்கும் தேர்தலை நடத்துவதற்கும் சம்பந்தம்
இல்லை. சட்டம் கொண்டுவர வேண்டுமென்பதற்காக தனி
அதிகாரிகள் காலத்தை நீட்டித்துக்கொண்டே போவது சரியல்ல.
இந்தக் கூட்டுறவு ஆண்டு இறுதிக்குள்ளாக தேர்தலை நடத்து
வதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்று
நம்புகிறேன்.



அந்த முறையிலே நீங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள்
தேர்தலை நடத்தி முடிப்பதற்கான முயற்சிகளைச் செய்யுங்கள்,
அதற்குப் பிறகு சட்டத்தைக் கொண்டு வந்து எப்படி வேண்டு
மானாலும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று கேட்டு
என்னுடைய உரையை முடிக்கிறேன், நன்றி.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர்
அவர்களே, வேளாண் விளைபொருள் அங்காடிகளின் தனி
அலுவலர்களிடையே பதவிக் காலத்தை நீட்டிப்பது குறித்து
கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு
உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்
கிறார்கள். அந்தத் தனி அலுவலர்களுடைய பதவிக் காலம்
தொடர்ந்து நீடிக்கப் பெற வேண்டுமென்பதிலே இந்த அரசுக்கு
மகிழ்ச்சி இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்காடிக்
குழுக்களிலே அங்கம் வகிக்கின்ற பொழுதுதான் அது இன்னும்
பெருமளவில் பயனுள்ள வகையிலே விவசாயப் பெருமக்களுக்கு
நல்ல பலன்களைத் தர முடியும் என்பதிலே மாறுபட்ட
கருத்துக்கு இடமில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள், தேர்தல்
நடப்பதற்கும் சட்டத்திற்கும் தொடர்பில்லை என்று குறிப்
பிட்டார்கள். சட்டத்தின் அடிப்படையிலேதான் நாம்
தேர்தலை நடத்த வேண்டும். இப்பொழுது இருக்கின்ற
அங்காடிக் குழுக்களின் சட்டத்தின்படி நாம் இப்பொழுது
தேர்தலை நடத்தலாம். ஆனால் அப்படி நடத்துவதாக இருந்
தால் அந்தக் குழுக்களினுடைய வருவாய் தேர்தல் நடத்து
வதற்கே செலவாகிவிடும் என்கின்ற அளவிற்கு சில சிக்கல்கள்
இருக்கின்ற காரணத்தினால்தான் சில மாற்றங்களைச் செய்ய
வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

அதுமட்டுமல்ல, நாம் முன்பு கொண்டு வந்திருக்கின்ற
சட்டத்தை இன்றைக்கு நடைமுறையிலே வைத்துப் பார்க்கின்ற
பொழுது அதிலே பல விரிவான திருத்தங்கள் செய்ய வேண்டிய
நிலைமைகள் ஏற்படுகின்றன. விற்பனைக் குழுக்களினுடைய
பணியாளர்களை அரசு அலுவலர்களாக நாம் அறிவித்திருக்
கிறோம். அதற்குச் சட்டத்திலே நாம் திருத்தங்களைக் கொண்டு
வர வேண்டும்.

விவசாயப் பெருமக்கள் தங்களுடைய விளை பொருட்களை
அங்காடிகளிலே வைத்துவிட்டு முன்பணமாகப் பணம் பெறக்
கூடிய அளவிற்கு நிலைமைகள் இல்லை. ஆகவே, அவர்கள்
நல்ல விலை கிடைக்கின்றவரைக்கும் அந்தப் பொருளை
அங்காடிக் குழுக்களில்---ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களிலே
வைத்து விட்டு, வங்கிகளிலே முன் பணம் பெறத் தக்க அளவிற்கு
நிலைமைகளை உருவாக்குவதற்கான சட்டத் திருத்தத்தைக்
கொண்டு வரவிருக்கிறோம்.

அதைப் போல, ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தினுடைய செயலாளர் பதவிக்குரிய தகுதியை நிர்ணயிப்பதற்கும் சட்டத் திருத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. இது முழுக்க முழுக்க மாநில அரசினுடைய உரிமைக்கு உட்பட்ட சட்டம். மைய அரசு மாதிரி சட்டம் ஒன்றை அனுப்பியிருக்கிறது என்பது உண்மை. ஒரு ஆய்வுக் குழுவாலே கொண்டுவரப்பட்ட, அதனுடைய ஆலோசனைகளை உள்ளடக்கியதாக வந்திருக்கிறது. ஆகவே அந்தச் சட்டத்திலே இருக்கின்ற நல்ல அம்சங்களையும், இதிலே இணைத்து சட்டத் துறைக்குக் கடந்த 10-5-1985-லே நாம் அனுப்பியிருக்கிறோம். அவர்களிடத்திலேயிருந்து அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வரக்கூடிய வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அந்த ஒருங்கிணைந்த சட்டம் இங்கே கொண்டு வரப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆகவே, அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை நல்ல வகையிலே சீர்திருத்தி அமைப்பதற்குரிய வகையில் பல ஏற்பாடுகளை அந்தச் சட்டத்தின் மூலமாகப் பெற்று, தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் இங்கே தென்னம்பிள்ளை விநியோகத்தைப் பற்றித் தெரிவித்தார்கள். வேளாண்மைத் துறையின் மூலமாக நான் தெளிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு பொருட்கள் மானிய விலையிலே விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப்படுகிற பொருட்கள் விவசாயப் பெருமக்களுக்குச் சரியாகச் சென்று சேர்கின்றனவா என்று கண்காணிப்பதற்குரிய ஏற்பாட்டை அரசு செய்திருக்கிறது என்றாலும், சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்றவர்கள் அதைக் கண்காணித்து, அதிலே தவறுகள் நடப்பதாகத் தெரிந்தால் அதை உடனடியாக அறிவிக்கிறபொழுது நாங்கள் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, ஒரு சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னாலே நடக்கலாம், கொண்டுவந்த பின்புதான் தடுக்க முடியும் என்பது அல்ல. எப்படிப்பட்ட சூழ்நிலையிலேயும் தவறுகளைக் களைய வேண்டுமென்பது தான் அரசாங்கத்தினுடைய நோக்கம். ஆகவே, இந்த விற்பனைக் கூடங்களைப் பொறுத்தவரையில் ஒருங்கிணைப்புச் சட்டத்தை, வரக்கூடிய சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் இந்தச் சட்ட முன்வடிவை அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டு அமைகின்றேன்.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 2, for the words "not exceeding sc ven ye rs, substitute the words, "not exceec'ingsix ye rs and six months."

திருத்தம் முறைப்படி வழி மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(முற்பகல் 11-50)

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 3, for the words 'eight years and six months' substitute the words 'eight years.''

திரு. சு. பாலன்: நான் அதை வழிமொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.

“முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.”

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

“In the enacting formula, for ‘thirty-sixth year’ substitute ‘Thirty-seventh year’”.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1986), திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்”.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், ஜே. ஹேமச்சந்திரன், கு. சுப்பராயன் ஆகியோர், “ஆளுநர் அவர்களால் 7-9-1985 ஆம்



தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1985) இப்பேரவை நிராகரிக்கிறது” என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆளுநர் அவர்களால் 7-9-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1985) இப்பேரவை நிராகரிக்கிறது”.

திரு. சு. பாலன்: நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், ஜே. ஹேமச்சந்திரன், கு. சுப்பராயன் ஆகியோர், “ஆளுநர் அவர்களால் 5-12-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1985) இப்பேரவை நிராகரிக்கிறது” என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“ஆளுநர் அவர்களால் 5-12-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1985) இப்பேரவை நிராகரிக்கிறது”.

திரு. சு. பாலன்: நான் அதை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்”.

---

*1986 ஆம் ஆண்டு சனவரி 27 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1986 ஜனவரி 29

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவசரச் சட்டங்
களை நிராகரிக்கும் தீர்மானங்களும் அமைச்சர் அவர்களின்
தீர்மானமும் பேரவையில் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.
இந்தச் சட்ட முன்வடிவினைப் போலவே சட்ட முன்வடிவு எண்
20/1986-ம் உள்ளது. இந்தச் சட்ட முன்வடிவின் மீது உறுப்
பினர்கள் பேசும்போதே மற்ற அந்தச் சட்டமுன்வடிவின்மீதும்
தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துவிடலாம். பின்னர்
அதை எடுத்துக்கொள்ளும்போது தனித்தனியாக விவாதமின்றி
எடுத்து நிறைவேற்றலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் முன்னால் கூட்டுறவுத்
துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள 19/1986 மற்றும்
20/1986 ஆகிய இரண்டு சட்ட முன்வடிவுகளுமே கூட்டுறவுச்
சங்கங்களுடைய தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை
நீட்டிப்பதற்கான சட்ட முன்வடிவுகளாகத் தானிருக்கின்றன.
அதுவும் முன்னாலே அவசரச் சட்டங்களாக பிறப்பிக்கப்பட்டு,
இப்பொழுது அசல் சட்டமாக ஆக்குவதற்கான சட்ட முன்வடிவு
களை அமைச்சர் அவர்கள் மொழிந்திருக்கிறார்கள்.

இப்படிப் பலமுறை இந்த சட்ட முன்வடிவுகள் இந்த அவையில்
விசாரிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கின்றன. இதிலே சொல்லக்
கூடிய கருத்துக்கள் என்ன என்று பார்த்தால் சட்ட விதிகள்
தயாராக இல்லை என்பதுதான். 1984-க்கு முன்னால் சட்டம்
வரவில்லை என்ற காரணத்தைச் சொல்லி தனி அதிகாரிகள்
கால நீட்டிப்புச் சட்டங்களைக் கொண்டுவந்தார்கள். இப்போது
சட்ட விதிகள் தயாராகவில்லை என்று கூறி, சட்ட முன்வடிவைக்
கொண்டு வந்திருக்கிறார்கள். 8 ஆண்டு 10 மாதம் தனி அதிகாரிகள்
ஆயுள் காலமாக இருந்ததை இப்போது 9 ஆண்டு
10 மாதம் என்று அவர்களுடைய ஆயுள் காலத்தை நீட்டித்துத்
தரவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். சட்டம் வந்தபிறகு சட்ட
விதிகள் இரண்டாண்டுக் காலம் ஆன பின்னாலும் தயாராக
வில்லை என்று சொல்லி, தனி அதிகாரிகள் ஆயுளை நீட்டிப்பது
எந்த வகையிலும் சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

இன்றைக்குத் தனி அதிகாரிகளுடைய பொறுப்பிலே கூட்டுறவு
அமைப்புகள் செயல்படுகின்ற காரணத்தால் எப்படிப்பட்ட
சிரமங்கள் ஏற்படுகின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத்
தெரியும். இன்றைக்குத் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை ஒரு
தேக்க நிலையில் இருக்கிறது. இன்றைக்குக் கூட்டுறவுத் துறையில்
ஏற்பட்டிருக்கிற தேக்கம் கூட்டுறவுத் துறைக்கும் அதைச் சார்ந்
திருக்கிறவர்களுக்கும், குறிப்பாக விவசாயிகளுக்கும் மிகப் பெரும்
சிரமத்தை, சங்கடத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த நிலைமை
ஏற்படுவதற்குக் காரணம் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டு
இல்லாததுதான் அடிப்படையான காரணமாக இருக்கிறது
என்பதை அமைச்சர் அவர்களும் உணருவார்கள்.



1986 ஜனவரி 29] [திரு. கோ. வீரய்யன்]

குறிப்பாக விவசாயிகளுடைய கடன் பிரச்னை தமிழ்நாட்டில்
தீர்க்கப்படாமல் இருப்பதன் காரணமாக தேக்க நிலை ஏற்பட்டிருக்
கிறது. விவசாயிகளிடமிருந்து கடனைப் பெறுவதற்கான முயற்சி
களை அதிகாரிகளால் எடுக்க முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்
பட்ட உறுப்பினர்கள் நிர்வாகம் நடத்தினால் இந்தப் பிரச்னை
வந்திருக்காது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

தேங்கியிருக்கிற விவசாயிகள் கடன் பிரச்னையைத் தீர்ப்
பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னால் ஒரு கேள்விக்குப் பதில்
சொல்லும்போது அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.
திரு. மூனு ஆதி தலைமையில் அமைக்கப்பட்ட வேளாண் உயர்
மட்டக் குழு, கூட்டுறவுக் கடன் பற்றி பரிசீலனை செய்து,
ஏகமனதாக ஒரு பரிசீலனையை அரசுக்கு அனுப்பி மூன்று ஆண்டு
களுக்கு மேலாகிறது. சென்ற சட்டமன்ற கூட்டத்தொடரில்
கேட்கும்போது வேளாண் உயர் மட்டக் குழுவின் பரிந்துரையை
அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது; பரிசீலித்து முடிவு
செய்யும் என்று சொன்னார்கள். அப்படிப் பரிசீலிக்கப்பட்டதன்
விளைவாக எடுத்த முடிவுகள் என்னவாயிற்று? அல்லது
பரிசீலனைக்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதை அமைச்சர்
அவர்களிடமிருந்து தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏனென்றால் விவசாயிகளுக்குத் தொடர்ச்சியாக வறட்சி,
வெள்ளம் இப்படி மாறி மாறி வந்து பேரிழப்பு ஏற்பட்டு,
அவர்களுடைய வாழ்க்கை இன்றைய தினம் பாதித்துக்கொண்
டிருக்கிறது. இந்த ஆண்டு கூட 4.5 மாவட்டங்களில் பெரு
வெள்ளம் ஏற்பட்டு, பாதிக்கப்பட்டிருக்கின்றன. 200 கோடி
ரூபாய்க்குமேல் இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அரசு
சொல்லியிருக்கிறது. அரசு சொல்லியிருக்கிற பாதிப்பு ரோடுகள்
பாதிப்பு, பாசனக் கால்வாய்கள் பாதிப்பு, கண்மாய்கள் பாதிப்பு
போன்றவை பற்றியதுதான். இவை தவிர பயிர் இழப்பு, கால்நடை
இழப்பு, குடியிருப்பு இழப்பு, பிற உயிர் இழப்புகள் எல்லாம்
பார்த்தால் இந்த இழப்பு 200 கோடி ரூபாய்க்குமேல் இருக்கும்.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயம் மட்டும் ஏறத்தாழ
200 கோடி ரூபாய்க்கு இருக்கும். அந்த வகையிலே விவசாயிகள்
பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இந்த நிலையில்
இன்னொரு பக்கத்தில் வறட்சி பயமுறுத்திக்கொண்டிருக்கிறது.
தமிழ்நாட்டில் கடலோரப் பகுதியில் இருக்கிற சில மாவட்டங்கள்
தவிர மற்ற பகுதிகளில் வறட்சி ஏற்பட்டு விவசாயிகளுடைய
பொருளாதாரத்தைச் சீரழித்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதி
மக்கள் எல்லாம் வாழ்வதற்கு வழியில்லாமல் வேறு இடங்
களுக்குச் செல்லக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது. இந்தப்
பிரச்னைகளை எல்லாம் பரிசீலனை செய்து வேளாண் உயர்
மட்டக் குழு பரிந்துரையின்மீது உடனடியாக முடிவு எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1986 ஜனவரி 29

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய கடன்
பிரச்னைக்குத் தேவையான ஒரு தீர்வினை இப்போது அறிவிக்கா
விட்டாலும் வரவு-செலவு திட்ட கூட்டத்தொடர் வருவதற்கு
முன்னால் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்
பட்டிருக்கிறவர்களுடைய பிரச்னைகளைப் பற்றிச் சொல்லும்
போது, வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிற கீழத்தஞ்சை
மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்க கடன் வசூலை கொஞ்சம் தாமத
மாகத் தொடங்க வேண்டுமென்றும் நிர்ப்பந்தம் செய்யக்கூடாது
என்றும் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். நிர்ப்பந்தப்படுத்
தாமல் இருப்பதோ அல்லது காலதாமதப்படுத்தி வசூல் செய்வதோ
பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதாக இருக்
காது. ஏனென்றால் விவசாயிகள் திருப்பிச் செலுத்தும் சக்தியை
முழுமையாக இழந்துவிட்டிருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுக்
காலமாக தொடர்ச்சியாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது
தான் இதற்குக் காரணம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஏற்பட்டிருக்கிற இன்னொரு
சிக்கல் என்னவென்றால் காவேரி நீர்ப்பாசனம். அதற்கு ஒரு
நிரந்தரமான தீர்வு காணப்படாததால் ஆண்டுக்காண்டு 50
கோடி ரூபாய், 100 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு இழப்பு
ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சரியான பாசன வசதி இல்லாமல்
இருக்கிற நேரத்தில் கூட்டுறவுச் சங்கக் கடனுக்காக அங்கே
இருக்கிற தனி அதிகாரிகளின் கெடுபிடியும் இருக்கிற காரணத்
தால் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். தனி அதிகாரி
களுடைய ஆயுள் காலத்தை நீட்டிப்பதற்குக் காரணம் நான்
ஏற்கெனவே சொன்னதைப்போல சட்ட விதிகள் தயாராகவில்லை
என்று சொல்கிறார்கள். சட்டம் நிறைவேற்றப்பட்டு இரண்டு
ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் விதிகள் இயற்றப்பட
வில்லை என்று சொல்வது எந்த வகையிலும் நியாயமல்ல,
சரியல்ல. இது இந்தக் கூட்டுறவுத் துறையில் இணைந்திருக்கிற
ஏறத்தாழ 43 இலட்சம் விவசாயிகளுக்கு அவர்கள் சார்ந்திருக்கிற
கூட்டுறவு அமைப்புகளுக்கு வழங்கக்கூடிய நியாயமாக இருக்காது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அந்த அமைப்புகளுக்கு நியாயம் வழங்கக்கூடிய முறையில்
உடனடியாக கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நடத்து
வதற்கும் வேளாண்மை உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை
ஏற்று விவசாயிகளுக்குக் கடன் நிவாரணத்தை அறிவிப்பதற்கும்
இந்த அரசு முன்வருமா என்று நான் அமைச்சரிடத்திலிருந்து அறிய
விரும்புகிறேன். அந்தவகையில் அரசு முன்வரவேண்டும் என்றுநான்
கேட்டுக் கொள்கிறேன். விதிகள் இயற்றப்படவில்லை என்ற கார
ணத்தைக் கூறி இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை ஒத்
திப் போட்டுக்கொண்டே போகாமல் விரைவிலே தேர்தலை நடத்த



1986 ஜனவரி 29] (திரு. கோ. வீரய்யன்)

வேண்டும். 9 ஆண்டுக் காலமாகத் தனி அதிகாரிகளின் கையிலே
தான் அந்த அமைப்புகள் இருந்து வருகின்றன. அது போதும்.
எனவே இனிமேலும் அவற்றைத் தனி அதிகாரிகளின் கையிலே
விட்டு வைக்காமல் தேர்தலை நடத்துவதற்கு முன்வரவேண்டும்
என்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத் திருத்தத்திலே நாங்கள்
கொடுத்திருக்கின்ற திருத்தங்களையும் ஏற்று ஒரு குறிப்பிட்ட
காலத்திற்குள் தேர்தலை அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்
கொள்கிறேன். இன்னொரு முறையும் இப்படி இந்தத் தனி
அலுவலர்களின் காலத்தை நீட்டிக்கின்ற வகையில் சட்டத்
திருத்தம் கொண்டு வராமல் தேர்தலை விரைவில் அறிவிக்கின்ற
ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டு அமை
கிறேன். வணக்கம்.

திரு. க. பாரமலை: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கிற இந்தச் சிறப்பு அலுவலர் நியமன
நீட்டிப்புச் சட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் அந்தத் தனி
அலுவலர்களின் காலத்தை நீட்டித்து இந்த மசோதாவை இங்கே
தாக்கல் செய்திருக்கிறார்கள். கூட்டுறவுத்துறை மிகச் சிறப்பான
துறை என்பதும் மிகமிக முக்கியமான துறை என்பதும்
எல்லோரும் அறிந்த ஒன்றுதான். அது உற்பத்தியாளர் பிரிவாக
இருந்தாலும், அல்லது உபயோகிப்பாளர் பிரிவாக இருந்தாலும்,
அல்லது பொது வினியோகம் என்ற நிலையில் இருந்தாலும்
கூட்டுறவுதான் மிகச் சிறப்பான சேவை செய்ய முடியும் என்ற
நிலை இன்றைக்கு இருக்கின்றது. அந்த அளவுக்குக் கூட்டுறவுத்
துறை தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு இருக்கிறது.
அப்படிப்பட்ட ஒரு சிறந்த துறைக்கு 1975 ஆம் ஆண்டிலிருந்து
இன்று வரை தேர்தல் நடத்தப்படவில்லை என்பதையும், அங்கே
தனி அலுவலர்களைக் கொண்டு வந்து அவர்களுடைய பதவிக்
காலத்தை நீட்டித்து, நீட்டித்து 9 ஆண்டுகள் கடந்து இப்போது
10—வது ஆண்டிலே நின்றுகொண்டிருக்கிறோம் என்பதையும்
அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கே.
அவர்கள் இங்கே கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்தபோது
இந்தப் பொறுப்பினை ஏற்று பல இடங்களுக்குச் சென்று பின்னர்
அவர்கள் அறிக்கையை தயாரித்துத் தந்தார்கள். அதற்குப் பிறகு
கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த திரு. பொன்னையன்
அவர்கள் பல மாநிலங்களுக்கெல்லாம் சென்று இந்தச்
சட்டத்தினை இயற்றுவது குறித்து முனைப்பான நடவடிக்கையை
எடுத்துக் கொண்டார்கள். ஆக எல்லா வகையிலும், சிறப்பாக,
வேகமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கருதி 1983 ஆம்
ஆண்டிலே இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றி இருக்கிறோம்.

அந்தப் புதிய சட்டத்தைக் கொண்டுவரும்போது சாதாரணமாக ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்களில் உள்ளது போன்ற ஓட்டை, உடைசல்கள் இருக்கக்கூடாது என்ற வகையில் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு முழுமையாக பயன் தரக்கூடிய விதத்திலே நல்ல ஷரத்துக்களை எல்லாம் சேர்த்து ஒரு சிறந்த சட்டமாக இயற்றப்பட்டிருக்கிறது.

மேலும் கூட்டுறவுத் துறையில் பணிபுரிகிற பணியாளர்களும் கூட பயனடைகிற வகையில் சில சிறப்பான அம்சங்கள் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. அந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதற்கான விதிகள் இயற்றப்படவில்லை என்ற காரணத்தால் இட்டதட்ட 2½ ஆண்டுக் காலமாக கடத்திக்கொண்டிருக்கிறோம். எனவே மாண்புமிகு அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் மேலும் அவகாசம் கோராமல் இந்த நடப்பாண்டுக்குள்ளாகவாவது அந்த விதிகளைத் தயார் செய்து அந்தச் சட்டத்தை விரைவாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது விவசாயப் பணிகள் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகங்களை எல்லாம் கலைத்துவிட்டு அவற்றிலே விசேஷமாக சிறப்பு அலுவலர்களை நாம் நியமித்து இருக்கிறோம். அந்தச் சிறப்பு அலுவலர் நியமனத்திற்கு ஆட்களைக் கொண்டுவருகிறோம் என்ற பெயரால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அவசரம், அவசரமாக நாய் தேர்வு செய்து நியமித்து இருக்கிறோம். ஆனால் அதிலே கம்யூனல் ரெப்ரசன்டேஷன் சரியாக இல்லை என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே சிறப்பான கவனத்தைச் செலுத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் உரிய விகிதாச்சாரங்களைக் கொடுக்க தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு இப்போது சில இடங்களிலே கூட்டுறவுச் சங்கங்களிலே கூட்டுறவு பேங்க் என்ற வகையில் சில பெரிய அப்பெக்ஸ் பாங்குகள் போன்ற பாங்குகள் இருக்கின்றன அந்த பாங்குகளிலும் நிர்வாகிகள் இல்லை விசேஷ அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். அப்படியே வேளாண்மைத் துறையிலே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களையும் கலைத்து விட்டு, அங்கேயும் சிறப்பு அதிகாரிகளைத்தான் போட்டிருக்கிறோம். ஆனால் இன்னொரு பக்கத்திலே கூட்டுறவுச் சங்கங்களில் இப்போது தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றாலும் கூட, பலகாலமாக தலைவராக இருப்பவர்கள், தொடர்ந்து அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். அதாவது இப்போது தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்படாமல், முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆயுள் நீட்டிப்பு கொடுத்துக்கொண்டே வந்திருக்கிற நிலைமையில் இருப்பவர்கள், நிர்வாகிகளாக சில இடங்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.



இப்படி ஒரு சமயத்திலேயே ஒரு பக்கத்திலே சிறப்பு அதிகாரிகளும், இன்னொரு பக்கத்திலே பல ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், பிரதிநிதித்துவம் வகிக்கின்ற நிலைமையில் இருப்பது சரிதானா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இருக்கின்றவர்களையும் கலைத்துவிட வேண்டும் என்று நான் ஆலோசனை கூறவில்லை. ஆனால் சிறப்பாக, இந்தக் கால நீட்டிப்புக்கு உள்ளாகாமல் தேர்தலை நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அந்த அமைப்புகளிலே இருக்கின்ற வகையில் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கிராமப்புறங்களிலே விவசாயப் பணிச் சங்கங்களிலே அங்காடிகள், கூட்டுறவு பண்டகசாலைச் சங்கங்கள் போன்றவை மிக அதிகமான அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கேயும் பல்வேறு ஊழல்கள் நடைபெறுவதாகத் தகவல்கள் வருகின்றன. அது பற்றி அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்திருந்தால் இப்படிப்பட்ட தவறுகள் அதிகமாக நடைபெறாது என்ற காரணத்தினால், முறையாக இதற்கான விதிகள் தயார் செய்யப்பட்டு, இந்தச் சட்ட முன்வடிவை முழுமையாக சிறப்பாக அமல்படுத்த வேண்டும் என்று கேட்டு விரைவிலே தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டு, சந்தர்ப்பத்தைக் கொடுத்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. மா. மணிவாசகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை அங்காடிகள், மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிப்பதற்காக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். தெரிவிக்கிற நேரத்தில், நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு இருந்த சிறப்பு எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக உணர்வார்கள் என்று கருதுகிறேன். ஒரு காலத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கியதன் காரணமாக, கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் ஒழுங்காக செயல்பட்டு வந்ததன் காரணமாக, அகில இந்தியாவிலேயே கூட்டுறவுத் துறையில் தமிழகம் புகழ் பெற்றது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

அப்படி சிறப்பாக இயங்கிய கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு மிக மிக சீரழிக்கப்பட்டு, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத அளவுக்கு இன்று விவசாயிகளை ஜப்தி செய்கிற அளவுக்குப் போய் அவர்கள் பாதிக்கப்படுகிற அளவுக்கு விவசாயிகளின் நிலைமை இருக்கிறது என்று சொன்னால், அதில் விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் அப்படிச் செய்வதற்குக் காரணம், அந்தச் சங்கங்களிலிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடாது என்பதினால் அல்ல, வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாத அளவுக்கு இன்றைக்கு விவசாயிகள்

ஆளாக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்பதுதான் என்று நமது மாநில அரசு நன்றாக அறிந்திருக்கிறது. தமிழக சர்க்கார், மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துகிற நேரத்திலே எல்லாம் கூட, 150 ரூபாய்க்கு மேலே ஒரு குவிண்டாலுக்கு விலை வைக்க வேண்டும் என்று கேட்டு வற்புறுத்தி வருகிறார்கள். அப்படி 150-க்கு மேலே விலை வேண்டும் என்று வற்புறுத்தி வருகிற நேரத்தில் இன்றைக்குக் கிடைக்கிற விலை மிகமிகக்குறைவாக இருக்கிறது. இந்த விலையை ஒப்பிட்டு பார்க்கிற நேரத்தில் அது எவ்வளவு குறைவு என்பது அனைவருக்கும் தெரியும்.

உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தஞ்சை மாவட்டத்தில் 1975-ல் ஒரு மூட்டை யூரியாவின் விலை 48 ரூபாயாக இருந்த நேரத்தில் அப்போது நெல்லினுடைய விலை 59 ரூபாயாக அல்லது 59 ரூபாய் 68 காசு என்று இருந்தது. ரூ 60-ஐ தாண்டவில்லை. 48 ரூபாய் யூரியா விற்றபோது நெல்லின் விலை 60 ரூபாய்தான். அந்த நேரத்தில்தான் கூட்டுறவு சங்கத்தினுடைய கடன்கள் முறையாக வசூலிக்கப்பட்டு, காட்டப் பட்டு, அனைத்திந்தியாவிலே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களிலேயே சிறந்ததாக தமிழகத்திலே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வந்தன. அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாத நிலைமை இப்போது இருக்கிறது என்றால், அதற்கு வருவாய் இல்லாத காரணமும், நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்காத காரணமும்தான் ஆகும். அதனால் தான் விவசாயிகள் எல்லாம் மிகவும் சிரமப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கொடுத்த கடனைத் திருப்பி வசூலிக்க முடியாமல் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பாட்டிலே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே, தனி அதிகாரிகளை நியமிப்பதன் காரணமாக, கூட்டுறவுச் சங்கங்களின் தலையில் அதிகப்படியான சுமையைத்தான் நாம் சுமத்தி வருகிறோம்.

தனி அதிகாரிகளுக்கு ஊதியம் கொடுக்க வேண்டிய காரணத்தினாலும் அவர்களுடைய பயணப்படி, பஞ்சப்படி போன்ற அதிகப்படியான செலவையும் நாம் ஏற்க வேண்டிய காரணத்தினாலும், கூட்டுறவுச் சங்கங்களின் தலையில் அதிக சுமையைச் சுமத்துகிறோம் என்றுதான் நான் சொல்வேன். ஒரு தனி அதிகாரியை நியமித்ததற்குப் பின்னால்—இன்றைக்கு நாமெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பலனை எதிர்பார்க்காமல் பணியாற்ற வேண்டியவர்கள். நாமே பலன் என்ன என்று கேட்டுக் கொண்டிருக்கும்போது, பலனுக்காகவே வந்திருக்கிற அதிகாரிகளிடத்திலே பார்த்து—சும்மா இருங்கள் என்று சொன்னால், சும்மா இருக்க முடியாது. வசூல் இருக்கிறதோ இல்லையோ கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கிற தனி அதிகாரிகள் கட்டாயமாக வசூலிப்பதற்குச் சென்றதாகவும், வெளியே சென்றதாகவும் காட்டி, பயணப்படிகளை தொடர்ந்து எடுத்துக்கொண்டிருப்பதை நாமெல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்படி





ஏற்கெனவே மிக மோசமான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் அந்தச் சங்கங்களுக்கு தனி அதிகாரிகளே தொடர்ந்து இருப்பதன் காரணமாக அந்தக் கூட்டுறவு இயக்கங்களை நாம் முடக்கிக் கொண்டிருக்கிறோம்.

70 சதவீத மக்கள் விவசாயத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே அந்த விவசாய மக்கள் உற்பத்தி பண்ணக்கூடிய பொருள்களுக்கு நியாயமான உரிய விலை கிடைக்கவில்லை என்றால், அது இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கும் என்று இந்த நாட்டினுடைய அரசாங்கம் நன்றாக அறிந்து கொண்டுதான் இருக்கிறது. அப்படி அறிந்திருக்கிறது என்று சொல்கிற நேரத்திலே மத்திய அரசாங்கம் அந்தப் பொருள்களுக்கு நியாயமான விலையை கொடுக்கவில்லை என்றால், கட்டாயமாக நாமாக ஒரு விலை மார்ஜினல் வைத்துக் கொடுக்க வேண்டும் என்ற வகையில், ஒரு தற்காலிகமான விலையை கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 12-10)

அப்படித் தற்காலிகயாக கொடுத்து சில காலத்திற்குப் பின்னாலே நிறுத்து விடுகிறோம். இப்படி நிறுத்தி விடுவதால் விவசாயிகள் தங்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லையென்று வருத்தப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நெல்லிற்கு 60 கிலோ கொண்ட மூட்டைக்கு 125 ரூபாய்க்கு மேலாக விலை விற்றால் தான் விவசாயிகள் வாங்கிய கடனை சிரமம் இல்லாமல் செலுத்துகிற நிலைமை இருக்கும். இன்றைக்கு விலை நிர்ணயிக்கிற உரிமை மத்திய அரசிற்கு இருந்தாலும், நெல்லிற்கு நியாயமான விலை நிர்ணயிப்பதற்கு இந்தத் துறை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயத் துறையில் 150 கோடிக்கு மேலாக இழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். 150 கோடி ரூபாய் இழப்பிற்கு ஆளாயிருக்கிற அந்த விவசாயிகளுக்கு கொடுத்திருக்கிற உதவிகள் மிக மிகக் குறைச்சலாக இருக்கிறது. அதற்குக்காரணம் முறையாக கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காத காரணத்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இல்லாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிற நிலைமைதான். வருமானம் இல்லாமல் கூட்டுறவுச் சங்கங்கள் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு உதவியாக கொடுக்கப் படுகிற பூச்சி மருந்து, உரம் போன்றவற்றைத்தட்டுப்பாடில்லாமல் கொடுக்கிற நிலைமை கூட்டுறவுச் சங்கங்களில் இல்லை. நெல்லிற்கு போனஸ் கொடுக்கிற நேரத்தில் உரத்தை கூட்டுறவுச் சங்கங்களில் பெறமுடியாத நிலைமை இருந்தது. உரம் அங்கே இல்லையென்ற நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. பின்னாலே அங்கே விவசாயிகள் உரத்தை வாங்கினால் விலை வித்தியாசமாக வருகிறது. வெளி மார்க்கெட்டில் இருக்கிற

கொண்டு வந்திருக்கிறார்கள். 1976-லிருந்து, 1986 வரையிலும், 10 ஆண்டுக் காலம் தேர்தலை நடத்தாமலே இருப்பதால், இந்தத் துறை எந்த அளவிற்கு சீரழிந்து வருகிறது என்பதைப் பற்றி எங்களைவிட அமைச்சர் அவர்களுக்கு அதிகமாகத் தெரியும்.

கூட்டுறவுத் துறை என்பதுதான் ஒரு நாட்டுக்கு, குறிப்பாக உற்பத்தி பண்ணக் கூடிய விவசாயிகளுக்கு மிக முக்கியமான துறை. ஆனால் இந்தக் கூட்டுறவுத் துறை, 6, 7 ஆண்டுக்காலமாக தொடர்ச்சியாக முடமாகி வருவதற்கு முழு காரணம் இயற்கையின் சீற்றம். அது நீங்கள் அறியாததல்ல. 1977 ஆம் ஆண்டு புயல், 1979—80-ல் கடுமையான வறட்சி, அதனால் தமிழகத்திலே விவசாயம் பாதிக்கப்பட்டது. 1982-83 டிசம்பரில் சொல்ல முடியாத அளவிற்கு விவசாயிகளுக்குப் பாதிப்பு. இந்த ஆண்டும் கடுமையான பாதிப்பு. தஞ்சை மாவட்டத்திலே இந்த ஆண்டு, சர்க்கார் அதிகாரிகள் சொல்லியிருக்கக்கூடிய விவரங்களிலே, 50 கோடிக்கு மேலே சேதம் ஏற்பட்டு இருக்கிறது என்று அதிகாரிகளே சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்தக் கூட்டுறவுத் துறை மேலும் பலவீனம் அடைந்து வருகிறது. அப்படிப்பட்ட நேரத்தில், இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அல்லது உறுப்பினர்கள் இருப்பது இந்தத் துறையைத் தெளிவுபடுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். ஆனால் இடைக்காலத்திலே எல்லாவற்றையும் கலைத்தீர்கள், தேர்தல் நடத்துவதாகச் சொல்லி. இந்தச் சட்ட மன்றத்திற்கு முன்னால் இருந்தாலும் சட்டமன்றத்திலே இது ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கமிட்டி தனது பரிந்துரையை முழுமையான அளவிலே கொடுத்துவிட்டார்கள். இதற்கு முன்னாலே இருந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் செலக்ட் கமிட்டி முடிவு வரவேண்டும், வரவேண்டும் என்று சொல்லிக் கொண்டு காலத்தைக் கடத்தினார்கள். அந்த செலக்ட் கமிட்டியினுடைய முடிவு. சிபாரிசு செய்தாகி விட்டது என்று நான் அறிகிறேன். ஆனால் அதற்குப் பிறகும் கூட, இந்தத்தேர்தலை நடத்தாமல் நீங்கள் காலத்தைக்கடத்துவது எந்த அளவிற்கு நிர்வாகத் துறைக்கு இது நல்லது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கூட்டுறவுத் துறையில் பணியாற்றக்கூடிய கிராம ஊழியர்கள் லட்சக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். இன்றைக்குப் பல்வேறு துறைகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்களை, நாம் அரசு ஊழியர்களாக அங்கீகரித்து ஆகிவிட்டது. இந்தக் கூட்டுறவுத்துறை என்பது ஒரு நாட்டிலுள்ள முக்கியமான துறை. இது நிரந்தரமாகச் செயல்படக் கூடிய துறை. இந்தத் துறையை யாரும் அகற்ற முடியாது. அப்படிப்பட்ட துறையில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களை, இன்னும் அரசு ஊழியர்களாக





ஆக்காமல் இருப்பது, அந்தத் துறையில் வேலை செய்பவர்களுக்கு ஒரு ஊக்கத்தை அளிக்காமல் இருக்கிறது. அவர்கட்கு நம்மை எந்நேரத்திலும் வெளியிலே அனுப்பிவிடுவார்களோ என்ற அச்சம் இருந்து கொண்டு இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இதிலே பணியாற்றக் கூடிய அந்த ஊழியர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இதிலே ஊழியர்களாக பணியாற்றுகிறவர்களுக்குச் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. ஒரு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் அதிக வருமானம் கிடைத்தால் அதில் வேலை செய்யக் கூடிய ஊழியர்களுக்கு அதிகமாக சம்பளம் கிடைக்கிறது. இன்னொரு கூட்டுறவு நாணய சங்கத்திலே வருமானம் குறைவாக வந்தால், அவர்களுக்குக் குறைந்த சம்பளம் கிடைக்கிறது. எனவே இப்படிவித்தியாசம்இல்லாமல், இரண்டு இடத்திலேயும்பணியாற்றக் கூடியவர்களுக்கும் ஒரேவிதமான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். காரணம் இரண்டு பேர்களுக்கும், படிப்பு, தகுதி எல்லாம் சமமாகத்தான் இருக்கிறது. அவர்களுக்கு உள்ள குடும்பத்திற்கு ஒரே மாதிரியான செலவுகள்தான் ஏற்படும். எனவே இந்த வித்தியாசம், பாரபட்சம் இல்லாமல், வருமானம் கிடைக்கிறதா, இல்லையா என்று பார்க்காமல், அந்த ஊழியர்களை சமமாக நடத்த வேண்டும். சமமாக சம்பளம் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஆக இந்த மாதிரி குறைபாடுகளை நீக்குவதற்குத் தேர்தல் நடத்தவேண்டும்.

(பிற்பகல் 12-20)

இன்னும் ஒன்று. நமது விவசாய உயர்மட்டக் குழு 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தஞ்சைக்கு வந்து பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்த்தார்கள் இந்த ஆண்டும் ஜனவரி மாதம் 8 ஆம் தேதி உயர் மட்டக் குழு தஞ்சை மாவட்டத்திற்கு வந்து முழுமையாக பார்த்து இருக்கிறார்கள். ஆனால் 1983 ஆம் ஆண்டு ஒரு சிபாரிசு செய்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் இந்த ஆண்டும் அதைவிடக் கடுமையாக விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் விவசாய கடனோ ஒரு விவசாயி 2 ஆயிரம் வாங்கி இருந்தால் இன்றைக்கு 12 ஆயிரமாக வட்டி, அபராத வட்டி, அதிகாரிகள் வருகை செய்யக்கூடிய கால கட்டத்தில் ஏற்படுகிற செலவினங்கள் இவை எல்லாம் சேர்த்து 10 ஆயிரம் ரூபாயை விவசாயிகள் தலையில் சுமத்துகிறார்கள், எப்படி அவர்கள் கொடுக்க முடியும்? நியாயமாக கொடுக்க முடியாது. ஆனால் வாங்கின கடனோ 2 ஆயிரம் ரூபாய்தான். இதை எல்லாம் முழுமையாக பார்க்காமல் உயர்மட்டக்

குழுத் தலைவர் சமீபத்தில் தஞ்சாவூருக்கு 8 ஆம் தேதி செல்கிற போது நான் ஏக்கருக்கு 500 ரூபாய் சிபாரிசு செய்திருக்கிறேன். உங்களுக்கு எல்லாம் கிடைத்தது என்று என் தொகுதியில் கேட்டதாக சொன்னார்கள். அவர் [illegible] அளவுக்கு அப்படி கேட்டார் என்று நமக்குத் தெரியாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது அப்படி சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறதா, அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து இருக்கிறதா, அது கிடைக்குமா என்று சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு [illegible] முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். அந்தக் கடனை 10 ஆண்டுகள், 7 ஆண்டு களில் திரும்ப பெறுவதற்கு ஏற்பாடு அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு செய்தியைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன், வசூல் செய்வதில் [illegible] முறையை கையாளுகிறார்கள். ஒரு கிராமத்திற்கு வசூலுக்குச் செல்லும்போது 2 ஜீப், ஒரு போலீஸ் வேன், 6, 7 வாடகை கார்கள் இவை எல்லாம் போகின்றன. [illegible] 10, 12 வாகனங்கள் கிராமத்திற்குப் போகிறபோது [illegible] எவ்வளவுபேர் போகிறார்கள், வாகனங்களுக்கு [illegible] எவ்வளவு, ஒரு நாளைக்குச் செலவு எவ்வளவு ஆகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதை எல்லாம் கணக்குப் பார்த்தால் கோடிக்கணக்கான ரூபாய் வருகிறது. [illegible] எல்லாம் விவசாயிகளின் பேரில் [illegible] எடுத்து அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. இந்த பாதிரி வசூல் தேவைதானா? விவசாயிகள் வாங்கிய கடனை வசூல் செய்ய வேண்டாம் என்று நாங்கள் சொல்ல வில்லை. கொடுக்கும் இடத்தில் நீங்கள் வசூல் செய்யுங்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. வசூலுக்கு நீங்கள் கடைபிடிக்கிற முறை நல்லது அல்ல. விவசாயிகளிடம் வசூல் செய்யக்கூடிய நேரத்தில் இப்படி ஒரு கிராமத்தில் நடக்கும் போது விவசாயிகளை மிரட்டுவதால் அந்த [illegible] எல்லாம் ஓடக்கூடிய நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவிர்க்கவேண்டும். இது அதிக செலவு. இதைநிச்சயமாகத் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அந்த விவசாயிகள் தாங்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதற்கு எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள், எதிர்க்கட்சிக்காரர்கள் கொடுக்கவேண்டாம் என்று தடுக்கிறார்கள், அல்லது வசதி படைத்தவர்களிடம் நாங்கள் வசூல் செய்யக் கூடாதா? என்ற கேள்வியைக் கேட்கலாம். நான் கேட்டுக்கொள்ளுவது எல்லாம் வசதி படைத்தவர்களிடம், கொடுக்க சக்தி படைத்தவர்களிடம் நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள். நாங்கள் எந்தவிதமான தடங்கலும் செய்யவில்லை. நாங்கள் அந்த வசூலை செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை,





ஆனால் அரசு ரெவின்யூ துறையில் இந்தப் பிரதேசம் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்று ஏற்றுக்கொண்டு அரசு அதை அங்கீகரித்த பின்னால் அப்படி பாதிக்கப்பட்ட, நியாயமான விவசாயிகளுக்கு இந்தச் சலுகைகள் அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக இந்த உரம் தனியார் கடையில் ரூபாய் 100, 102 என்று விற்கிறார்கள். நம்முடைய கூட்டுறவுத் துறையில் ரூபாய் 111 என்று விற்கிறார்கள். மூட்டைக்கு 10 ரூபாய் அதிகமாக வைத்துவிற்கிறார்கள். ஒரு விவசாயி 4 மூட்டை யூரியா, 3 மூட்டை காம்பிளக்ஸ் வாங்கினால் 100 ரூபாய், 150 ரூபாய் தனியாருக்கும் இதற்கும் அதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. இந்த லாபம் அரசுக்கு கிடைக்கவில்லை, அந்த லாபம் எங்கே போகிறது என்றால் உரக் கம்பெனிக்கு போகிறது. உரக் கம்பெனி என்று சொன்னால் அந்த முதலாளிக்குப் போய் சேருகிறது. அந்த விவசாயிகளிடம் உழைப்பை வாங்கி இப்படி நாம் உர முதலாளி களுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, தனியாருக்கும் அந்த முதலாளிதான் கொடுக்கிறார், கூட்டுறவுத் துறைக்கும் அந்த உர கம்பெனி முதலாளி தான் கொடுக்கிறார். இந்த நிலையை மாற்றி விவசாயி உற்பத்தி மேலும் மேலும் பெருக்குவதற்கு இந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்கள் நியமன திருத்தச் சட்டத்தை மேலும் திருத்துவதற்குச் சட்ட முன்வடிவுகள் இரண்டையும் வரவேற்று ஒரு சில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பல்வேறு கூட்டுறவு இயக்கங்களில் கிட்டத்தட்ட 10 ஆண்டுக் காலம் வெஸ்டட் இன்ட்ரஸ்ட்டோடு பணியாற்றி வந்த நிர்வாக குழுவை கலைத்ததை. கலைக்க அமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையை முதலிலே நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் கிராம விவசாயிகளுக்கு என்னென்ன திட்டங்களைப் போட்டு அதன் பலன்கள் எல்லாம் அவர் களுக்கு போய்ச் சேர வேண்டும் என்று நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசு என்ன நடவடிக்கை எடுத்ததோ அந்தத் திட்டங்களை சரியாக அவர்கள் நிறைவேற்றவில்லை என்பது ஒரு பக்கம் இருந்தாலும், பல்வேறு உறுப்பினர்கள் போலிலே பினாமி என்ற அடிப்படையில் கடன்களைப் பெற்று—இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல—அந்தக் கடன்கள் வசூலில் சுணக்கம் ஏற்படுவதற்கு அந்த நிர்வாகக் குழு காரணமாக இருந்தது என்பதும் மன்ற உறுப்பினர்களாகிய தமக்கெல்லாம் நிச்சயமாகத் தெரியும். அது மட்டுமல்ல, எந்த

நன்மைக்காக, எந்த நோக்கத்திற்காக இந்தக் கூட்டுறவு இயக்கம் செயல்பட்டு வருகிறதோ அந்த நோக்கத்தை மறந்து பல்வேறு மோசடிகளில் அது ஈடுபட்டதன் காரணமாக ஏழை விவசாயி களுக்கு, கிராமப் பகுதி விவசாயிகளுக்கு சேர வேண்டிய பணங்கள், அந்த இயக்கத்தின் மூலமாக முழுமையாக சேர வில்லை என்ற எண்ணங்களைக் கருத்திலே கொண்டு அந்த நிர்வாகக் குழுவைக் கலைத்து உடனடியாக முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும் என்ற அந்த அடிப்படையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்ததற்கு இந்த நேரத்திலே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் பார்க்கின்ற போது அவர்கள் இருந்திருப்பார்களானால், பாரபட்சம் இல்லாத ஒரு நியாயமான தேர்தலாக அது இருக்குமா என்ற சந்தேகம் அரசுக்கும் மட்டுமல்லாமல், மக்களுக்கும் அந்தச் சந்தேகம் வலு வடையக்கூடிய நிலையிலே தான் இந்த அரசாங்கம் அந்த முடிவை எடுத்திருக்கிறது என்பதை நாம் எல்லாம் நன்றாக உணர் வோம். அந்த அடிப்படையில் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு இயக்கங்களுக்கு உடனடியாக தேர்தல் நடத்துவதற்கு, இன்றைக்கு அந்த விதிமுறைகளை எல்லாம் வகுக்கின்ற அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கே கூட உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள், விதிகள் வகுப்பதற்கு இவ்வளவு காலதாமதம் தேவைதானா என்று. என்னைப் பொறுத்தவரையில் காலதாமதமானால் கூடப் பரவாயில்லை. காரணம் இந்த கூட்டுறவுச் சட்டம் 1961-ல் இயற்றப்பட்டு 1963-லே நடைமுறைக்கு வந்தது. கிட்டத்தட்ட 25 ஆண்டுக் காலம், அந்தச் சட்டத்திலே இருக்கின்ற சந்து பொந்துகளை யெல்லாம் கண்டுபிடித்து, அந்த நிர்வாகத்திலே பொறுப்பு ஏற்றவர்கள் எவ்வளவு தவறுகளைச் செய்ய முடியுமோ அவ்வளவு தவறுகளைச் செய்த பிறகு, அந்த அனுபவங்களின் அடிப்படையில் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஓட்டை களையெல்லாம் அடைத்து ஒரு முழுமையான சட்டமாக, விவசாயிகளுக்குப் பயன்படக் கூடிய சட்டமாக அதனை அமைக்கக் கூடிய முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றபோது கால தாமதம் ஆனாலும்கூட பரவாயில்லை. நான் மாண்புமிகு உறுப்பினர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது இவ்வளவு நாள் பொறுத்தோம். சொல்வார்களே, ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்க வேண்டும் என்பது போல இந்த விதி முறைகளை முழுமையாக உருவாக்கிய பிறகு அந்த இயக்கத்திற்குத் தேர்தல் வைப்பது நல்லது என்று நான் கருது கிறேன். எனவே 'செய்வன திருந்தச் செய்' என்ற அந்த அடிப் படையில் காலதாமதம் ஆனாலும் கூடப் பரவாயில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் அந்த விதி முறைகளை வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்,

திரு. கோ. வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் செம்மலை அவர்கள் சொன்னது போல, ஆக்கப் பொறுத்தவர்கள், ஆறப் பொறுப்பதிலே ஒன்றும் சங்கடம் இல்லை, ஆனால் ஒன்று உறுப்பினரிடமிருந்து உங்கள்





மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புவது, விதிமுறைகள் ஒரு சட்டத்திற்கு இயற்றுவது என்பது அவ்வப்போது இருக்கின்ற அனுபவங்களை உணர்ந்து அவ்வப்போது விதிமுறைகளை தொடர்ந்து இயற்றிக் கொண்டிருக்கலாம். ஒரு முறை விதி முறையை இயற்றி விட்டால் அது எப்போதும் இராமருக்கு பட்டாபிஷேகம் சூட்டுவது போல் சாசுவதமானது அல்ல. எனவே ஒரு முறை விதி முறையை இயற்றி விட்டால் பிறகு காலப் போக்கில் அனுபவத்திலிருந்து அவ்வப்போது விதிமுறைகளை இயற்றிக் கொள்ள முடியும். இப்போது விதி முறைகளை இயற்றிவிட்டாலும், பிறகு அனுபவத்திலிருந்து விதிகளை, விதி முறைகளை திருத்துவதற்கான வாய்ப்பு அல்லது அதிகாரம் அரசிடம் இருக்கிறதே, இதற்கு ஏன் காலம் கடத்த வேண்டும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது விதிமுறைகளை வகுப்பதை நல்ல முறையிலே வகுக்க வேண்டும் என்பது தான். இல்லை என்றால் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கருத்துக்களையெல்லாம் கேட்கின்ற அளவிற்கு 1983 ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தை இயற்றுவதற்கு இந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. 25 ஆண்டுக் காலமாக இருந்த இந்தச் சட்டம் பல்வேறு அனுபவங்களைக் கொண்டு, இவ்வளவு பெரிய சட்டத்தை முழுமையாக முழு வடிவத்தோடு தயாரிக்க வேண்டும் என்ற அந்த முயற்சியிலே தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈடுபட்டு இருக்கின்றார்கள் என்பதைத் தான் சொல்ல வந்தேன். அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு நான் ஓரிரு கருத்துக்களை சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 12-30).

இன்றைக்கு ஏற்கனவே இயங்கிக் கொண்டு இருந்த நிர்வாகக் குழுவினர் செய்த தவறுகளினால், டெவலப்மெண்ட் என்ற அடிப்படையிலே, 'வையபிலிட்டி' இல்லை என்ற அடிப்படையிலே, சில சங்கங்கள் கலைக்கப்பட்டு, வேறு சங்கத்திலே இருக்கிற சங்கத்தோடு சேர்க்கிற ஒரு நடைமுறை இப்போது இருக்கிறது. அதற்கும் நம்முடைய 'நபார்ட்' என்ற பெரிய ஊரக வளர்ச்சி வங்கி மறுநிதி கொடுக்கிறபோது, நிபந்தனையை விதிக்கிற போது, வலுவுள்ள சங்கங்களாக இருந்தால் தான் கடன் கொடுப்போம் என்று அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்காக, இன்றைக்கு கிராமங்களில் இருக்கிற 4, 5 சங்கங்களை ஒன்றாக இணைத்து ஓரே இடத்தில் வலுவுள்ள சங்கமாக ஆக்குவதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அந்த வங்கியிடமிருந்து நிதியைப் பெறுவதற்கும், நிர்வாக
வசதிக்கும் வேண்டுமானால், 'அமால்கமேஷன்' என்ற அந்த
முறை ஒத்து வரலாம். என்னைப் பொறுத்தவரையில், நான்
மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது,
கிராமத்திலே இருக்கிற விவசாயிகளை, அவர்கள் நிலைமைகளை
நன்றாக அறிந்தவர் என்ற முறையில் வேண்டி விரும்பிக் கேட்டுக்
கொள்வது—இப்படி அமால்கமேஷன் செய்யும் போது, கிட்டத்
தட்ட 8 ஊர், 9 ஊர் என்று அந்த 'ஏரியா ஆஃப் ஆபரேசன்,
வருகிறது.

அப்படி வருகிறபோது, விவசாயிகளுக்கு பலன் அதிகமாக
கிடைக்கவில்லை. ஏற்கனவே இருந்த சங்கங்கள் இன்றைக்கு
கலைக்கப்படுகிற நிலையில்—உதாரணத்திற்குச் சொல்கிறேன்—
சேலம் மாவட்டத்தில் ஏற்கனவே 751 கூட்டுறவுச் சங்கங்கள்
இருந்தன. ஆனால் இன்றைக்கு 375 சங்கங்கள் தான்
இருக்கின்றன. 751 சங்கங்கள் மூலம் பயனைப் பெற்ற
விவசாயிகள் இன்றைக்கு 351 சங்கங்கள் மூலம் தான்
பெற வேண்டியிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களுடைய
மேலான கவனத்திற்குக் கொண்டு வருவது. இது விவசாயிகளுக்கு
சிரமமாக இருக்கிறது.

இன்னொன்று-தேர்தலை நடத்த விரைவான ஏற்பாடுகளைச்
செய்து வருகிறோம். தேர்தல்நடத்தினால் இந்த 375 சங்கங்
களுக்குத் தான் நடத்த வேண்டும். தேர்தல் நடந்து, நிர்வாகக்
குழு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, நிர்வாகக் குழு பொறுப்பேற்ற
பிறகு, புதிய சங்கங்களை அமைக்கவோ, 'ஏரியா ஆஃப்
ஆபரேஷன்' இப்போது இருப்பதை விட்டுவிடுவதற்கோ, 'டிலிட்'
செய்வதற்கோ அனுமதிக்க மாட்டார்கள். இதைக் கருத்தில்
கொண்டு, தேர்தல் நடத்துவதற்கு முன்னால், எங்கங்கே
ஏற்கனவே சங்கங்கள் இருந்தனவோ, அவை 'வையபிலிட்டி'
என்று கலைக்கப்பட்டிருந்தாலும் சரி, மிஸ்மேனேஜ்மென்ட் என்ற
அடிப்படையில் கலைக்கப்பட்டிருந்தாலும், இப்போது இருக்கிற
நார்ம்ஸ்-ஐ வைத்துக் கூட, எந்த எந்த இடத்தில் தேவைப்படு
கிறதோ, அந்தந்த இடங்களில் சங்கங்களை உருவாக்கியதற்குப்
பிறகு தேர்தல் நடத்துவது நன்றாக இருக்கும் என்று இந்தச்
சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்து. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை,
கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில்,—இப்போது நாம்
ஒத்துக் கொள்ள வேண்டும்— தோல்வி அடைகிற நிலைமை தான்
இருக்கிறது. தோல்விக்குக் காரணம், நிர்வாகத்திலே வருகிற
வர்கள் நிச்சயமாக சுயநலவாதிகள் அதிலே ஊடுருவி விடுவது
தான் காரணம். இதை நான் சொல்வதற்கு காரணம், இந்தக்
கூட்டுறவு இயக்கங்கள் எல்லாம் இன்றைக்கு சரியான மாலுமிகள்
இல்லாத கப்பல்களாக தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. நான்
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர
விரும்புவது, அதிலே 'ஆனஸ்ட் பியூப்பிள்' நல்ல, இயக்கத்திலே
ஈடுபாடு உள்ளவர்களை அந்த நிர்வாகக் குழுவிற்குப்
பொறுப்புக்குக் கொண்டு வரவேண்டும். அப்படிப்பட்டவர்கள்
அதிலே வருவதற்குத் தயங்குகிறார்கள். ஆனால் வெளியிலே
இருந்து வேண்டுமானால் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.



அப்படிக் குறை சொல்பவர்கள், அந்தப் பொறுப்பிற்கு வந்து
அந்த ரெஸ்பான்சிபிலிட்டியை ஏற்றுக் கொள்வதற்குத் தயங்கு
கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரிய
வில்லை. எனவே, ஒரு கிராமத்திற்கு, ஒரு ரெவினியூ
வில்லேஜுக்கு 10 பேரை செலக்ட் செய்து, அவர்களுக்கு,
அந்தப் பொது மக்களுக்கு, கிராமங்களுக்கு எப்படி அவர்கள்
செயல்பட வேண்டும், பயன்படவேண்டும் என்று பயிற்சி தர
வேண்டும்.

இன்றைக்கு நாட்டையே ஆண்டு கொண்டிருக்கிற ஐ. ஏ. எஸ்.
அதிகாரிகளுக்குக் கூட பயிற்சி இருக்கிறது. ஆனால் இந்தக்
கூட்டுறவு சங்கங்களினுடைய நிர்வாகிகளுக்குப் பயிற்சி இல்லை.
அவர்கள் அங்கே போனவுடன் எந்த அளவுக்கு தவறுகள்
செய்ய முடியுமோ, அந்தக் கண்ணோட்டத்துடனேயே இருக்
கிறார்கள். பயிற்சி கொடுக்கிற அளவில், இன்றைக்கு
'டெய்ரி'— பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே
பார்ப்போமேயானால், கிராமங்களிலே இருக்கிற அந்த சங்கத்
தலைவர்களை எல்லாம் குஜராத்திற்கு அனுப்பி, அந்த
சங்கத்திலே, 'ஆனந்த்' பாட்டர்னைப் பார்த்து விட்டு வரு
கிறார்கள். அப்படிப் போனவர்கள் எல்லாம், சென்று திரும்பி
வந்து பிறகு, பொறுப்போடு நல்ல முறையில் சங்கங்களை
நடத்துகிற அனுபவத்தைப் பார்க்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனவே, அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது,
தேர்தலுக்கு முன்னால், அந்த ரூல்ஸை ஃபிரேம் செய்கிறபோது,
எவ்வளவோ பிரச்சாரம் செய்கிறோம், அதற்கு செலவு செய்
கிறோம், கூட்டுறவு விழா, வார விழா என்று எவ்வளவோ
பிரச்சாரம் செய்ய செலவு செய்கிறோம். விளம்பரம் செய்கிறோம்.
அந்தச் செலவோடு இன்னும் கொஞ்சம் கூடுதலாக நிதியை
ஒதுக்கி ரெவினியூ வில்லேஜ் ஒன்றுக்கு 10 பேரையாவது
பொறுக்கி எடுத்து, அவர்களுக்கு கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி
நல்ல பயிற்சியைக் கொடுத்து, அந்தப் பயிற்சியாளர்களை
நிர்வாகக் குழுவில், தேர்வு மூலம் தேர்ந்தெடுத்து கொண்டு
வருவீர்களேயானால் நிச்சயமாக கூட்டுறவு இயக்கம் நல்ல
பயனைத் தரும் என்று இந்த நேரத்திலே சொல்லி, இந்த இரண்டு
சட்ட முன்வடிவுகளையும் வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி
விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்,

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தனி அதிகாரி
களுடைய நியமன நீட்டிப்புச் சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு
உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய சிறப்பான நல்ல கருத்துக்
களைச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிற நேரத்திலே இந்த
பதவிக் கால நீட்டிப்பை இன்னும் மேலும் மேலும் நீட்டிக்காமல்
நல்ல எண்ணத்தோடு உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கு

வேண்டிய முயற்சிகளை இந்த அரசாங்கம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையைச் சொன்னார்கள். அப்படிப்பட்ட எண்ணம்தான் இந்த அரசினுடைய எண்ணமும். எங்களுடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த அளவிற்கு வேகமாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற உணர்வைத்தான் இந்தத் துறைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அந்த உணர்வை நாங்கள் இப்போது அப்படி வெளிக்காட்டுகிறோம் என்றால் இதற்கு முன்பாக இப்படி பதவிக் கால நீட்டிப்பு சட்டமுன்வடிவுகள் வருகின்றபோதெல்லாம் குறைந்தது ஒரு ஆண்டுக் காலம் என்று சொல்லித்தான் வந்திருக்கின்றன. ஆனால் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த அளவில் 4 மாதங்கள், 6 மாதங்கள் என்று குறுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு முன்பாகவே நாங்கள் தேர்தலைச் சந்திப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற உணர்வை எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள் என்று எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

எங்களைப் பொறுத்தவரைக்கும் தனி அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலிருந்து கூட்டுறவு இயக்கத்தைப் பிரித்தெடுத்து நல்ல நிர்வாகிகளின் கைகளிலே கொடுக்கிற போதுதான் நிர்வாகம் சிறப்பாக இருக்கும், பொது மக்களுக்கும் நியாயமாக இந்த இயக்கம் உணர்வு பூர்வமாக செயலாற்றமுடியும் என்று இந்த அரசாங்கம் கருதிக் கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் சொன்னார்கள். ரூல்ஸ் பிரேம் செய்வதற்கு காலதாமதம் தேவையில்லை என்பதைக் கோடிட்டுக் காட்டினார்கள். ரூல்ஸ் பிரேம் பண்ணுவதிலே பிரச்சினைகள் வருகிற நேரத்திலே-இது கூட்டுறவுத் துறை என்ற ஒரு துறையாக இருந்தாலும்கூட இதிலே 12 பேர்கள் இயங்கு பதிவாளர்கள் இருக்கிறார்கள்—கூட்டுறவுப் பதிவாளர்களின் கீழேயே அந்த அந்தத் துறைகளின் கொள்கைகளைப் பொறுத்த வரையிலே அங்கே இருக்கின்ற பிரச்சினைகளிலே அவர்கள் மாறுபட்டு இருக்கிற காரணத்தினாலே ஒவ்வொரு துறையினிடமிருந்தும் நாம் கருத்துக்களை வாங்கி சரிபார்த்து அதன்பிறகு சட்டத் துறையோடு கலந்து பேசித்தான் முடிவு எடுக்கவேண்டிய நிலையிலே இருக்கிறோம். அப்படிப்பட்ட காலகட்டம் இருப்பதால்தான் அதிகப்படியான நேரம் ஆகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செலக்ட் கமிட்டியினுடைய பரிந்துரைகளையெல்லாம் நாம் அந்த அந்த இயங்கு பதிவாளர்களுக்கு அனுப்பியிருக்கிறோம்; அவர்கள் அவைகளை சரிபார்த்து சட்டத்துறைக்கு அவை வந்து சரிபார்க்கவேண்டிய நிலை இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வுகளை மதித்து துரிதமாக நடவடிக்கை எடுப்போம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வேளாண்மைப் பணிக் கூட்டுறவு சங்கங்களிலே நிர்வாகத்தை நாம் கலைத்தோம் என்றால் அரசாங்கம் புதிய கருத்துக்களை விவசாயிகள் மத்தியிலே சொல்லவேண்டுமென்பதற்காகவும் அரசு அளிக்கின்ற பலன்கள் போதுமான அளவிற்கு



விவசாயிகளுக்குப் போய்ச் சேரவேண்டுமென்ற முறையிலேயும் நாம் அவ்வாறு செய்தோம். ஒவ்வொரு தலைவரும் 8, 9 ஆண்டுக் காலம் மொனாப்பொலியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தச் சொத்துக்களையெல்லாம் தங்களுடைய சொந்த சொத்துக்களாக எண்ணிக்கொண்டு செயல்பட்டதால்தான் அவை கலைக்கப்பட்டன.

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரசாங்கம் பல நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறது. கடன் கொடுப்பதாக இருந்தாலும்சரி, கடனை வசூலிப்பதாக இருந்தாலும்சரி, பொது விநியோக முறையாக இருந்தாலும்சரி, நகைக் கடன் கொடுப்பதாக இருந்தாலும்சரி, உரம் போன்றவைகளைக் கொடுப்பதாக இருந்தாலும்சரி, மாசிவ் புரகிராம் மூலமாக நன்மைகள் செய்வதாக இருந்தாலும்சரி, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் செய்யப்படக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்தச் சங்கங்களினுடைய தலைவர்கள் 8, 9 ஆண்டுக்காலம் பதவியிலே இருப்பதால் அவர்கள் சங்கத்தின் சொத்துக்களையெல்லாம் சொந்தச் சொத்துக்களாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கட்டும், நாம் நம்முடைய இஷ்டப்படி செய்வோம் என்று செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் தங்களுடைய வீடுகளிலே கணக்குப் புத்தகங்களையெல்லாம் வைத்துக் கொண்டு சொந்த லேவாதேவி செய்து கொண்டிருப்பதைப்போல செய்து கொண்டிருந்ததையும் அரசாங்கம் பார்த்தது. அதன் பிறகு தான் தேர்தல் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்திலே அந்தத் தலைவர்கள் அந்தச் சூழ்நிலையில் இல்லாமல் இருந்தால் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலமாக நல்லவர்களையெல்லாம் பொறுப்பானவர்களையெல்லாம் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தினால்தான் அரசாங்கம் அவைகளைக் கலைத்தது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பேசிய நேரத்திலே எல்லோருமே தஞ்சாவூர்க்காரர்களாகப் பேசினார்கள்—மொத்தமாகப் பேசிவைத்து இன்றைக்கும் இதையும் பேசிவிட்டு, கடந்த வசூலிலும் பேச வேண்டுமென்ற எண்ணத்தோடு பேசினார்கள். நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இன்றைக்கிருக்கின்ற பிரச்சனைகளை அரசாங்கத்திற்குச் சொல்ல வேண்டுமென்ற உணர்வோடு விவசாயிகளின் பிரச்சனைகளை அரசாங்கத்தினுடைய காதிலே அவைகள் எட்டியிருந்தாலும்கூட நம்முடைய கடமையாக நாமும் சொல்லியாக வேண்டுமென்ற உணர்வோடு இன்றைக்குச் சொன்னதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளினுடைய சிரமங்களைப் புரிந்திருக்கின்ற காரணத்தினால்தான் எங்களால் முடிந்த அளவிற்கு இன்றைக்கு விவசாயிகளினுடைய கடன் தள்ளுபடி போன்ற சலுகைகளையெல்லாம் நிரப்பச் செய்திருக்கிறோம். ஆனால் இப்பொழுது விவசாய உயர்மட்டக் குழுவிலிருந்து அரசாங்கத்திற்கு ஒரு பரிந்துரை வந்திருக்கிறது. அந்தப் பரிந்துரையை நாங்கள் ஆராய்ந்து பார்க்கிற நேரத்தில், நிறையப் பணம் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை அரசாங்கத்திற்கு இருக்கின்ற காரணத்தால் அதையெல்லாம் விவரமாக ஆராய்ந்து-அன்றைக்கு நாங்கள் பேசிய நேரத்திலேகூட ஒரு புள்ளி விவரத்தை நாங்கள் சொன்னோம், எதிர்க் கட்சியைச் சேர்ந்த அன்பர்கள் ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள். எது சரி என்பதை எயல்லாம் ஆராய்ந்து பார்த்து, அதிலே எதை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்த முடியும் என்பதையெல்லாம் அதிகாரிகள் மத்தியிலே சொல்லி துரிதமாக ஆராய்ந்து அதை அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்ற உத்தரவையும் நாங்கள் சொல்லியிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குக் கூட்டுறவுத் துறை தேக்கம் அடைந்திருப்பதாக மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவுத் துறை மொத்தத்திலே முடங்கியிருப்பதாகச் சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். காரணம், எல்லாக் கூட்டுறவுத் துறையிலும் இலாபகரமாக நடந்து கொண்டிருக்கிறது, ஆனால் இந்த விவசாயிகளுக்குக் கடன் கொடுத்த அந்தப் பிரச்சினையிலே மட்டும்தான் தேக்கமாக உள்ளது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியத் திருநாட்டில் அது நுகர்வோர் துறையாக இருந்தாலும்சரி, பால்வளத் துறையாக இருந்தாலும்சரி, ஏனைய எந்தக் கூட்டுறவுத் துறையாக இருந்தாலும்கூட எடுத்துக் காட்டாக இருக்கின்ற துறையாக இருக்குமே தவிர யாருக்கும் பின் வாங்கிய துறையாக இந்தத் துறை இல்லை என்பதைச் சொல்ல முடியும். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த அளவிற்கு இந்தக் கடன் வசூலிலே மிகச் சுணக்கமாக இருக்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு வங்கிகளைப் பொறுத்தவரையில் சுணங்கிக்கொண்டிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் இங்கே பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், இன்றைக்குக் கடன் வசூலில் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று மரியாதைக்குரிய வீரய்யன் அவர்கள் சொன்னார்கள். மரியாதைக்குரிய மணிமாறன் அவர்கள் சொன்னார்கள்; மரியாதைக்குரிய உத்திராபதி அவர்கள் சொன்னார்கள். கிராமத்திலே சொல்லுகின்ற பாணியிலே நான் சொல்ல வேண்டுமென்றால் வசூல் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னால், கிராமத்திலே சொல்லுவார்கள், சாகாமல் இருப்பதற்கு தண்ணீர் ஊற்ற வேண்டுமென்று சொல்வார்கள். அதேபோன்றுதான்





எங்களுடைய பிரச்சனை. வங்கிகளை இன்றைக்கு முடக்கிவிடக் கூடாது என்ற எண்ணத்தோடும், வங்கிகள் இல்லாமல் போய் விடக்கூடாது என்ற எண்ணத்தோடும்தான், 40 சதவீதம் என்று பாஸ் மார்க்காவது வாங்கியாக வேண்டுமென்ற உணர்வோடுதான், 40-ஐ எட்டிப்பிடித்தால் போதுமென்ற உணர்வோடுதான் இந்தக் கடன் வசூலிலே நாங்கள் நின்று கொண்டிருக்கிறோமே ஒழிய 80 சதவீதம், 90 சதவீதம் என்று வசூல் செய்து மிகப் பெரிய பெயரைக்கூட வாங்க வேண்டுமென்ற எண்ணம் எங்கள் மத்தியில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வங்கி மறுபடியும் நபார்டிலே கடன் வாங்கக் கூடிய தகுதியைப் பெறக் கூடிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்ற முயற்சியிலே தான் இன்றைக்கு நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய திரு. வீரய்யன் அவர்கள் சொன்னார்கள். வேளாண்மை உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகளைக் காலதாமதம் இல்லாமல் மிக வெகு விரைவில் எடுக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டு மிக வேகமாக நல்ல முடிவுகளை எடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் அதிலே உள்ள நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டத்திலே உள்ள நல்ல கருத்துக்களை நாம் எடுக்கின்ற நேரத்தில் ஒரு சில துறைகளுக்குப் போகின்ற நேரத்தில் அதிலே இருக்கின்ற பிரச்சனைகளைச் சொல் கிறார்கள். ஆகவே, அதை மாற்றுவதற்கு வேண்டிய அந்த முயற்சியிலேதான் அந்த விதிகளிலே—ரூலிலே ப்ரேம் செய்வதிலே இருக்கின்ற பிரச்சனைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எல்லோருடைய கவனத்திற்கும், கருத்துக்களுக்கும் ஏற்றாற்போல நிச்சயமாக வேகமாக அந்த ரூல்ஸ் ப்ரேம் பண்ணுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே அவர்கள் கோடிட்டுக் காட்டிய நேரத்தில் ஜூனியர் இன்ஸ்பெக்டர் போஸ்டில் கம்யூனல் ரொட்டேஷன் சரியாக இல்லை என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் மிகத்தெளிவாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். கம்யூனல் ரொட்டேஷனிலே எஸ்.சி. காண்டிடேட் வரவில்லை என்றால், அதை நிறுத்தி, பக்கத்து மாவட்டத்திலே கேட்டாவது நாம் போட வேண்டுமே ஒழிய அந்த இடத்திலே வேறு யாரையும் போட வேண்டாம் என்பதையும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்திச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, நிச்சயமாகத் தவறுகள் நடக்காமல் நாங்கள் பார்ப்போம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் இங்கே சொல்லுகின்ற நேரத்தில், கிராமண் பணிச் சங்கங்களைக் கலைக்கிற நேரத்தில் அந்தச் சங்கங்களுக்குத் தனி அதிகாரிகள் போகிற நேரத்தில், அந்த அதிகாரிகளின் சம்பளப் பிரச்சனை வருகிற நேரத்தில் மிகப் பெரிய பளுவை அந்தச் சங்கங்கள் தாங்க வேண்டியிருக்கும் என்பதைக் கோடிட்டுக் காட்டினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம் கிராமண் பணிச் சங்கங்கள் கலைக்கப்பட்ட அந்தத் தனி அதிகாரி களினுடைய சம்பளத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கட்டாய வசூலை நாங்கள் மேற்கொண்டிருப்ப தாகச் சொன்னார்கள். நாங்கள் அதிகாரிகளுக்குச் சொல்லியிருக் கிறோம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கொஞ்சம் நடவடிக்கைகளை ஸ்டே செய்ய வேண்டும்; கடன்களைத் திருப்பிச் செலுத்தக்கூடிய தகுதி உள்ளவர்களிடத்தில் மட்டும் வசூல் செய்தால்போதும் என்பதையும் அதிகாரிகளுக்குச் சொல்லி யிருக்கிறோம். ஆகவே, எங்களைப் பொறுத்தமட்டில், சிரமப் பட்டிருக்கிற விவசாயிகளை மறுபடியும் சிரமப்படுத்த இந்த அரசாங்கம் தயாராக இல்லையென்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நெல் போன்றவைகளுக்கெல்லாம் நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு நியாயமான விலை கிடைப்பதற்கான, வேண்டிய முயற்சிகளை வேளாண்மைத் துறையோடு சேர்ந்து நாங்களும் செய்வோம் என்பதை இந்த நேரத்திலே மதிப்பிற்குரிய மணிமாறன் அவர்களுக்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கு போனசாக, உரம் கொடுக்கிற நேரத்தில், உரம் இல்லையென்று சொல்வதாகச் சொல்கிறார்கள். அப்படிப் பட்ட இடங்களை அவர்கள் என்னிடத்திலே தனியாகச் சொல்வார் களானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரியாக நடக்கவில்லை யென்றால் நிச்சயமாக, வேண்டிய நடவடிக்கை எடுப்போம் என்பதையும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உரம், பூச்சி மருந்து விலை கூடுதலாக உள்ளது என்று சொல் கிறார்கள். அதையும் உடனடியாகச் சரிபார்த்து நடவடிக்கை எடுப்போம் என்பதையும் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு திரு. உத்திராபதி பேசுகிற நேரத்திலே, கூட்டுறவுத் துறையிலே வேலை செய்யும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர் களுக்குச் சொல்வதெல்லாம், கூட்டுறவுத் துறையிலே ஒவ்வொரு சங்கமும் தனித்தனி பாடியாக இருக்கிற காரணத்தால் அவர்களை அரசுத் துறை ஊழியர்களாக ஆக்குவதில் சிரமம் இருக்கிறது என்பதைமாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச்சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் சம்பளத்தை அதிகமாக்க



வேண்டுமென்ற கோரிக்கை எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. காரணம் மிகக் குறைந்த சம்பளத்தை அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் இந்த அரசாங்கத்திற்கு மாறுபட்ட கருத்து கிடையாது. இன்னொன்று சொன்னார்கள், ஓரிடத்தில் அதிகமாக வாங்குகிறார்கள், இன்னொரு இடத்தில் குறைவாக வாங்குகிறார்கள், என்று. அந்தக் கருத்தையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். காரணம் வேலை செய்கின்றவர்களுடைய வேலை தரத்தைத்தான் நாம் பார்க்க வேண்டுமே தவிர, லாப நட்டத்தைப் பார்க்கக் கூடாது. அதிகாரிகள் கணக்குப் போடுகிற நேரத்தில், இந்த நிறுவனம் நஷ்டத்தில் ஓடுகிறது; ஆகவே, சம்பளம் குறைவாகக் கொடுக் கிறோம்; இந்த நிறுவனம் இலாபத்தில் நடக்கிறது; ஆகவே, அதிகமாகக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். நான் கூட அதிகாரிகளிடத்திலே ஒரு கருத்தைச் சொன்னேன், லாபமாக இருந்தாலும், நஷ்டமாக இருந்தாலும், மனிதன் வாழ்வதற்குச் செலவுகள் ஒன்றாகத்தான் இருக்குமே தவிர, அதிலே பாகுபாடு வராது என்பதை எல்லாம் அதிகாரிகளுக்குச் சொல்லியிருக் கிறேன். ஆகவே, அந்தக் கருத்தை எல்லாம் அரசாங்கம் மனதிலே வைத்து, துறை அதிகாரிகளுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறது. இந்தத் துறையிலே மிகக் குறைவான சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கும் நேரத்தில்தான் அவர்கள் தவறு செய்யாமல், அங்கே வேலை செய்யக்கூடிய வாய்ப்பு உண்டாகும் என்பதையெல்லாம் அதிகாரிகளுக்கு உணர்த்தியிருக்கிறோம். ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கை களையும் நாங்கள் நிச்சயமாக, வேகமாக எடுப்போம் என்பதையும் இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். உயர்மட்டக் குழுவிலிருந்து ரூ. 500 கடனைத் தள்ளிப் போடச் செய்யவேண்டும் என்று சொல்லியிருப்பதாக மாண்புமிகு திரு. உத்திராபதி அவர்கள் சொன்னார்கள்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய விஷயத்திலே, திரு. உத்திராபதி குறிப்பிட்டது, கூட்டுறவு கடனில் ரூ. 500 தள்ளு படி அல்ல. பயிரிழந்த விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ரூ. 500 அரசு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று உயர்மட்டக்குழு பரிந்துரை செய்தது, உங்களுக்குக் கிடைத்ததா என்று வேளாண்மை உயர் மட்டக்குழுத் தலைவர் அவர்கள் விவசாயிகளைக் கேட்டார்கள் என்றுதான் குறிப்பிட்டார்களே தவிர, கடனில் ரூ. 500 தள்ள வேண்டுமென்று அவர்கள் கூறவில்லை. அது சரியானதல்ல என்பதை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. உத்திராபதி அவர்கள் கோடிட்டுக் காட்டியது பற்றி எனக்கு இன்னும் தகவல் வரவில்லை. அப்படி வந்திருக்கும் என்றால், அதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கையை எடுப்பேன் என்பதை இங்கே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. உத்திராபதி பேசுகிற நேரத்தில், அதிகாரிகள் போகிற
நேரத்தில், போலீஸ் பட்டாளம் வாகனங்களோடு போகிறார்கள்
என்று சொன்னார்கள். நாங்கள் விவசாயிகளை மிரட்ட வேண்டு
மென்று போகவில்லை. எங்களை நாங்கள் காப்பாற்றிக்
கொள்ளத்தான் அழைத்துப் போகிறோமே தவிர, நிறைய
இடங்களிலே, எங்களுடைய அதிகாரிகள் அடி வாங்கி,
ஆஸ்பத்திரியிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அவர்
களுக்குக் கூடத் தெரியும். ஆகவே, எங்களை நாங்கள் காப்பாற்றிக்
கொள்ளத்தான் பந்தோபஸ்தாகப் போகிறோமே தவிர, நாங்கள்
போய் யாரையுமே மிரட்டவில்லை. காரணம் ஊருக்குள்ளே
போகிற நேரத்தில், 'இங்கே கடன் வசூல் செய்ய வரக் கூடாது,
வந்தால், உங்கள் உயிருக்கு நாங்கள் பாதுகாப்பில்லை' என்று
நிறைய இடங்களில் போர்ட் எழுதி வைத்திருக்கிறார்கள்.
அதிகாரிகள் உங்கள் வீட்டிலிருப்பவர்கள் தான்.
அடிந்தால், உங்கள் வீட்டிலே அடி வாங்குவதாகத்தான் அர்த்தமே
தவிர, எங்களுடைய ஆட்கள் கிடையாது நாங்கள் தற்காப்புக்
காகத்தான் அனுப்புகிறோமே ஒழிய, எங்களுடைய அதிகாரிகள்
போய், எங்குமே தகராறு செய்யாத அளவுக்கு நிச்சயமாக
நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்பதை இந்த நேரத்திலே
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தஞ்சாவூரைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், வெள்ளத்
தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம், கடன் வசூல் செய்யக்
கூடாது என்று சொன்னார்கள். வருவாய்த் துறையிலிருந்து அனா
வாரி சர்டிபிகேட் வருகிற நேரத்தில், குறுகியகாலக் கடனை,
மத்திய காலக் கடனாக்கிவிட எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது
என்ற காரணத்தால், அனாவாரி சர்டிபிகேட் வந்த உடனேயே
அதற்கு வேண்டிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம் என்ப
தையும் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

உரத்திற்கு அதிக விலை இருக்கிறது என்று சொன்னார்கள்.
விலையைக் குறைக்க நடவடிக்கை எடுப்போம்; அதிலிருந்து
பின்வாங்க மாட்டோம்; அதிக விலைக்கு விற்பவர்கள் மீது
கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் இலாப
கரமாக நடக்க தகுதி இல்லாதிருக்கிற சங்கங்களை இணைக்க
வேண்டாம் என்று சொன்னார்கள். அது நல்ல கருத்து. ஆனால்
'நபார்டு' என்ன சொல்கிறது என்றால் இலாபகரமாக ஒரு சங்கம்
நடைபெறவில்லை என்றால் பின்னால் நலிந்துவிடும்; அதனால்



அப்படிப்பட்ட சங்கங்களை இணைக்கவேண்டும்என்றுசொல்கிறது.
ஆகவே, அந்த இணைப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன.
அந்த நல்ல கருத்திலே இருக்கிற சாராம்சத்தை ஏற்று, அதற்கு
உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம்.

நிர்வாகக் குழுவில் இருக்கிறவர்களுக்கு
அதைப்போன்று பயிற்சி கொடுக்க வேண்டுமென்று
எல்லாம் கூட்டுறவு பற்றி சிறந்த ஏற்றுக் கொள்கிறேன். அதற்கான
சொன்னார்கள். அதை தெரிவித்துக்
முயற்சிகளை எடுக்கிறோம் என்பதை அவர்களுக்குத்
கொள்கிறேன்.

தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்
இங்கே கருத்துக்களைத் சொல்கிறேன். எங்களுடைய
களுக்கு எல்லாம் நான் மறுபடியும் முதலமைச்சர் புரட்சித்
அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு கூட்டுறவு அமைப்பு
தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் இருக்கிறோம்.
களுக்கு மிக வேகமாக தேர்தல்களை நடத்த அந்தத்
பஞ்சாயத்துத் தேர்தல் வராது என்று சொன்னார்கள்.
தேர்தல் வந்துவிட்டது. ஆகவே இது பற்றிய சந்தேகம்
வேண்டாம். இந்தத் தேர்தலையும் வேகமாக நடத்துவோம்
என்று சொல்லி, நீங்கள் எல்லாம் இந்த சட்ட முன்வடிவுக்கு
ஆதரவு தரவேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.
நன்றி. வணக்கம்.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் இருப்பிடத்தில்
இல்லாததால் அவர்களுடைய தீர்மானங்கள் பேரவையின் அனுமதி
யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாக கருதப்
பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:
"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள்
(தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986) ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று
நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (ஐ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

* 1986-ம் ஆண்டு சனவரி 27-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



## (ஒ) கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

*திரு. வி. பி. சிந்தன் : மன்றத்தின் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் மூலம் தொழிலாளர்களுக்குச் சான்றிதழ் பெறுவதற்கு சற்று வசதி கிடைக்கும் என்ற காரணத்தால் அந்தப் பகுதியை நான் ஆதரிக்கிறேன். ஆனால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய தொகையை வசூலித்துக் கொடுப்பதற்கு என்ன ஏற்பாடுகள் இருக்கின்றன என்பது பற்றிய எந்த விளக்கமும் அதில் இல்லை. உங்கள் மூலமாக நான் அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதெல்லாம் தொழிலாளர்கள் பெற வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் ஆண்டுக் கணக்கில் வசூலிக்கப்பட முடியாமல் போய்விடுகிற அவலநிலைமை இன்றைய தினம் தமிழ்கத்தில் உண்டு. கோர்ட் தீர்ப்புகளின் மூலமாகக் கிடைக்க வேண்டிய தொகையும், நிர்வாகத்தினிடமிருந்து தொழிலாளிகளுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய தொகையும் வசூலிக்கப்பட முடியாத நிலைமையில் இன்றைக்கு அவர்கள் தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அந்தத் தொகையினை வசூலிப்பதைப் பொறுத்தவரையில் விரைவில் தொழிலாளிகளுக்கு உதவுகின்ற வகையில் அதற்கு ஒரு கால அளவு நிர்ணயிப்பதற்கான திருத்தத்தையும் இந்தச் சட்டத்திருத்தத்தில் இணைத்து நிறைவேற்றினால் அது பெருமளவுக்கு உதவி அளிக்கும்.

நேரத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இன்னும் ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை நிர்ணயித்தபோதிலும் உரிய வகையில், அவர்கள் ஊதியத்தைப் பெறுவதற்கான எந்த வசதியும் இன்றைய தினம் நாட்டில் இல்லை. எனவே அதையும் இந்தச் சட்டத்தினுடைய உள்ளடக்கத்திலேயே கொண்டு வந்துவிட்டால் இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகளுக்கு இந்தச் சட்டமன்றம் நிறைவேற்றிய குறைந்த பட்சக் கூலி கிடைப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்பதைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் எடுத்துச் சொன்னது போல் நீண்ட நாட்களாக இருக்கிற ஒரு அனாமலி ஒரு முரண்பாடு இந்தச் சட்ட முன்வடிவால் போக்கப்

* 1986-ம் ஆண்டு சனவரி 20 ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பட்டிருக்கிறது. மற்றும் சில கருத்துக்களை எல்லாம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை அரசு எடுத்துக்கொண்டு அந்தக் குறைபாடுகளைப் போக்க முயற்சி எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி;

''1986 ஆம் ஆண்டு கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In the enacting formula, for "Thirty-sixth year", substitute "Thirty seventh year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''1986 ஆம் ஆண்டு கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1986), திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.



(ஓ) மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டக பொருட்கள் சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்ட முன் வடிவு, 1985

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1985) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

(பிற்பகல் 1–00)

திரு, பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையிலேயே ஒரு முறை நான் முழுமையாக ஆதரித்துப் பேசியிருக்கிறேன். ஆனால் இந்த மருந்துப் பொருட்கள் அடிக்கடி தொடர்ந்து, ஆஸ்பத்திரிகளில் திருடுப் போய்க்கொண்டே இருக்கிறது. ஆனால் சட்டத்தின் மூலமாக மட்டும் அதைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்ற நம்பிக்கை முழுமையாக இல்லை என்றாலும் கூட அதை முழுமையாக தடுப்பதற்குரிய வகையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்.

ஆஸ்பத்திரிகளில் ஒதுக்கக்கூடிய நிதிக்கு ஏற்ப மருந்துகள் என்னவோ சரியாக ஒதுக்கப்படுகிறது. ஆனால் மாதக் கடைசியில் இறுதி வாரத்தில் பார்த்தால், பெரும்பாலான ஆஸ்பத்திரிகளில் மருந்தே இல்லை என்ற நிலைமையை இன்னும் காண முடிகிறது. மருந்துகளை வெளியில் வாங்கிக் கொள்ளும்படி எழுதித் தருகிறார்கள். அந்த நிலை இருக்கக்கூடாது. ஒரு ஆஸ்பத்திரிக்கு ஒரு ஆண்டிற்கு 10 லட்சம் ரூபாய் மருந்திற்காக ஒதுக்கப்படுகிறது என்றால், அந்த ஆண்டு முழுவதும் எவ்வளவு நோயாளிகள் வருவார்கள், என்னென்ன வகையான மருந்துகள் தேவைப்படும், எதுஎது அவசரமாக ஸ்டாக்கில் இருக்கவேண்டும் என்பது போன்றவைகளை எல்லாம் ஆராய்ந்து கருதித்தான் சர்க்கார் அந்தத் தொகையை ஒதுக்குகிறாகர்ள். அந்த மருந்துகளும் ஒதுக்கப்படுகின்றன. அப்படி இருக்கையில் மருந்தே இல்லை என்ற நிலைமை வரவே கூடாது.

ஆகவே யார் திருடினாலும் சரி, அதை மிக எச்சரிக்கையோடு பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், சில ஊசி மருந்துகள் மாத்திரைகள் போன்றவையெல்லாம் மனிதனுடைய உயிர்களை பாதுகாக்கக் கூடியவை. 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் அதிகமான மருந்து வகைகள் மருத்துவத் துறையில் வராத காலத்தில், அல்லது விஞ்ஞான முறையில் மருத்துவம் சரியான முறையில் முன்னேறாத காலத்தில், கிராமப்புறங்களில் வெந்ததை தின்று விட்டு விதி வந்தால் செத்து விடுவோம் என்று

*1985-ம் ஆண்டு ஜூலை 19-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

குறைந்த வயதிலேயே செத்தவர்கள் இருந்தார்கள். அவ்வாறு தற்காலிக விஞ்ஞான யுகத்தில் இருக்கக்கூடாது. அதிகமாக வயதானாலும் கூட வாழவேண்டும் என்று மக்கள் விரும்பக்கூடிய இன்றைய சூழ்நிலையில் இப்படி மருந்துகள் திருடுப்போவதை தடுக்க முடியாத ஒரு நிலைமை இருக்கக் கூடாது. அதுவும் மருந்து கிடங்குகளிலேயிருந்து அனுப்பப்படுகிறபோதே அது குறைவாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது உண்மையோ அல்லது உண்மைக்கு புறம்பானதோ தெரியாது.

தஞ்சாவூர் மாவட்ட மருத்துவமனைக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மருந்துகளை இங்கேயிருந்து ஏற்றுகிறார்கள் என்று சொன்னால், இங்கேயே கிடங்கிலேயே அது குறைக்கப்பட்டுத்தான் அனுப்பப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அல்லது ஒரு பாக்கெட்டிற்கு 100 மாத்திரைகள் என்று சொன்னால் 80 மாத்திரைகளை மட்டும் வைத்து, 20 மாத்திரைகளை இங்கேயே எடுத்துவிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது சரியோ தவறோ தெரியாது அந்தத் துறையிலே இருக்கக்கூடியவர்களுக்குத்தான் அந்த உண்மை தெரியும். எந்த முறையில் செய்கிறார்கள் என்று தெரியாது. இப்படிப்பட்ட குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையிலேயே தேர்ச்சி பெற்றவர்கள். அந்தத் துறையின் அமைச்சராகவும் இருப்பவர். அவருக்கு அந்த உண்மை என்ன என்று தெரிந்திருக்கலாம். உதாரணமாக மன்னார்குடியில் மாவட்ட மருத்துவமனை இருப்பதை நாமெல்லாம் அறிவோம். அங்கே எங்களுடைய மாநாடு ஒன்றிற்காக சென்ற 23ஆம் தேதி நானும் இன்னும் சிலரும் சென்றபோது, வழியில் டிராக்டர் மோதி விட்டது. நான் 16 பேர்களை மன்னார்குடி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். அன்றைக்கு 23ஆம் தேதி. சேர்த்தவர்களில் அருணாசலம் என்பவருக்கு டெட்டனஸ் நோய் இருந்திருக்கிறது. அதற்காக அவருக்கு ஊசி போட்டிருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் 25ஆம் தேதி நான் போய் பார்த்தபோது அங்கே சரியான மருத்துவம் இல்லை என்று தெரிந்தது. அங்கே போய் டாக்டர் சௌந்திரராஜன் என்பவரைப் பார்த்துக் கேட்டேன். அவர் நிறைய உதவிகளைச் செய்தார். அவர் எலும்பு முறிவு பிரிவில் தேர்ச்சி பெற்றவர், அவர் வந்து பார்த்தார். ஊசி போட்டதாக இருக்கிறதே தவிர ஊசி போடப்படவே இல்லை என்பதைக் கண்டு பிடித்து பிறகு அவருக்கு எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் கூட, அவரை பாதுகாக்க முடியாமல் போய்விட்டது. அப்படி சில விலை உயர்ந்த மருந்துகளை 15 ரூபாய் 20 ரூபாய்க்கான மருந்துகளை எழுதிகொடுத்து விடுகிறார்கள். சாதாரண ஏழை விவசாயி மாதக் கடைசியில் எப்படி போய் எங்கே போய் வாங்குவான். அதனால் காலத்தில் மருந்து கிடைக்காத காரணத்தினால் உயிர் இழக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. மன்னார்குடி மருத்துவமனையில் கூட சில டாக்டர்கள் இப்படிப்பட்ட நிலையில் இருப்பதால், பாதுகாக்கப்பட வேண்டிய நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் சொல்லியும் கூட கவனக்குறைவு இருந்திருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகள் எங்கும் இருந்து வருகிறது.



ஆகவே சட்டத்தின் மூலமாக மட்டும் அல்லாமல் அங்கே பணியாற்றக் கூடியவர்களுக்கு இதுபோன்ற தவறுகளைச் செய்யாமல் இருக்கும் வகையில் பாதுகாப்பது எப்படி என்று பார்த்து, அந்த அளவிற்கு பாதுகாப்புகளைக் கொடுத்து, இப்படிப்பட்ட தவறுகள் எதிர்காலத்தில் நிகழாவண்ணம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். நான் குறிப்பிட்ட எந்த டாக்டர்களையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. காரணம் எல்லாத் துறைகளையும் விட, இந்தத் துறையில் பணியாற்றக் கூடியவர்கள் மக்களை நோயிலிருந்து, மரணத்திலிருந்து பாதுகாக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் மனத்தை நான் புண்படுத்த விரும்பவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளை நீக்கி, சட்டத்தினால் மட்டும் அல்லாது, அவர்களுடைய உள்ளத்தையே திருத்தும் வகையில் நடவடிக்கை எடுத்து இந்தச் சட்டத்தை சிறப்பான முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, அதற்கான வழி வகைகளை அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

திரு. கு. பாலன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை எங்கள் கட்சியின் சார்பாக நான் ஆதரிக்கிறேன். மருத்துவ மனைகளில் மருந்துகளும், பொருள்களும் அவ்வப்போது திருட்டுப் போவதை பத்திரிகைகளில் பார்க்கிறோம். அடிக்கடி இந்தப் பிரச்னை ஏற்படுவதால் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திருட்டை தடுக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இந்தச் சட்டமுன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள்.

முதல் முறையாக தவறு செய்பவர்களுக்கு ஒரு ஆண்டு சிறைத் தண்டனை, ஆயிரம் ரூபாய் அபராதம் என்றும், அடுத்தபடியாக குற்றம் செய்பவர்களுக்கு 3 ஆயிரம், 5 ஆயிரம் அபராதம் என்றும் சொல்கிறார்கள். எவ்வளவு தண்டனை விதித்தாலும், நமக்கு வேண்டியது பொருள்கள் திருட்டுப் போவதை தடுக்க வேண்டும் என்பது தான்.

பொது மருத்துவமனைகளுக்கு எங்களைப் போன்றவர்கள் அடிக்கடி செல்கிறோம். அங்கே டாக்டர்கள் கொடுக்கிற பிரிஸ்கிரிப்ஷனுக்கு தரமான மருந்துகள் கொடுக்கப்படுவதில்லை என்பது எங்களுடைய கருத்து. அதேபோல ஏழை எளியவர்களுக்கு கொடுக்கிற 'இன்சிடால்' போன்ற விலை குறைவான மருந்துகூட அங்கே கொடுக்கப்படுவதில்லை. இன்சிடால் மாத்திரை 10 பைசாவை விட விலைக் குறைவானது. அந்த மாத்திரையே மருத்துவமனைகளில் கிடைப்பதில்லையென்றால், ஏழை எளியவர்களுக்கு விலை உயர்வான மருந்துகள் எப்படி கிடைக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல மருந்துகள் மற்ற பொருள்கள் திருட்டு போயிருக்கிறது என்று தெரிந்தவுடன் காவல் துறைக்கு தகவல் கொடுக்கிறார்கள். இதனை விசாரிக்கிற பொறுப்பு சப்-இன்ஸ்பெக்டருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே இருக்கிற மனத்தாங்கல் காரணமாக இந்தக் குற்றத்தில் எப்படியாவது அவர்களை ஈடுபடுத்த வேண்டுமென்ற முறையில் ஒரு தவறான எண்ணத்தை வைத்துக்கொண்டு காவல் துறை அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆகவே பொருள்கள் திருட்டு போனது எப்படி நடந்திருக்கிறது என்பதை மேலதிகாரிகள் சரியாக ஆராய்ந்து, திருட்டை கண்டுபிடிப்பதற்கும் மேலும் திருட்டு நடக்காமல் இருப்பதற்கும் உரிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பொது மருத்துவமனைகளில் மருந்துகள் வைக்கப்படுவது வார்டுகளாக இருந்தாலும் மற்ற இடங்களாக இருந்தாலும் மற்றவர்கள் அவற்றை எளிதில் எடுக்கும் வகையில் வைக்கப்படுகின்றன. ஒரு மருந்து அல்லது ஊசி தேவைப்பட்டால் ஒரு வார்டில் இருப்பவர் இன்னொரு வார்டிலிருந்து எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே மருத்துவமனைகளில் வைக்கப்பட்டிருக்கும் மருந்துகளை மற்றவர்கள் எடுக்க முடியாத அளவிற்கு பாதுகாப்பாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நடவடிக்கையினால் இந்தத் திருட்டுகளை நாம் கட்டுப்படுத்த முடியும்.

அடுத்து ஆய்வாளர்கள் ஸ்டோர்களில் சரியாக மருந்துகள் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பார்க்கச் செல்லும் பொழுது அவர்களைத் தடுத்தால் கூட ஒரு ஆண்டு சிறைத் தண்டனை கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதுபோன்ற நிலையில் அந்தத் திருட்டுகளில் ஈடுபடுபவர்கள் மற்றவர்கள் மீது பழிபாவத்தை சுமத்தக் கூடிய நிலையில்லாமல், இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் அரசு கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று தெரிவித்து, இந்தச் சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. க. பாரமலை: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். இதற்கான காரண நோக்கத்தைப்பற்றி இங்கே சொல்லி இருக்கிறார்கள். அரசு நிறுவனங்களில் இருந்து மருந்துப் பொருள்கள் பல சந்தர்ப்பங்களில் திருட்டு போவது குறித்து அரசுக்கு தகவல் வந்திருப்பதால் தான் இப்படிப்பட்ட சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதென்று தெரிவிக்கிறார்கள்.





பொதுவாக அரசுப் பொருட்கள் களவாடப்படுகிறது என்று சொன்னால், ஏற்கனவே இருக்கிற குற்ற விதிகள் சட்டங்களே போதும், இருந்தாலும், இதில் இருக்கிற விசேஷ முக்கியத்துவத்தைக் கருதி. ஒரு தனிச் சட்டம் தேவை என்று அமைச்சர் அவர்கள் கருதியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையிலும் இது மிக மிக அவசியம் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–10)

குறிப்பாக விலையுயர்ந்த மருந்துகள், உயிர் பாதுகாப்பு மருந்துகள், இப்படிப்பட்ட மருந்துகள் எல்லாம் களவாடப்பட்டு பல தனியார்களுக்கு விற்கப்பட்டு, அவர்கள் அதை மிக அதிக விலைக்கு விற்று, கொள்ளை அடிக்கின்ற ஒரு மிகப் பெரிய சமூகக் கொடுமை நடந்து கொண்டு இருக்கிறது; ஆகவே இப்படிப்பட்ட திருட்டுகளை தடுப்பதற்கு, நிச்சயமாக இந்த மாதிரியான கடுமையான சட்டத்தைப் போடுவது மிக மிக அவசியம் என்று நான் கருதுகிறேன்.

இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துகின்றபோது இந்தச் சட்டத்திலே முதல் குற்றத்திற்கு மூன்று வருடங்கள் சிறை தண்டனையும், 3 ஆயிரம் ரூபாய் வரையில் அபராதமும் விதிக்கலாம் என்று ஒரு உச்சபட்ச தண்டனையை சொல்லிவிட்டு, குறைந்தபட்ச தண்டனை என்று, அதாவது வழக்கை நீதிமன்றத்திலே எடுத்துக் கொள்கிற நீதிபதி, தன்னுடைய இஷ்டானுசாரத்தை அனுசரித்து, மிகக் குறைந்த அளவிற்கு, தண்டனையை வழங்கி விடக்கூடாது என்பதற்காக, பாதுகாப்பாக, ஒரு வருடம் தண்டனை மற்றும் 1 ஆயிரம் ரூபாய் அபராதத்திற்குக் குறைவாக இருக்கக் கூடாது என்று சொல்லியிருப்பது மிக மிகப் பாராட்டுக்குரியது.

ஆனால் அதே நேரத்தில், இரண்டாவது அல்லது அதற்கு அடுத்து வருகின்ற குற்றங்களுக்கு, தண்டனை 7 ஆண்டுகள், வரையில் சிறையும், 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் என்று சொல்லிவிட்டு, அதற்குக் குறைந்த பட்ச தண்டனையாக, 2 வருடங்கள் சிறை மற்றும் 2,000 ரூபாய் அபராதமும் என்று சொல்லியிருப்பது பொருத்தமாக இராது. முதல் குற்றத்திற்கு எதை உச்சபட்ச தண்டனையாக வைத்திருக்கிறீர்களோ, அதை இந்த இரண்டாவது தண்டனைக்கு குறைந்த பட்ச தண்டனையாக ஆக்க வேண்டும் என்ற அந்த திருத்தத்தை நான் சொல்லிக் கொள்ள பிரியப்படுகிறேன்.

அடுத்து, இந்தக் குற்றத்தைக் கண்டு பிடிக்கிற, அல்லது குற்றம் நடைபெற்றதாக கருதப்படுகிற இடங்களில் சோதனை போடுகின்ற அதிகாரத்தை ஆய்வாளர்களுக்கு விட்டு இருக்கிறார்கள். குறிப்பாக லஞ்ச ஒழிப்பு இலாக்கா போன்றவற்றில் இருக்கிற அதிகாரிகள், அந்த துறையில் சோதனை

யிடுகிறபோது, அந்தத்துறை மட்டும் அல்லாது, அடுத்த துறையைச் சேர்ந்த இரண்டு பதிவு பெற்ற அதிகாரிகளை வைத்துக் சொண்டு, சோதனை செய்வது போல், இதற்கும் ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். முடிந்தால், இதையும் இதிலே இணைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்;

அடுத்து, இதிலே பிரிவு 4, உட்பிரிவு மூன்றில் "இருப்பைக் கைப்பற்றி அதுபற்றிய தகவலை கூடிய விரைவில் மாஜிஸ்ட்ரேட் ஒருவருக்குத் தெரியப்படுத்துவதோடு, அவற்றைப் பாதுகாப்பது குறித்து அவரிடமிருந்து உத்தரவு பெறவேண்டும்." என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கூடிய விரைவில் என்று சொல்வதைவிட, ஒரு குறிப்பிட்ட காலத்தில், 6 மணி நேரம், அல்லது 12 மணி நேரம். அல்லது அடுத்த அலுவல் நாள் என்ற வகையில், நாம் ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித் தால்தான் அங்கே தவறு செய்யாமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

குறிப்பாக 'ஆப்டர் தாட்' என்று சொல்வார்களே, அந்த அடிப்படையிலே இந்தக் குற்றத்தை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று சொல்வதற்கு ஏதுவாக இது இருக்கும் என்ற காரணத் தால் அதற்கு ஒரு காலத்தை சொல்லவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, இந்த மருந்து திருட்டைப் பொறுத்த வரையில் அதிலே முத்திரை யிடுவதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. நம்முடைய மருத்துவச் சாலைகளைப் பார்க்கும் போது, நம்முடைய அரசு மருந்துகளில் தமிழக அரசு த.அ. என்று இருக்கிறது. ஆனால் எல்லா மருந்துகளிலும், ஒரே விதமான முத்திரைகள் இருக்கும்போது, எந்த நோய்க்கு எந்த மாத்திரை என்று கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு இருக்கிறது. நானே ஒரு இடத்திலே இதனால் பாதிக்கப்பட்டு இருக்கிற காரணத்தினால், இந்தக் குறையைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், நம்முடைய அரசு மாத்திரைகளிலே முத்திரையிடுகிற போது, அந்த மருந்தினுடைய பெயரையும், ஏதாவது ஒரு வகையிலே அதிலே குறிப்பிட்டு செய்ய முடியுமா, என்பதையும், நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஏழாவது பிரிவில் ஒரு வாசகம் சொல்லப்பட்டு இருக்கிறது. 'குற்றம் செய்தவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக் கப்படுகின்ற போது, அல்லது, இச்சட்டத்தினை மீறி குற்றம் செய்ததாகச் சொல்லி குற்றச்சாட்டிவிருப்பவர் குற்றவாளி இல்லையென தீர்ப்பளித்து, விடுவிக்கப்படும்போது," என்று சொல்லியிருக்கிறார்கள். குற்றம் சாட்டப்பட்டு இருப்பவர் என்று சொல்லவேண்டுமே தவிர, குற்றம் சாட்டியிருப்பவர் என்று சொன்னால், அந்த பிராசிகியூசன் ஆபிசரே குற்றவாளி



இல்லை என்று தீர்ப்பு அளிக்கிறார் என்றுதான் பொருளாகும், ஆகவே இதை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை நான் முழு மனதோடு ஆதாரித்து அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே மூன்று உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தை ஆதரித்துப் பேசியிருப்பதற்காக நான் முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இந்தச் சட்டத்தை இங்கே அறிமுகப்படுத்துகிற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் பல நல்ல கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த கருத்துக்கள் நம்முடைய இலாக்காவில் பணி ஆற்று பவர்களுக்கு பயன் உள்ளதாக இருந்தது. இப்போது கூட மாண்புமிகு உறுப்பினர்கள் 3 பேர்கள் நல்ல கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். இந்த சட்டத்தை கொண்டு வந்ததன் நோக்கமே குறிப்பாக அரசினுடைய மருந்துகளை பலர் கையில் வைத்துக் கொண்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு ஒரு நல்ல சட்டம் வேண்டும் என்ற அடிப் படையில் தான் இதனை நாம் கொண்டு வந்து இருக்கிறோம். இதிலே நாம் பல்வேறு சந்தர்ப்பங்களைப் பார்க்கும் போது பல பெரிய மருத்துவ மனை இருக்கும். அந்த மருத்துவ மனையின் எதிரிலேயே ஒருவர் கடை வைத்துக் கோண்டு இருப்பார். உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே அங்கே ஒரு பகுதியிலே இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது. 11.1.83 அன்று நாம் அதை கைப்பற்றினோம். அந்த கேஸில் சரியான ஆயுதம் நம்மிடம் இல்லாத காரணத்தால் அந்த கேஸ் நமக்கு தோல்வியை தந்தது. அதே சமயத்தில் 31.1.83 அன்று Inspector of Police Madurai seized drugs from one person, நான் பெயரை சொல்ல வில்லை. In front of the Government Rajaji Hospital, Madurai these drugs beaiing the Hospital marks of the Government Hospital Madurai. Similarly on 23-6-78 at 5.30 p.m. the Deputy Superintendent of Narcotic Intelligence Bureau, seized 100 ampules from one person, Nanganallur என்று பல்வேறு வகையில் பல்வேறு நேரங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்ட பிறகு தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதற்கு ஒரு விரிவான சட்டத்தை நாம் ஏற்படுத்த வேண்டும் என்று 2.3.1978 அன்று உத்திர விட்டார்கள். அந்த உத்திரவின் அடிப்படையில் எல்லாவற்றையும் ஆராய்ந்து இப்போது சட்டமாக நாம் கொண்டு வந்து இருக்கிறோம். இதிலே நீங்கள் பார்த்தால் 3 சரத்துகளும் மிக தெளிவாக இருக்கிறது. Clause 5 Indemnity No such or other legal proceeding shall lie against the Government or any officer of the Government in respect of anything which is in good faith done or inthended to be done by or under this Act. ஒரு நல்ல எண்ணத்தில் அதிகாரிகள் செய்கிறார்கள். ஆனால் அந்த அதிகாரிகள் வேண்டும் என்றே செய்தார்கள் என்று அதிகாரிகள் மீது குற்றம் சாட்ட முடியாது என்ற வகையில், 6-வது சரத்தில்

Things liable to confiscation In any case in which an offence has been committed against this Act the drug or other stores in respect of which the offence has been committed, shall be confiscated to the Government. என்று இருக்கிறது.

7—வது சரத்தில் மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நானும் அதைப் பார்த்தேன். ஆங்கிலத்தில் போடப்பட்டு இருக்கிறது. When the offender is convicted or when the person changed with an offence against this Act is acquitted, but the court decides that anything is liable to confiscation, such confiscation may be ordered by the court. என்று தெளிவாக இருக்கிறது. இதை எல்லாம் நான் எதற்கு சொல்கிறேன் என்றால் மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் கருத்து கவனிக்கக் கூடிய கருத்தாக இருக்கிறது. இருந்தாலும் இங்கே தெளிவாக போடப்பட்டு இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் மன்னார்குடி பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை முழுமையாக ஏற்கனவே என்னிடத்தில் சொல்லி இருந்து இருப்பார்களானால் அதை நான் விசாரித்து அவர்களுக்கு முழுமையான உண்மைகளை எல்லாம் விளக்கிச் சொல்லியிருக்க முடியும். ஆனால் பிரச்சினை என்ன என்றால், டெட்டனஸ், இன்ஜெக்ஷன் போட்ட பிறகுகூட டெட்டனஸ் நோய் வந்து விடும். அதை போடுவதாலே நூற்றுக்கு நூறு Indemnity கிடையாது. பாதுகாப்பு என்று கிடையாது. By way of abundant precaution ஓரளவுக்கு பாதுகாப்புக்காக நாம் போடுகிறோம். டெட்டனஸ் இன்ஜெக்ஷன் தடுப்பு ஊசி போட்ட பிறகு கூட அந்த காயம்பட்ட உடனே அந்தக் கிருமிகள் உடனே உடம்பில் போய்விடும். ஆனால் அந்த இன்ஜெக்ஷன் போட்ட பிறகு கூட வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது ஓரளவுக்குத் தான் தடுக்கிறது. முழுமையாக தடுக்க வேண்டும் என்றால், active immunisation throughout பண்ணிக்கொண்டு இருந்தால் வருடத்திற்கு ஒரு முறை என்று வெளிநாட்டில் செய்வது போல அத்தனை முறை செய்ய வேண்டும். அது தான் active immunisation அப்படி செய்தால்தான் பாதுகாப்பாக இருக்கும். அந்த டாக்டர் எந்த நேரத்தில் எந்த வகையில் எந்த கான்டக்ஸ்ட்டில் சொன்னார் என்று தெரியாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதை நான் விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு சு. பாலன் அவர்கள் இன்சிடால் என்ற மாத்திரை கிடைக்கவில்லை, என்று சொன்னார்கள். இது இந்த சட்டத்திற்கு சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் கூட இன்சிடால் என்பது ஒரு Anti-Histamine



(பிற்பகல் 1-20)

என்ன ஆகிறது என்றால், ஒவ்வொரு கம்பெனியும் ஒரு மருந்துக்கு வேறு வேறு பெயரை போட்டு விற்கிறார்கள். நாம் எழுதுகின்ற நேரத்திலே கம்பெனி பெயர் எல்லாம் எழுத முடியாது. இப்போது ரஷ்யாவிலே ஜெனரிக் நேம்ஸ் என்று தான் எழுதுகிறார்கள். அது தான் இருக்க வேண்டும் என்று இங்கே ஒவ்வொரு கம்பெனியும் ஒவ்வொரு மாத்திரை போடுகிறது. இதே ஆண்டிசெப்டிக்கை எடுத்துக்கொண்டால், குளோர்பெனிராமைன் மாலியேட்டட் என்ற பெயரில் வேறொரு கம்பெனியிலே போடுகிறார்கள். அந்த கம்பெனியில் வந்ததற்குப் பிறகு அந்த டாக்டரை போய் பார்க்கிறார்கள். ஒவ்வொரு டாக்டரும் ஒவ்வொரு கம்பெனியின் மருந்துகளை எழுதுவது வழக்கம். அதுதான் வாடிக்கை. அந்த டாக்டர்கள் இன்சிடால் என்று எழுதியிருப்பார்கள். ஆனால் அதற்கு பதிலாக அவில் கொடுத்திருப்பார்கள். வேறு ஆண்டியிஸ்டாமைன் நிறைய இருக்கும். ஆகவே எல்லாவற்றிற்கும் ஆக்ஷன் ஒன்று தான். அகவே ஆண்டியிஸ்டாமைன் மருந்தே இல்லையென்றால் அதுகுற்றத்திற்கு உரியது, அவ்வாறு இருந்தால், அந்த விவரம் கொடுத்தால் அது கவனிக்கப்படும். நம்முடைய உறுப்பினர் மதிப்பிற்குரிய பாரமலை அவர்கள் தமிழ்நாடு அரசு என்பதற்கு த/அ என்று மாத்திரைகளில் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

நான் கிராமங்களுக்கு போய் அங்கேயுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள நோயாளிகளை போய்பார்க்கின்ற நேரத்திலே கூட அவர்கள் சில குறைகளைச் சொன்னார்கள். எல்லோருக்கும் ஒரே மருந்து, வெள்ளை நிறத்திலே த/அ என்று போட்டு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதிலே என்ன பிரச்சனை என்றால் ஏறத்தாழ 7, 8 மருந்துகள் ஆஸ்ப்பிரின் பேராசிட்டாமல், நோவால்ஜின் இதெல்லாம் All these medicines are white வெள்ளையாக இருக்கும் சில கம்பெனிகள் வெவ்வேறு கலரில் போடுகிறார்கள் நாம் கலர் போட வேண்டாம் என்று சொல்கிறோம். அது வேறு பிரச்சினையை உண்டாக்கும். Colouring agents are sometimes parsinogenic. ஆகவே கலர் போட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். எனவே வெள்ளையாகத்தான் இருக்கிறது. மாத்திரையை திருப்பி அதன் பின்னால் இன்னின்ன மாத்திரை என்று வேண்டுமானால் குறிக்கலாம். அதற்கு ஏறத்தாழ ரூ. 2 கோடி அல்லது ரூ. 3 கோடி செலவாகும். பேர் எழுதுவதற்கு மட்டும் அவ்வளவு செலவு நமக்கு தேவைதானா என்ற பிரச்சினை எழுகிறது. மாத்திரையில் நூற்றுக்கு நூறு என்ன பொருள் இருக்க வேண்டுமோ அந்தப் பொருள் இருந்தாக வேண்டும், அதற்கு ட்ரக் டெஸ்டிங் லேப் என்று வைத்திருக்கிறோம். நேற்று கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். மத்திய அரசாங்கம் நடத்துகின்ற ஒரு கம்பெனியிலே கூட ட்ரக் டெஸ்டிங் லேப் என்று வைக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம்.

அதனைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே நேரடியாக பாராட்டாக இல்லையென்றாலும் ஒரு கேள்வி மூலமாக எழுப்பினார். ஆகவே நாம் மத்திய அரசாங்கமா தனியார் துறையா என்று பார்க்காமல் எல்லா கம்பெனிகளும் மருந்து தயாரிக்கும் நேரத்திலே ட்ரக் டெஸ்டிங் ப்ராஸஸ் மூலமாக அந்த பரிட்சையிலே வென்றுதான் மருந்துகள் வெளிவே வர வேண்டும். It should pass the drug test from the laboratories என்ற வகையிலே நாம் உத்தரவு இட்டு இருக்கிறோம். அந்த வகையில் அப்போதைக்கப்போது ஒரு மருத்துவமனையிலிருந்து மருந்துகளை எடுத்து பரிசோதனை செய்வதற்காக அனுப்புகிறோம். இதனை உறுப்பினர்கள் எழுப்புகின்ற சந்தேகங்களுக்கு விடையாக சொல்கிறேன். ஒட்டுமொத்தமாக இதனை வரவேற்றதற்காக நன்றி செலுத்தி இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் ஏனைய பண்டகப் பொருட்கள், (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 48/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: 'பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In the short title of the Bill, *for* the figures '1985' *substitute* the figures '1986.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



முகப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

''In the enacting formula, *for* 'Thirty-sixth Year', *substitute* ''Thirty-seventh Year'.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள், ஏனைய பண்டகப் பொருட்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 48/1985), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற சில ஏடுகளுக்கான திருத்தங்கள்.

திரு. வி. பி. சிந்தன்: அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்:

(1) ''1981-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1981) வழிவகைகளிலிருந்து ஆவடி மத்திய வாகனங்கள் கிடங்கின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களுக்கு விலக்களிப்பது குறித்து, 24-4-1985 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான 4-4-1985 ஆம் தேதியிடப் பெற்ற தொழிலாளர் துறையின் 662 ஆம் அரசாணையில் வெளியாகி 9-1-1986 ஆம் தேதியன்று பேரவை முன் வைக்கப் பெற்ற அறிவிக்கை ரத்து செய்யப் பெற வேண்டும்''.

(2) ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1981) வழிவகைகளிலிருந்து தமிழ்நாடு தென்னக ரயில்வேயின் கட்டுப்பாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு விலக்களிப்பது குறித்து 24–4–1985 ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியான, 4-4-1985 ஆம் தேதியிட்டப்பெற்ற தொழிலாளர் துறையின் 663 ஆம் எண் அரசாணையில் வெளியாகி, 9-1-1986 ஆம் தேதியன்று பேரவை முன் வைக்கப் பெற்ற அறிவிக்கை ரத்து செய்யப் பெறவேண்டும்''.

இந்தப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் ஒரு சிறந்த சட்டமாக நான் கருதுவது: நீண்ட காலமாக நிரந்தரம் ஆக்கப்படாத தொழிலாளிகளுக்கு நிரந்தரம் அளிக்கக்கூடிய சட்டம் ஆகும். அந்தச் சட்டத்தை எதிர்த்து, ஆலை முதலாளிகள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, அதனுடைய ஒரு பகுதியை அடித்து விட்டார்கள். அப்போதும், அமைச்சரைச் சந்தித்து, உயர்நீதிமன்றத்தில் வாதாடி, அந்த தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியவர்களில் நானும் ஒருவன். சென்ற ஆண்டு, இந்த சட்ட மன்றத்திலேயும் அது வலியுறுத்திப் பேசப் பட்டது. மீண்டும் இந்தச் சட்டத்தை அரசு கொண்டு வந்ததற்கு நன்றி.

ஆனால், இப்போது அந்தச் சட்டத்தை நிறைவேற்றியதற்கு பிறகு, இரண்டு பகுதிகளுக்கு அந்தச்சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்கக்கூடிய ஒரு உத்தரவை அரசு பிறப்பித்து இருக்கிறது. அதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். சட்டம், ஆண்டிக்கும் அரசனுக்கும் ஒன்றுதான், சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமமே. இப்போது தனியார் துறையிலுள்ள தொழிலாளிகளை எத்தனை நாட்களுக்குள் நிரந்தரமாக்கலாம் என்று இந்தச் சட்டம் கூறுகிறது.

ஆனால், ரயில்வே, பாதுகாப்பு இலாகாவைச் சேர்ந்த ஹெவி வெஹிகிள் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளிகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்ற முறையில் இந்தத் திருத்தம் பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது? அவர்கள் என்ன குற்றம் செய்தார்களோ எனக்குத் தெரியாது. சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமமாக இருக்கவேண்டும்.

தொழில் வரி (புரொஃபஷனல் டாக்ஸ்) நம்முடைய சட்ட மன்றத்திலே நிறைவேற்றுகிற சட்டம், அது ரயில்வே தொழிலாளிகளுக்கும், தனியார் துறையிலே இருக்கும் தொழிலாளிகளுக்கும், எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத்தான் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, நிரந்தரம் ஆக்கவேண்டும் என்ற சட்டம் ஒரே சட்டமாக இருக்க வேண்டும். அதிலே விதிவிலக்கு கொடுக்கக்கூடாது. இப்போது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது.



ஆனால் நிச்சயமாக, மத்திய அரசின் நிர்ப்பந்தத்தின் காரணமாக தமிழக அரசு பலவற்றுக்கு ஒத்துக்கொள்கிறது. அந்தச் சண்டைக்கு நான் நிற்கவில்லை. இந்தப் பிரச்சினை ஒன்றிலாவது மத்திய அரசினுடைய நிர்ப்பந்தத்திற்கு உட்படாதீர்கள், ரயில்வே நிர்வாகமானாலும், ஹெவி வெஹிகில்ஸ் பாக்டரி நிர்வாகமானாலும் தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்குவதற்கு, தொழிலாளிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கிற இந்தச் சட்டத்திலிருந்தும் அவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், மத்திய அரசினுடைய நிர்ப்பந்தத்திற்கோ, கட்டாயத்திற்கோ, ஆணைகளுக்கோ கட்டுப்பட்டு இந்தத் திருத்தத்தை, இந்த விதிவிலக்கை அரசு அளிக்கவில்லை. ஆனால், தென்னக ரயில்வேயிலும், பாதுகாப்புத் துறையிலேயும் இருக்கிற தொழிலாளிகளுக்கு—இன்றைக்கு தற்காலிக தொழிலாளிகளாக இருக்கின்ற தொழிலாளிகளுக்கு ஒரு நிரந்தரத் தன்மை—எப்படி மாநிலத்திலே இருக்கிற தொழிலாளிகளுக்கு கொடுக்கிறோமோ, அதே போல ஒரு சமூக நீதியை அளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தான் இந்தத் திருத்தத்தை அரசு வழங்கி இருக்கிறது.

குறிப்பாக, ஏற்கனவே அவர்களுடைய நடைமுறையிலேயே, எப்படி தமிழ்நாட்டிலே இருக்கின்ற தொழிற்சாலைகளில், இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் தற்காலிகத் தொழிலாளிகளாகயிருந்தால் நிரந்தரத் தொழிலாளிகள் ஆக்கவேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறதோ, அப்படிப்பட்ட நடைமுறை அவர்களுடைய நிர்வாகத்திலேயும் இருக்கிறது. இன்றையதினம் 480 நாட்களுக்கு வேலை செய்திருந்தால், அவர்களுக்கு இந்தச் சட்டத்திலே பாதுகாப்பு இருக்கிறது, நடைமுறையிலே இருக்கிறது. அவர்கள் வரிசைப்படி எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்ற நிலவரம், பாதுகாப்பு, தென்னக ரயில்வேயினுடைய நிர்வாகத்திலேயும் இருக்கிறது. மத்திய அரசினுடைய பாதுகாப்புத் துறையினுடைய நிர்வாகத்திலேயும் இருக்கிறது என்று கண்டறிந்த பிறகு, அந்தத் தொழிலாளிகளுக்கு இரண்டு சட்டங்கள் இன்றைய தினம் அமல்படுத்த வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறபோது, மாநிலச் சட்டத்திலே இருந்து விடுவித்துக் கொண்டு, மத்திய அரசினுடைய அந்தச் சட்டமே செயல்படுத்த வேண்டும் என்ற அந்த நோக்கத்தோடுதான், தென்னக ரயில்வேயிலே பணியாற்றுகிற தொழிலாளிகளுக்கு பாதுகாப்பு இருக்கிறது. மைய அரசின் பாதுகாப்புத் துறையிலே இருக்கிற தொழிலாளிக்கும், இன்றைக்குத் தற்காலிக தொழிலாளி நிரந்தரமாக்கக்கூடிய பாதுகாப்பு—மாநில அரசிலே இருக்கின்ற தொழிலாளிக்கு இருப்பது போல—இருக்கின்றது என்ற காரணத்தினாலே தான், இரண்டு சட்டங்கள் தேவை இல்லை, ஒரு சட்டத்தின் பாதுகாப்பிலே இருக்க வேண்டும் என்று அந்த நோக்கத்தோடு

தான் செயல்படுகிறதே தவிர, நிர்பந்தம் காரணமாகவோ, அச்சம் காரணமாகவோ, பயம் காரணமாகவோ அல்ல. அதிலே உள்ள அனாமலிகளை, முரண்பாடுகளை, குறைபாடுகளைப் போக்குவதற்காகத்தானே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தச் சட்டத்தில் உள்ள பாதுகாப்பு அங்கே அவர்களுக்குள்ள எந்தச் சட்டத்தின் மூலமாகவும் கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்களுக்கு யாரோ தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விதிகள் அங்கே இல்லாத காரணத்தினால் 10; 15 ஆண்டுகள் அவர்கள் பணி புரிந்தாலும் கூட நிரந்தரமாக்க முடியாமல் போய்விடுகிறது. இது அவர்களுக்கு இழைக்கப்படுகிற அநீதியாகும். ஆகவே அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளைப் பரிசீலிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு.

திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

6. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) அரசினர் சட்டமுன்வடிவுகள் (மே.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகள் மேலவையில் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளன என்ற செய்தி மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

1. 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1986).
2. 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1986).



3. 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1986).
4. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1986).
5. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1986).
6. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1986).
7. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1986).

(இ) கவன ஈர்ப்புகளுக்கான அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவையின் விதி 55ன் கீழ் பல்வேறு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். சிலவற்றிற்கு பதில் அறிக்கைகள் பெறப்பட்டிருக்கின்றன. அவை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற உறுப்பினர்களுக்கும் அந்த அறிக்கைகள் வந்தவுடன் அவைகள் நாளையில் அனுப்பிவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(1) கவன ஈர்ப்புகள் — தொடர்ச்சி

(அ) நிலுவையிலுள்ள முன்னறிவிப்புகள் குறித்தும் மற்றவை குறித்தும்.

திரு. சோ. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நகர் தொகுதி அரும்பாக்கத்தில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு அங்கு வாழும் மக்கள் தேர்தலின் போது வாக்களிக்கமாட்டோம் என்று சொன்னதால் மாநகராட்சி அதிகாரிகள் உடனடியாக சுகாதாரப் பணிகளைச் செய்கிறோம் என்று எழுத்துமூலமாக உறுதிகூறியும் மழைநீர் தேங்கியதை வெளியேற்றாத காரணத்தினால் அந்தப் பகுதி மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்பட்டு காலரா நோய் முழுவதும் வரும் என்ற காரணத்தினால் அங்கே இருக்கிற 20 ஆயிரம் மக்களும் கடையடைப்புச் செய்து ஊர்வலமாக மாநகராட்சிக்கு வருவ

தாகத் துண்டறிக்கை மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அதற்கான முடிவை உடனடியாக எடுக்குமாறு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே இப்படிச் சில இடங்கள் இருப்பது தெரியும். இவைகளைப்பற்றி சீக்கிரத்தில் என்ன பரிகாரம் செய்ய முடியுமோ அந்தப் பரிகாரத்தைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதி அளிக்கிறேன். எந்த வொரு பகுதியாக இருந்தாலும், கட்சிப் பாகுபாடு இன்றி, உறுதியாக, சென்னை வாழ் மக்களுக்கு இதுபோன்ற தொல்லை களை நிவர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கையெடுக்கும் என்று நான் உறுதி அளிக்கிறேன். மேற்கொண்டு விவரத்தை இப்பொழுது என்னால் தர இயலவில்லை. இருந்தாலும் மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்ச்சிகளை மதித்து, அதற் கேற்ப ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ப. தீர்த்தராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இயற்கையின் சீற்றம் ஒரு பக்கம், தமிழகத்திலே இயற்கையின் ஏமாற்றம் இன்னொரு பக்கம் என்று இருந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே. ஆளுநர் உரையில் இயற்கை யின் சீற்றத்திற்கு மட்டும் இங்கே நடவடிக்கைகள் எடுப்பதாகவும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் எங்கள் மாவட்டத்தைப்போன்று மிக வறட்சியாக இருக்கின்ற இந்த மாவட்டங்களுக்கு ஆளுநர் உரையிலே எந்த விதமான நிதி ஒதுக்கீடோ மற்றவையோ இல்லை. கடுமையான குடிநீர்ப் பிரச்னை எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற காரணத்தாலே கிணற்றிலே இறைக்க முடியாத பம்புசெட்டு களுக்குக்கூட கரண்ட் சார்ஜ் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக் கின்ற காரணத்தினாலே, வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சு வதைப்போல இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தப்பட்ட அமைச்சர் இப்பொழுது இங்கு இல்லை. இதைப்பற்றி உறுப்பினரவர்கள் எழுதிக்கொடுத்தால், எல்லாவற்றிற்கும் பதில் வரப்போவதைப் போல, இதற்கும் அமைச்சரிடமிருந்து பதில் வந்தவுடன் அனுப்பி வைக்கப்படும்.

*திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் நல அமைச்சரிடமிருந்து ஒரு பதிலைக் கேட்டுதே இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம். 1,250 தொழிலாளிகள் வேலை செய்கிற பின்னி இன்ஜினியரிங் நிறுவனம் சென்னையிலிருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கைகள் வராததற்கு, பிறகு உங்களுக்குப் பதில் தரப்படும். இப்பொழுது அமைச்சரிட மிருந்து ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அதைக் கேளுங்கள்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவரவர்களே, அந்த நிறுவனம் சர்க்கரை ஆலைகளுக்கும், சிமெண்ட் ஆலைகளுக்கும், ரைஸ் மில் ஆலைகளுக்கும் உள்ள இயந்திரங்களைத் தயாரிக்கின்ற தமிழகத்தினுடைய சிறப்புக்குரிய ஒரு பெரிய தொழிற்சாலை. அது—பிப்ரவரி 28-ஆம் தேதி மூடப்படும் என்று பின்னி ஆலை அதிபர்கள் அரசினுடைய அனுமதி இல்லாமலேயே நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். அதில் அரசு என்ன நடவடிக்கை எடுக்க விருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். இதுகுறித்து நான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு நிறுவனம் அரசினுடைய அனுமதியின்றி மூட முடியாது. மூடுவதற்குரிய காரணத்தை அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அதனைத் தொழிலாளர் நலத் துறை ஆணை யாளர், இரண்டு தரப்பாரையும், தொழிற்சங்கத்தை நடத்து கின்ற மாண்புமிகு சிந்தனைப் போன்றவர்களையும், மற்றும் நிர்வாகத்தையும் அழைத்து இன்றைக்கு அதையொரு தொழில் தாவாவாக எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்து வருகிறார்கள். விரைவிலே தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் முடிவு கூறு வார்கள். பிறகு அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும். குறிப் பாக இன்றைக்கு ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்த விரும்பு கிறேன். தொழிலாளர் நலனும் பாதிக்கப்படாமல், தொழில் நலனும் பாதிக்கப்படாமல், இப்படி இரண்டு நலன்களும் பாதிக் கப்படாமல் காப்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு. வின் ஆல் என்பதுதான் எங்களுடைய ஆட்டிட்யூட்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை மறுதினம் 31-ஆம் தேதியன்று பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் என்னுடைய தொகுதியான திருவையாறு தொகுதிக்கு வரவிருக்கிறார்கள். ஆனால் அந்த நேரத்தில் தஞ்சையிலேயிருந்து எனக்குக் கிடைத்திருக்கின்ற செய்தி. நாசவேலைக்காரர்கள் அவர் செல்கின்ற திருவையாறு பகுதியிலே இருக்கின்ற காவிரியாற்றினுடைய பாலத்தை, கீழே வெடிகுண்டு வைத்ததாகவும், ஒரு வெடிகுண்டு வெடித்து ஒரு சுவர் இடிந்து வீழ்ந்ததாகவும் அந்த இடங்களிலே சோதனை நடத்திக்கொண்டிருப்பதாகவும் இப்பொழுது செய்தி கிடைத் திருக்கிறது. அதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை.

5. உறுப்பினர் தீர்மானங்கள் — தொடர்ச்சி.

(ஆ) பேரவை ஒத்திவைக்கப்பெறுதல்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

> "பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இந்நாளுடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 1-39 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படியான விதிகளும், ஆணைகளும்.

126. தமிழ்நாடு 1985—ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்ட தீர்ப்பாய விதிகளை வகுப்பது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 8-8-1985—ஆம் நாளிட்ட 765—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

127. 1982—ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலின் முதல் நிலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 20-6-1985—ஆம் நாளிட்ட 645—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1982—ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

128. 1981—ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலின் முதல் நிலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 20-6-1985 ஆம் நாளிட்ட 646—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1981—ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].



129. 1981—ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலின் முதல் நிலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 20-6-1985 ஆம் நாளிட்ட 647—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951—ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 65 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

130. 1984—ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்ட இணைப்புப் பட்டியலின் முதல் நிலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 3-7-1985 ஆம் நாளிட்ட 648—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984—ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

131. 1984—ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் எஞ்சியுள்ள பிரிவுகளை அமலுக்குக் கொண்டு வருவது குறித்து கல்வித் துறையின் 25-6-1985—ஆம் நாளிட்ட 659—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984—ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

132. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு கல்விக் குழு அமைப்பது குறித்து கல்வித் துறையின் 24-7-1985 ஆம் நாளிட்ட 34683/NU2/85—2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

133. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு நிர்வாகக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 24-7-1985—ஆம் நாளிட்ட 41714/NU2/85—2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1983—ஆம் ஆண்டு அன்னை தெரசா பல்கலைக்கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

134. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு கல்விக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 19-8-1985—ஆம் நாளிட்ட 41713/NU2/85—2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984—ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1981) 51 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

135. கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு கல்விக் குழுவினை அமைப்பது குறித்து கல்வித் துறையின் 3-10-1985—ஆம் நாளிட்ட 94615/NU2/85-2 ஆம் நாளிட்ட கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

136. காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத் திற்கு முதல் துணை வேந்தராக டாக்டர் திருமதி ராதா தியாகராஜன் அவர்களை நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 13-6-1985—ஆம் நாளிட்ட 617—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1985—ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

137. காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தின் முதல் பதிவாளராக திரு. ஜி. சங்கரராஜுலு அவர்களை நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 2-7-1985—ஆம் நாளிட்ட 690—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1985—ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

138. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1978—79 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை [1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

139. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1979—80 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

140. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1980—81 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை [1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

141. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

142. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1982—83 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].





143. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ). அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

57. 1981—82—ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) கல்வித் துறை தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் (1985—86) பதினாறாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

58. 1980—81—ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் (1985—86) பதினேழாவது அறிக்கை.

59. தமிழ்நாடு அரசின் 1965—66, 1970—71 மற்றும் 1971—72—ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது பொதுப் பணித் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் (1985—86) பதினெட்டாவது அறிக்கை. (தமிழ்)

60. இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் 1981—82 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கு துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1985—86) இருபதாவது அறிக்கை. (தமிழ்)

61. 1972—73 முதல் 1975—76—ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1980—81) அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் (1985—86) இருபத்தொன்றாவது அறிக்கை. (தமிழ்)

62. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974—75 மற்றும் 1975—76—ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1980—81) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் (1985—86) இருபத்தி இரண்டாவது அறிக்கை. (தமிழ்).

139448

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.